# சாரம்

இதழ் : 02 | 25 ஜனவரி 2023 | ஹிஜ்ரி 1444



## “இலங்கையின் தற்கால நெருக்கடி நிலையும் அது இலங்கை மக்கள் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களும்.”

சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் 22/2023
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

# சாளரம்

## ஆசிரியர்

சாளரம் சஞ்சிகைக்குழு
சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம்.

## பதிப்புரிமை

சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம்.
இஸ்லாமியக் கற்கைகள்
மற்றும் அறபு மொழிப் பீடம்,
இலங்கை தென் கிழக்குப்
பல்கலைக்கழகம்.

## வெளியீடு

சாளரம்
வெளியீட்டுக் குழு,
சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம் 22/2023

## கணினி வடிவமைப்பு

அகீப் நஸீர்

## பக்கங்கள்

80

**இஸ்லாமியக் கற்கைகள் மற்றும்
அறபு மொழிப் பீட சமூக ஆய்வுகளுக்கான
மாணவர் ஆய்வு மன்றம் 22/2023**

## பெரும்பொருளாளர்

பேராசிரியர்
எஸ். எம். எம். மஸாஹிர்
பீடாதிபதி,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும்
அறபு மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்குப்
பல்கலைக்கழகம்.

## ஆலோசனைக்குழு

எம். சி. எஸ். சாதிபா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும்
அறபு மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்குப்
பல்கலைக்கழகம்.

எம். வை. எம். சுஹீறா
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும்
அறபு மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்குப்
பல்கலைக்கழகம்.

எப். எச். ஏ. ஷிப்லி
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும்
அறபு மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்குப்
பல்கலைக்கழகம்.

எம். ரீ. ஹபீபுள்ளாஹ்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு
மொழிப்பீடம்
இலங்கை தென்கிழக்குப்
பல்கலைக்கழகம்.

# சாளரம்


## பிரதம ஆசிரியர்

M.S.F. FAHMITHA

## இணையாசிரியர்

AKEEF NASOOR
NOOR SHAHIDHA

## ஆசிரியர் குழு

M.J.H.M Mushthaq
M.S.F. Nuska
R.F. Asla
B.F. Aakila
M.R.Z. Zuha
M.I.F. Farhana
R.F Rifana
M.H.F. Husna
I.F. Shakira
R.M. Zainab
A.H. Fathima
A.K.F. Nusha

## நிர்வாகக் குழு

M.R.M. ZAKEEB (PRESIDENT)
M.S.F. JUHI (VICE PRESIDENT)
R.M. JIFFRY (SECRETARY)
M.F.S. SIMRA (CO. SECRETARY)
A.R.M. ANAS (TREASURER)
AKEEF NASOOR (EDITOR)
M.M.F. SHAFIYA (CO EDITOR)
F.M. FAINAS (ASST EDITOR)

Y.F. RUKSHANA (SECRETARY OF RESEARCH)
M.S.F. FAHMITHA (SECRETARY OF PUBLICATION)
M.M.M. MUNSHIF (SECRETARY OF TRANSLATION)
M.N.F. HALIDHA (SECRETARY OF INNOVATION)
A.M. AFRA (SECRETARY OF COMMON)
H.F. SHARMI (SECRETARY OF HISTORY GROUP)
S. SANSHITHA (MEMBER)
AM. AMAN (MEMBER)
S.M. SAJEETH (MEMBER)



**SAALARAM EDITORIAL BOARD**
STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES,
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE,
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA,
UNIVERSITY PARK, OLUVIL. #32360.


சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம்.

STUDENTS' RESEARCH FORUM FOR SOCIAL RESEARCHES FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE.

## MISSION

“ தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அறிவு பூர்வமாக சிந்திக்கக் கூடிய புத்தாக்க திறன்மிக்க சிறந்த ஆய்வாளர்களை உருவாக்குதல். ”

## VISION

“ நமது நாட்டில் சிறந்த தரமான ஆய்வுகளுக்கான மையமாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஆய்வு மன்றம் தொழிற்படல். ”

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA.


SRFSEUSL
srfseusl@gmail.com
SRFSEUSL
www.seu.ac.lk/fia/srf/

| | | |
|---|---|---|
| 01 | இலங்கையின் பொருளாதார நெருக்கடி பற்றி ஓர் ஆய்வு | பக்கம் 14 |
| 02 | இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் மக்களின் வாழ்வாதார போராட்டங்களும் | பக்கம் 19 |
| 03 | இலங்கையின் தற்கால நிலையும் அது இலங்கை மக்கள் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களும் | பக்கம் 22 |
| 04 | இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி | பக்கம் 26 |
| 05 | இலங்கை பற்றிய ஓர் கண்ணோட்டம் | பக்கம் 28 |
| 06 | இலங்கையின் தற்கால நிலை | பக்கம் 33 |
| 07 | இலங்கை பொருளாதார ரீதியான ஓர் கண்ணோட்டம் | பக்கம் 45 |
| 08 | தற்காலத்தில் இலங்கை வாழ் மக்கள் எதிர்நோக்கிவரும் சமூகப் பிரச்சினைகள் | பக்கம் 51 |
| 09 | CURRENT ECONOMIC CRISIS AND ITS IMPACT | பக்கம் 71 |
| 10 | ලංකාවේ ආර්ථික අර්බුදය හමුවේ ප්‍රජාතන්ත්‍රවාදී ජනතාව | பக்கம் 75 |
| 11 | الأزمة الحالية في سريلانكا وتأثيرها على المجتمع | பக்கம் 78 |



S.M.F. SAMLA 3RD YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

# பொருளாதார நெருக்கடி காரணமாக கல்வித் துறையினரிடம் காணப்படும் உளவியல் ரீதியிலான பிரச்சினைகளும்

## அதனை தீர்ப்பதற்கான வழிமுறைகளும்

மனிதன் சமூக, பொருளாதார, உடலியல், உளவியல் மற்றும் அரசியல் ரீதியாக பல்வேறுபட்ட தேவைகளை உடையவனாகக் காணப்படுகின்றான். அந்தவகையில் மனிதனுக்கு அத்தியவசியமான அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் அனைத்தையும் பெற்றுக் கொள்ள வருமானம் தேவையுடையதாகும். இந்த வருமானத்தைப் பெற்றுக்கொள்ள ஒரு தொழில் அத்தியவசியமானதாகும். இந்த நோக்கத்தை நோக்கியே மனித சமூதாயம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த அடிப்படையின் ஒரு அங்கமாகத் தான் 'கல்வித்துறையினரும்' காணப்படுகின்றனர். அந்தவகையில் இன்றைய காலகட்டத்தை பொறுத்தவரையில் வாழ்க்கைச் செலவு வீதமும் பொருளாதார நெருக்கடியும் அதிகர்த்துக் கொண்டு வருகின்றது. வேலையின்மை, திவால்நிலை, மனச்சோர்வு, நாட்டின் வாழ்க்கைத் தரத்தின் கூர்மையான வீழ்ச்சி போன்ற எதிர்மறை நிகழ்வுகள் 'பொருளாதார நெருக்கடி' என்ற கருத்துடன் உறுதியாக தொடர்புடையவை ஆகும். அத்துடன் "ஒரு நாட்டின் பொருளாதாரம் ஒரு நிதி நெருக்கடியால் திடீரென வீழ்ச்சியை அனுபவிக்கும் சூழ்நிலை" பொருளாதார நெருக்கடி என்ற நிலையை தோற்றுவிக்கின்றது. பொருளாதார சூழ்நிலையில் ஏற்பட்ட கடுமையான மாற்றங்களால் இந்த நெருக்கடி ஏற்படுகிறது. மேலும் அதன் நீடித்த தொடர்ச்சியானது பீதி மற்றும் பிற உளவியல் காரணிகளுக்கு வழிவகுக்கின்றது.. இதன் விளைவாக மக்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்படுகின்றது.

மேலும், இத்தகைய நிலவரமானது பொருளாதார நெருக்கடி (economic crisis) என்பதிலிருந்து மனிதவாழ்க்கை நெருக்கடி (humanitarian crisis) என்ற நிலையை எட்டி வந்துள்ளது. பொருளாதார நெருக்கடியின் தொடக்கமானது நாட்டின் சாதாரண பொருளாதார நடவடிக்கைகளில் முறையான மற்றும் மீளமுடியாத இடையுறுகளுடன் தொடர்புடையதாகும். அதே நேரத்தில், சரியான நேரத்தில் செலுத்த முடியாத உள் மற்றும் வெளி கடன்களின் குவிப்பும் காணப்படும். அத்துடன் வழங்கல் மற்றும்

தேவைக்கு இடையிலான கடுமையான முரண்பாட்டின் விளைவாக சந்தை ஏற்றத்தாழ்வும் ஏற்படுகின்றது. அந்தவகையில், 'நெருக்கடி' என்ற சொல் கிரேக்க வம்சாவளியைச் சேர்ந்த சொல்லாகும். மேலும் இதன் உண்மையான பொருள் 'திருப்புமுனை' என்பதாகும். அந்த அடிப்படையில் இந்த பொருளாதார நெருக்கடியானது ஒரு குறிப்பிட்ட தொழில் அல்லது பிராந்தியத்திலும், நாடு முழுவதும் ஏற்படலாம். துரதிஷ்டவசமாக நெருக்கடி ஆரம்பத்தில் பொருளாதார சுழற்சியின் கட்டங்களில் ஒன்றாகக் காணப்படும். ஏனெனில் பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்திக்கும், கரைப்பான் மக்களின் நுகர்வோர் திறனுக்கும் இடையில் திரட்டப்பட்ட முரண்பாடுகள் ஒரு வடிவத்தில் உடைந்து போகும் ஒரு தருணம் ஏற்பட்டு வேலையின்மை அதிகரிப்பு, திவால் நிலைகள், ˙ உணவுப் பொருள், எரிபொருள், அத்தியவசிய மருந்துகள் என அனைத்து நுகர்பொருள்களுக்கும் தட்டுப்பாடு, பயங்கரமான உணவுப்பொருள் விலையேற்றம், மருத்துமனைகள் இயக்கம் நிறுத்தம், முதலீடுகள் முடக்கம் மற்றும் ஊதியங்கள் குறைதல் போன்ற பல பாதக நிலைமைகள் ஏற்படுகின்றன. இத்தகைய பாதக நிலைமைகள் பொதுவாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தொழில்களில் தொடங்கி பின்னர் முழு பொருளாதாரத்திற்கும் பரவுகின்றது.

"இந்த அடிப்படையிலேயே இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது 2019ஆம் ஆண்டு தொடக்கம் ஏற்பட்டு வருகின்ற நெருக்கடியாகும். 1948இல் விடுதலை பெற்ற பின்னர் நாட்டில் ஏற்பட்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடி இதுவாகும். 2010ஆம் ஆண்டிலிருந்து, இலங்கையின் வெளிநாட்டுக் கடன் கடுமையாக உயர்ந்தது. 2019இல் அது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 88வீதத்தை எட்டியது. கோவிட்-19 பெருந்தொற்றால் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார மந்தநிலையின் தொடக்கமானது நெருக்கடியை விரைவுபடுத்தியது. மேலும் 2021ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 101வீதமாக உயர்ந்தது. இதனால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் 2022 இலங்கைப் போராட்டங்களுக்கு வழிவகுத்தது" (அருளரசன்,2022). இலங்கைவாழ் பிரஜை என்ற ரீதியில் இவற்றின் தாக்கங்களையே நாம் இன்று அனுபவரீதியாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இத்தகைய தாக்கங்கள் நாட்டின் அனைத்துத் துறையினரையும் உடல், உள மற்றும் சமூக ரீதியாகவும் பாதித்துள்ளன. இப்பாதிப்பிற்கு கல்வித்துறை விதிவிலக்கல்ல.

அந்தவகையில், 'கல்வித்துறையினரையும்' இப்பொருளாதார நெருக்கடி மிக மோசமாகப் பாதித்துள்ளது. அந்த அடிப்படையில், கல்வி என்பது மனிதனை மதிப்புடன் வளர்க்க உதவும் ஒரு சமூக அமைப்பு ஆகும். கல்வி என்ற தமிழ்ச் சொல் 'கல்'(ஆய்வு செய்) என்ற வேர்ச் சொல்லில் இருந்து வருகின்றது. கல்வி என்ற சொல்லிற்கான ஆங்கிலச் சொல் Education என்பதாகும். இந்தச் சொல் educatio என்ற இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இந்த education சொல்லானது வளர்த்தல் என்ற பொருளைக் குறிக்கிறது. மேலும் இது கற்பித்தல், பயிற்றுவித்தல் என்னும் பொருளைத் தரும் educo என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டது. இந்தச் சொல்லிற்கு ஒத்த சொல் 'வெளிக்கொணரல், உயர்த்திவிடல், முன்னேற்றிவிடல்' போன்ற பொருளைத் தரும் educo என்பதாகும். எனவே கல்வி என்பது 'தகுந்த சூழ்நிலையை உருவாக்கி மனிதர்களை உள்ளார்ந்த தகுதிகளை வெளியில் கொண்டு வருவது ஆகும்.' பண்டைய காலங்களில் மக்கள் ஒருவருக்கொருவர் பார்த்துப் பழகியும் பேச்சு வழக்கிழும் கதைகள் சொல்லியும் மற்றும் அவற்றை கேட்டும் அறிவை வளர்த்துக் கொண்டனர். இந்தப் பிண்ணனியில் இருந்து படிப்படியாக கல்வியானது பரிணாம வளர்ச்சியடைந்து தற்காலத்தில் 'முறைசார்ந்த கல்வி , முறைசாராக் கல்வி' என இரு வகைப் பிரிவுகளாக உள்ளன. இவற்றிற்கு மேலதிகமாக 'மாற்றுக் கல்வி முறை, தொல்குடி சார்ந்த கல்வி முறை' என்பனவையும் காணப்படுகின்றன.

சமூகத்தில் ஓர் ஆற்றல்மிக்க உறுப்பினராக விளங்கவேண்டுமானால் சமூக மதிப்புகள், குறிக்கோள்கள், நம்பிக்கை, விருப்பங்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் பண்பாடு போன்றவற்றை விதைக்க வேண்டும். அதாவது மனிதன் ஒரு கவிஞனாகவோ, தத்துவமேதையாகவோ, ஒரு நல்ல ஆசிரியராகவோ, ஒரு திறமைவாய்ந்த மனிதனாகவோ வளர்க்க கல்வி மிகவும் அவசியமாகும். எனவே, ஒரு சிறந்த சூழ்நிலையை உருவாக்க உடல், உள்ளம், மனவெழுச்சி, சமூக சிந்தனை ஆகிய சிந்தனைகள் வளர கல்வி அத்தியவசியமாகும்.ஒரு தனிமனிதனின் திறமைகள், அவன் சமுதாயப் பண்பாட்டுச்சூழ்நிலைக்கு ஏற்றவாறு உலகில் பங்களிப்பை செய்ய கல்வி துணைபுரிகின்றது. அந்த அடிப்படையில் 'கல்வித்துறை (Education Sector)' என்றால் என்ன என்பதனை எடுத்துநோக்குமிடத்து "கல்வித்துறை என்பது கல்வியுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களைக் குறிக்கின்றதாகும்." அதாவது, இதில் அரசாங்கத்தின் கல்வித்துறை, கல்வி அதிகாரிகள், பயிற்சி நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் மாணவர்கள் ஆகியன அடங்கும். இதன் முதல் நோக்கம் இளைஞர்களுக்கும் குழந்தைகளுக்கும் கல்வி அறிவைக் கொடுப்பதாகும். இங்கு பாடத்திட்டங்களை உருவாக்குவோர், கல்விக்கூடங்களை நடத்த தலைமை ஆசிரியர்கள், துணைவேந்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றோர் பலரின் துணைகொண்டு கல்வி அறிவைச் சமுதாயத்திற்குக் கொடுக்கும் பணி நடைபெறுகின்றது.

அந்தவகையில், கல்வித்துறையினரை இப்பொருளாதார நெருக்கடியானது உளவியல் ரீதியாக பாதித்துள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். உளவியல் ரீதியிலான பிரச்சினைகள் என்பது "எண்ணம், உணர்ச்சி மற்றும் நடத்தை ஆகியவற்றின் செயலிழந்த வடிவமாகும்." இத்தகைய உளவியல் ரீதியிலான பிரச்சினைகள் மனிதனுக்கு துயரத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் இத்தகைய உளவியல் பிரச்சினைகள் குறிப்பிட்ட நபரின் கலாச்சாரம் அல்லது சமூகத்தில் மாறுபட்டதான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இத்தகைய உளவியல் பிரச்சினைகள் உயிரியல் (இயற்கை) மற்றும் சுற்றுச்சூழல் (வளர்ப்பு) தாக்கங்களைக் கொண்டுள்ளன. இத்தகைய தாக்கங்கள் உயிர், உளவியல், சமூக மாதிரியில் பிரதிபலிக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். பொருளாதார நெருக்கடி காரணமாக கல்வித்துறையினர், மனச்சோர்வு (Depression), பதற்றம் (Tension), பிந்தைய மன உளைச்சல் சீர்கேடு (Post-traumatic stress disorder), தூக்கமின்மை (Insomnia), பொதுவான கவலைக் கோளாறுகள் (Generalised anxiety disorder), சமூக விலகல் (Social withdrawa), பீதி நோய்(Panic disorder), உடல் உபாதைகள் (Physical ailments), தாழ்வு மனப்பான்மை, சகிப்புத்தன்மையின்மை, எதிலும் நாட்டமின்மை, Eating Disorder, Obsessive-compulsive disorder, மனஅழுத்தம் (Stress), பய மற்றும் முரண்பாட்டு உணர்வு போன்ற பல உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அந்தவகையில், மனச்சோர்வு என்பது உலகெங்கும் உள்ள பொதுவான பிரச்சினைகளில் ஒன்றாகும். பண்டைய காலங்களில் மனச்சோர்வு 'மெலன்கொலியா' என்று அழைக்கப்பட்டது. மேலும் 'மனச்சோர்வானது' எல்லோருக்கும் தெரிந்த ஒரு மனநல பிரச்சினையாக இருக்கவில்லை. கடந்த சில தசாப்தங்களாக மனச்சோர்வு அதிகரித்துள்ளது.மேலும் மனச்சோர்வு உலகம் முழுவதும் 100 மில்லியன் மக்களை பாதிக்கும் ஒரு பொதுவான மற்றும் இயலாமைச் சார்ந்த நோய் ஆகும். மனச்சோர்வு மக்களின் உடல் ஆரோக்கியத்தின் மேல் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும். அத்துடன் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை குறைக்கவும் செய்யவும். இதிலும் குறிப்பாக தற்காலத்தில் உலகம் எதிர் கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக குறிப்பாக கல்வித் துறையினர் இம்மனச்சோர்வினால் அதிகளவில்

பாதிப்படைந்துள்ளனர். இம்மனச்சோர்வினால் பொழுதுபோக்குகளில் ஆர்வம் இழப்பு, வாழ்க்கை நடவடிக்கைகளில் ஆர்வம் இழப்பு, நெருங்கிய குடும்ப உறுப்பினர்களோடு கூட தொடர்பு குறைவு, கவனம் செலுத்துவதில் சிரமம், தொடர்ந்து ஒரு வேலையை செய்யவோ அல்லது முடிக்கவோ தடுமாற்றம், தனிமையை விரும்புதல், விடயங்களை நினைவு கூர்வதில் சிரமம், தூங்குவதில் சிரமம் அல்லது அதிகமான தூக்கம், ஆற்றல் குறைவு, விடாத சோர்வு, குறைவான பேச்சு, மெதுவாக பேசுதல், பசியிழப்பு, அதிகமான தூக்கம், திடீரென எடை இழப்பு (இது ஒரு உணவு உண்ணும் அறிகுறியாகும்.), தலைவலி, குறிப்பிட்ட உடல் ரீதியான காரணமின்றி செரிமான பிரச்சினை, சதை பிடிப்பு அல்லது உடல் வலிகள், நிரந்தரமான சோகம், அதிகப்படியான குற்ற உணர்வு மற்றும் பதற்றம் போன்ற அசௌகரியமான நிலைமைகள் ஏற்படுகின்றன. அத்துடன் பொருளாதார நெருக்கடியால் கல்வித்துறையினர் எதிர் நோக்குகின்ற பிறிதொரு உளவியல் ரீதியான பிரச்சினையாக மனஅழுத்தம் (Stress) காணப்படுகின்றது.

அந்தவகையில், நோய்களை உண்டாக்கக்கூடிய உடல் அல்லது மன ரீதியான பதட்டம் அளிக்கும் எந்தவொரு உடலியல், இரசாயண அல்லது மனவியல் காரணிகளை மனஅழுத்தம் எனக் கருதலாம். மனஅழுத்தத்தை பலர் மன நோயுடன் ஒப்பிட்டாலும், விஞ்ஞானிகளும் மருத்துவர்களும் இதை உடல் ரீதியான செயல்பாடு மற்றும் சமநிலையில் குறைபாடுகளை ஏற்படுத்தும் ஆற்றலாக இதை குறிக்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். மனஅழுத்தத்திற்கான பதில் வினைகளை நம் உடலின் தானியங்கி நரம்பு மண்டலம் ஒருங்கிணைக்கின்றது. இதனுடன் சேர்ந்து நாளமில்லாச் சுரப்பிகளும் அழுத்தத்தின் போது சுரக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். மன அழுத்தத்திற்கான அறிகுறிகளாக, பதட்டம், மனதை ஒருமுகப்படுத்த முடியாமை, எரிச்சல், வாய் உலர்ந்துவிடுதல், மூச்சுவிடுவதில் சிரமம், அஜீரணக் கோளாறு, அடிக்கடி சிறுநீர் கழித்தல், உள்ளங்கை வேர்த்தல், இருதயம் வேகமாகத் துடித்தல் மற்றும் உடல் தசைகள் இறுகுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அத்துடன், தூக்கமின்மை (Insomnia) என்பதும் ஓர் உளவியல் சார்ந்த பிரச்சினையாகும். அந்தவகையில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கல்வித்துறையினர் அதிகமாக இத்தூக்கமின்மைசார் உளவியல் பிரச்சினையை எதிர் நோக்குகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். அந்தவகையில் போதுமான அளவுக்கு தூங்க இயலாமையே தூக்கமின்மைக் கோளாறு என அழைக்கப்படுகிறது. தூக்கமின்மை தொடர்பாக மனிதர்களிடம் காணப்படும் ஒட்டுமொத்த அலட்சியப்போக்கு மிகப் பெரிய அளவில் மனிதர்களின் ஆரோக்கியத்தை பாதிக்கும் ஆபத்தாக உருவெடுத்திருப்பதாக சர்வதேச மருத்துவ விஞ்ஞர்னிகள் கூட்டாக எச்சரித்திருக்கிறார்கள். மனித உடலின் இயற்கையான செயற்பாடான தூக்கம் மற்றும் விழிப்புத்தன்மையை கட்டுப்படுத்தும் மனித உடலியக்க செயற்பாட்டு கண்காணிப்புத்தன்மையை ஆங்கிலத்தில் Body Clock அதாவது உடல் கடிகாரம் என்கிற பெயரில் விஞ்ஞானிகள் அழைக்கிறார்கள். ஒரு நாளின் 24 மணி நேரத்தில் சராசரியாக வெளிச்சமாக இருக்கும் பகலில் 12 மணி நேரத்தில் மனித உடல் விழிப்புடனும் துடிப்புடனும் இருப்பதும், வெளிச்சமற்ற 12 மணி நேரமான இரவில் மனித உடல் உறக்கம் கொள்வதுமான நடைமுறை என்பது இன்று நேற்று உருவானதல்ல. அது இன்றைய மனித உடல் உருவாக காரணமாக அமைந்த சுமார் 400 கோடி ஆண்டு பரிணாம வளர்ச்சியில் படிப்படியாக உருவாகி மனித உடலுக்கு பழகிய ஒன்றாகும்.இப்படி பலகோடி ஆண்டுகளின் பரிணாமத்தை தன்னுள் கொண்டு அதற்கேற்ப தன்னை தகவமைத்துக் கொண்டு வளர்ந்திருக்கும் இன்றைய மனித உடலின் கடிகார செயற்பாட்டில் தற்போது மிகப்பெரிய இடையுறு செய்யப்பட்டதாக

மருத்துவர்கள் கூறுகின்றனர். சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் தூங்கிய சராசரி நேரத்தை விட இன்றைய மனிதர்கள் ஒருநாளைக்கு இரண்டுமணிநேரம் குறைவாக தூங்குவதாகவும் கூறப்படுகின்றது. இப்பொருளாதார நெருக்கடி மேலும் தூக்கமின்மையை அதிகரித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும், பீதி நோய் (Panic disorder) என்பது திடீர் பயம், அதிக உணர்வுகள் மற்றும் இயல்பான, சாதாரண மற்றும் அச்சுறுத்தாத சூழ்நிலைகளுக்கு வலுவான எதிர்வினைகளை ஏற்படுத்துகிறது. ஒரு நபருக்கு பீதி நோய் ஏற்படும் சூழ்நிலையின் போது நிறைய வியர்வை மற்றும் சுவாசிப்பதில் சிரமம் மற்றும் அவர்கள் மாரடைப்பு வருவதைப்போன்ற உணர்வுகளை உணரலாம். பீதிநோயிற்கான அறிகுறிகளாவன வியர்வை, படபடப்பு, மூச்சுத் திணறல், மார்பு வலி, இறந்துவிடுவோமோ என்ற பயம், நடுக்கம், மயக்கம், குமட்டல், கைகள் மற்றும் கால்கள் அல்லது முழு உடலிலும் உணர்வின்மை அல்லது கூச்ச உணர்வை உணர்தல் போன்ற உணர்வுகளை உணர்கின்றனர்.

மேலும், பிந்தைய மனஉளைச்சல் சீர்கேடு ஒரு நபர் குறிப்பிடத்தக்க மற்றும் திடீர் மன உளைச்சலை உருவாக்கும் ஒரு நிகழ்வை எதிர்கொள்ளும் போது ஏற்படுகிறது. எனவே, இவ்வாறாக பொருளாதார நெருக்கடி காரணமாக பல உளரீதியான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலே குறிப்பிடப்பட்ட உளவியல் ரீதியிலான பிரச்சினைகளின் அறிகுறிகள் இவ்விடத்தில் எடுத்துக்கூறப்பட்டதன் நோக்கம் யாதெனில், உளவியல் ரீதியிலான பிரச்சினைகளின் அறிகுறிகளை அறிந்திருக்கும் பட்சத்தில் ஆரம்பத்திலேயே அத்தகைய உளவியல் ரீதியிலான பிரச்சினைகளில் இருந்து எமக்கு இலகுவாக மீண்டு வரமுடியுமாக இருக்கும் என்பதற்காக வேண்டியாகும்.. அத்துடன் இப்பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள உளவியல் ரீதியிலான பிரச்சினைகளானது எத்தகைய மனிதர்களையும் விட்டுவைக்கவில்லை என்பது நாம் அனைவரும் அறிந்த விடயமே ஆகும். எனவே, அந்த அடிப்படையில் கல்வித்துறையினர் என்பவர்கள் தங்களது வாழ்வின் பெரும்பாலான பகுதியினை கல்வித்துறை செயற்பாட்டு நிறுவனங்களிலே கழிக்கின்றனர். ஆகவே இத்தகைய கல்வித்துறையினரை இப் பொருளாதார நெருக்கடியால் ஏற்பட்டுள்ள உளரீதியிலான பாதிப்புக்களில் இருந்து மீட்டெடுக்க வேண்டுமாயின் அவர்கள் அதிகளவு காலத்தை கழிக்கும் இடமாகக் காணப்படுகின்ற கல்வித்துறை நிறுவனங்களில் இருந்து இத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்வதானது ஆக்கபுர்வமான செயற்பாடாக அமையும் என்ற வகையில் பொருளாதார நெருக்கடி காரணமாக கல்வித்துறையினரிடம் ஏற்பட்டுள்ள உளரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொதுவான வழிமுறைகளாவன:

**கல்வித்துறை நிறுவனங்களில் உடற்பயிற்சி செய்வதனை கட்டாயப்படுத்தல்.**

உடற்பயிற்சி செய்வது உள ரீதியான பிரச்சினைகளை நீக்க சிறந்த வழியாகும். உடற்பயிற்சி செய்வது சிறந்த உடல் அமைப்பை கொடுப்பது மட்டுமன்றி நேரிடையான சிந்தனைகளையும் அதிகரிக்கின்றது. உணர்வுகளை சீர்படுத்துகின்ற செரோடொனின் மற்றும் டெஸ்டோஸ்டெரோன் ஆகியவற்றை சுரக்க உடற்பபியிற்சி உதவுகின்றது. அத்துடன் உள ரீதியான பிரச்சினைகள் அளிக்கின்ற சோர்வான சிந்தனைகளையும் ஒதுக்கிவிடுகின்றது. மேலும் இத்தகைய உடற்பயிற்சிகளை செய்யும் போது தாள இசைகளைக்கேட்டுக் கொண்டு உடற்பயிற்சியில் ஈடுபடுவது மிகவும் சிறந்த செயன்முறையாகும். காரணம் யாதெனில் உள ரீதியான பிரச்சினைகளில் இருக்கும் போது உணர்வை எழுப்பும் இசையை கேட்பது சோர்வடைந்த மனதிற்கு ஊக்கம் அளிக்கும். உணர்வுகளை மாற்றவும் ஆன்மாவை உயர்த்தவும் உணர்ச்சியை

அதிகரிக்கவும் உதவும் ஆற்றல் இசைக்கு இருக்கின்றது. மேலும் மிகவும் உணர்வுமிக்க பாடல்களை கேட்பதால் எதிர்மறையான விளைவு ஏற்படும் என்பதால் அவற்றை தடுக்க வேண்டும் என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்க வியமாகும்.

**கல்வித்துறை நிறுவனச் செயற்பாடுகளில் ஈடுபடுவோரின் உணவுச்செயற்பாட்டை 'சமச்சீர் உணவுச்' செயற்பாட்டிற்கு பழக்கப்படுத்துதல்.**

பழங்கள், காய்கறிகள், மாமிசம், தானியங்கள் மற்றும் கார்போஹைட்ரேடுகள் ஆகிய ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளுதல், சிந்தனை சிதறாமல் இருக்க உதவுகின்றன. சமச்சீர் உணவு உடல்நலனையும் மனநலனையும் சீர்படுத்துகின்றது. மேலும் விட்டமின் சேர்க்கைகள் ஊட்டச்சத்து குறைபாடுகளும் உள ரீதியான பிரச்சினைகளை அளிக்கும் சிந்தனைகளை விளைவிக்கலாம். இதனால் வெளிப்படும் அறிகுறிகளை மருத்துவரிடம் ஆலோசித்து சமன்பாட்டை சரிசெய்ய விட்டமின் சேர்க்கைகளை எடுத்துக் கொள்ளுவதும் உள ரீதியான பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கான வழிமுறையாகும்.

**கல்வித்துறை நிறுவனங்களில் 'சுய விழிப்புணர்வு' நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்டு நிகழ்த்துதல்.**

வாழ்க்கையின் நிகழ்வுகளை சரியாக புரிந்து கொள்ள முடியாமல் தங்களை அளவுக்கு மீறி அழுத்துவதால் மக்கள் பொதுவாக உளரீதியான பிரச்சினைகளை அடைகின்றனர். எனவே அந்தவகையில் 'சுய விழிப்புணர்வு' என்பது மக்களுக்கு அவசியமானதாகும். எனவே அந்தவகையில் இத்தகைய 'சுய விழிப்புணர்வை' ஏற்படுத்தக் கூடிய நிகழ்ச்சிகளை கல்வித்துறை மட்டத்தில் ஏற்படுத்துவதானது கல்வித்துறையினரின் உள ரீதியான பிரச்சினைகளை நீக்குவதற்கான சிறந்த வழிமுறையாகும்.

**கல்வித்துறை செயற்பாட்டாளர்களிடம் 'தினசரி நடைபெறும் நிகழ்வுகளை ஒவ்வொரு நாளும் குறித்து வைக்கும் பழக்கத்தை' நடைமுறைப்படுத்த பழக்கப்படுத்துதல்.**

அதாவது, தினசரி உணர்வுகளை எழுத்து மூலமாக பதிவு செய்வது சுய பரிசோதனை செய்வதற்கும் ஆராய்வதற்கும் ஒரு சிறந்த வழி ஆகும். இவ்வாறு வாழ்க்கையை குறித்து என்ன நினைக்கிறீர்கள் என்பதை அனுதினமும் பதிவு செய்தால் உள ரீதியான பிரச்சினைகளில் இருந்து விடுபட ஒரு நல்ல தீர்வு கிடைக்கும். ஆகவே இத்தகைய செயற்பாட்டினை கல்வித்துறையினரிடம் பழக்கப்படுத்துவதானது அவர்களை உள ரீதியான பிரச்சினைகளில் இருந்து மீட்டெடுக்கும் செயன்முறையாகும்.

**கல்வித்துறைசார் சுற்றுலாக்களை மேற்கொள்ளல்.**

எதிர்மறையான சிந்தனைகளை அகற்றுவதற்கு காட்சி அமைப்பை மாற்றுவது எப்போதுமே உதவியாக இருக்கும். அந்த அடிப்படையில் வெளிக்கள செயற்பாடுகளில் ஈடுபடுதல் அல்லது கல்விசார் சுற்றுலாக்களில் ஈடுபடுதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் போது உள ரீதியான பிரச்சினைகள் குறைவடைந்து மனமகிழ்ச்சியாக இருக்கலாம்.

**கல்வித்துறை நிறுவனங்களில் 'மனநல வல்லுநனர்களுடைய' ஆலோசணைகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.**

உள ரீதியான பிரச்சினைகளில் இருந்து வெளிவருவதற்கு மிகவும் எளிதான மற்றும் ஆற்றல் வாய்ந்த வழி கல்வித்துறை நிறுவனங்களில் 'மனநல வல்லுநனர்களுடைய' ஆலோசணைகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பது ஆகும்.

**கல்வித் துறையினரை கூட்டுச் செயற்பாடுகளில் அதிகளவில் ஈடுபடுத்துதல்.**

தனிமையானது உள ரீதியான பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கின்ற விடயமாகும். அதாவது தனிமையில் இருந்தால் மனம் மேலும் சோர்வுடன் தான் இருக்குமே தவிர அமைதியடையாது. அதற்காக எப்போதுமே கூட்டமாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் கூட்டமாக சேர்ந்து குழுச் செயற்பாடுகளில் ஈடுபடும் போது உள ரீதியான பிரச்சினைகள் தரும் சிந்தனைகளில் இருந்து கவனத்தை திசை திருப்பும். அந்தவகையில், மாணவர்களை குழு கல்விச் செயற்பாடுகளில் அதிகளவில் ஈடுபடுத்துதல்' என்பது மாணவர்களிடம் காணப்படும் உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கான சிறந்த மருந்தாகும்.

**கல்வித்துறையினரை 'யோகப் பயிற்சிகளில்' ஈடுபட ஆர்வமளித்தல்.**

யோகப் பயிற்சிகள் தளர்வு நிலையை அளிப்பது மட்டுமன்றி ஆரோக்கியமான வழியில் அழுத்தத்தை எதிர்கொள்ளவும் நம் உடலைத் தயார்செய்கிறது. யோகப் பயிற்சிகள் நமது தானியங்கி நரம்பு மண்டலத்தைச் சமன் செய்வதால் அழுத்தம் ஏற்படும்போது நமது உடலும் மனமும் அதை நன்றாக எதிர்கொள்கின்றன. யோகப் பயிற்சிகள் தூக்கத்தை ஒழுங்குபடுத்துகிறது. ஓய்வு நிலையை ஏற்படுத்துபடுத்துகிறது.ரத்த அழுத்தத்தை சீர்செய்கிறது. பதட்டத்தைக் குறைத்து ஓய்வு நிலையை ஏற்படுத்துகிறது. சுவாசத்தைச் சீர் செய்கிறது.மேலும், உடலுக்கும் மனதுக்கும் விழிப்பு நிலையை ஏற்படுத்துகிறது.இந்த விழிப்பு நிலையில் இருக்கும் போது எதிர்படும் எவ்விதச் சூழ்நிலையையும் அமைதியாகவும் பதட்டமில்லாமலும் எதிர்கொள்ள முடியும். எனவே அந்தவகையில் பொருளாதார நெருக்கடி காரணமாக கல்வித்துறையினரிடம் ஏற்பட்டுள்ள உளரீதியான பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சிறந்த வழிமுறையாக யோகப் பயிற்சி காணப்படுகின்றது.

**உள ரீதியான பிரச்சினைகளில் இருந்து விடுபடக்கூடிய மேலதிக வழிமுறைகளை கல்வித்துறையினருக்கு எடுத்துக்கூறுதல்.**

அதாவது, வாழ்க்கையின் நிகழ்வுகளை சரியாக புரிந்து கொள்ள முடியாமல் தங்களை அளவுக்கு மீறி அழுத்துவதால் மக்கள் பொதுவாக உள ரீதியான பிரச்சினைகளை அடைகின்றனர்.எனவே, இத்தகைய சந்தர்ப்பங்களில் எவ்வாறான விடயங்களை மேற்கொண்டால் உள ரீதியான பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியுமோ அவ்வாறான விடயங்கள் எவை என்பது தொடர்பான பொதுவான வழிகாட்டல்கள் தொடர்பான அறிவை கல்வித்துறையினருக்கு வழங்குவது அவசியமாகும். அந்தவகையில் அவ்வாறான வழிமுறைகள் சில பின்வருமாறு: 'நல்ல நண்பர்களுடன் பழகுதல்'. அதாவது, நல்ல நண்பர்கள் தேவையான ஆறுதலையும், வாழ்க்கையின் சோர்வான சூழ்நிலையில் இருந்து வெளியே வருவதற்கான ஆலோசணைகளையும் வழங்குவார்கள். மேலும், தேவையுள்ள நேரத்தில் சொல்வதை காதுகொடுத்து கேட்கும் நண்பர் இருந்தால் மனதில் இருக்கும் சந்தேகங்களும் எதிர்மறையான சிந்தனைகளும் முற்றிலும் களைந்துவிடும். ஆகவே சிறந்த நண்பர்கள் வட்டத்தை அமைத்துக் கொள்ளுவது உள ரீதியானபிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கான சிறந்த வழியாகும். மேலும், 'நேர்மறையான எண்ணங்களுடன் வாழ வேண்டும்' வாழ்க்கையில் நேர்மறையாக இருப்பதே உள ரீதியான பிரச்சினைகள் கொடுக்கும் சிந்தனைகளை தவிர்ப்பதற்கான சிறந்த வழியாகும். மேலும் மனதிலே எதிர்மறை உணர்வுகள் இருக்கின்றன. சிந்தனைகளை நேர்மறையான திசையில் செலுத்துவதன் மூலமாக உள ரீதியான தாக்கங்களை அகற்றிவிடலாம். அத்துடன் 'செல்லப்பிராணியை வளர்த்தல்' செல்லப் பிராணிகள் தங்கள் எஜமான்களிடம்

அற்புதமான வழியில் தொடர்பு கொள்கின்றன. தனியாக வாழ்கிறவர்களை விட செல்லப்பிராணி வளர்ப்பவர்கள் மனச்சோர்வின் தாக்கங்களில் இருந்து பிழைத்துக் கொள்கிறார்கள் என்று பல ஆராய்ச்சிகள் கூறுகின்றன.ஆகவே செல்லப்பிராணியுடன் உணர்வுரீதியாக தொடர்பு கொள்ளுவது எதிர்மறையான உணர்வில் இருந்துவெளிவர உதவும்.

மேலும், 'நிகழ்கால சூழ்நிலையை கருத்தில் கொண்டு வாழப்பழகுதல்.' இறந்தகால தவறுகளிலும் எதிர்காலத்தின் நிலையின்மையிலும் உழல்வதில் அர்த்தமே இல்லை. அது எமது கட்டுப்பாட்டில் இல்லை என்பதால், அச்சூழ்நிலையில் எமது உணர்வுகளை செலுத்துவது பலன் அளிக்காது. 'எப்போது', 'எங்கே' மற்றும் 'நாளை' என்பனவற்றுக்கு பதிலாக 'இப்போது', 'இங்கே', 'இன்று' என்பனவற்றில் கவனம் செலுத்துவதானது உள ரீதியான பிரச்சினைகளில் இருந்து நீங்குவதற்கான சிறந்த வழிமுறையாகும்.

அத்துடன் 'நன்றாக தூங்குவது ஆகும்' நேர்மறையான சிந்தனைக்கு திரும்ப ஒருவருக்கு தேவைப்படுவது எல்லாம் ஒரு நல்ல உறக்கமே ஆகும். இரவு தோறும் 7-8 மணிநேரம் உறங்குவது குறைவான மனச்சோர்வுக்கான அறிகுறிகளை காட்டுவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றது. எனவே இவ்வாறான விடயங்கள் தொடர்பாக கல்வித்துறையினருக்கு எடுத்துக் கூறும் போது இவற்றினை கடைபிடித்து அவர்களும் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள உள ரீதியான பிரச்சினைகளில் இருந்து மீண்டு வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இவற்றிற்கு மேலதிகமாக 'கல்வித்துறையினர் மத்தியில் காணப்படும் உளவியல் ரீதியிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பாடசாலை நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல், காலை உணவு தொடர்பான பிரச்சினை மூலம் ஏற்படும் சிக்கல்களுக்கு நகர்ப்புற பாடசாலைகளில் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் உணவு வங்கிகளை (Food Bank) நிறுவுதல், ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான ஆளித்தொடர்புகளை (Inter Personal Relationship) விருத்தி செய்தல், வகுப்பாசிரியர் மூலமாக மாணவர்களை இனங்காண்பதன் மூலம் பொருளாதார நெருக்கடியை மட்டுப்படுத்துவதற்கு ஏதுவான பாடசாலை மட்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், பெரும்பாலான ஆசிரியர்கள் அவர்களது மாதாந்த சம்பளத்திலேயே தங்கி அவர்களது வாழ்வாதாரத்தை மேற்கொள்கின்றனர்.

ஏனவே, அவர்களது மாதாந்த சம்பளத்திட்டத்தினை உரிய முறையில் அரசாங்கம் வழங்குதல் வேண்டும், ஆசிரியர்களுக்கு வருமானத்தை அதிகரிப்பதற்கான மாற்று வழிகள் தொடர்பான ஆலோசனை வழிகாட்டல்கள் வழங்கப்படுதல் வேண்டும் (வீட்டுத் தோட்டம், சிறுகைத்தொழில்) போன்றவை, கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நடாத்தி ஆசிரியர்ளது பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுதல் வேண்டும், சிறந்த உளவியலாளர்களின் துணைகொண்டு ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு உளவியல் ரீதியிலான கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்படுதல் வேண்டும், பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்குகின்ற மஹபொல புலமைப்பரிசில் திட்டத்தினை உரிய முறையில் வழங்குதல் வேண்டும், மேலதிக வகுப்புகளுக்கான கட்டணங்களின் அதிகரிப்பு தொடர்பாக ஆசிரியர்கள் கவனம் செலுத்தி மாணவர்களுக்கு சாதகமான முறையில் பொருளாதார நெருக்கடி சூழ்நிலையை கருத்தில் கொண்டு கட்டணங்கள் அறவிடப்படுதல் வேண்டும், பாடசாலை பொருட்களின் விலைகள் குறைக்கப்படுதல் வேண்டும், பாடசாலை

பாடநூல்கள் உரிய முறையில் வழங்கப்படுதல் வேண்டும், பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு உரிய தொழில்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படுதல் வேண்டும், மாணவர்களை உற்சாகப்படுத்துவதற்கான இணைப்பாடவிதான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தல் வேண்டும், எல்லாப் பாடசாலைகளிலும் பயிற்சி பெற்ற உளவியல் ஆலோசகர்கள் நியமிக்கப்படல் வேண்டும், கல்வி முறைமையில் 'உளவியல்' பாடத்திட்டத்தை இணைத்தல் வேண்டும் மற்றும் பொருளாதார ரீதியான நெருக்கடியே இத்தகைய உளவியல் பிரச்சினைகளுக்கு காரணம் என்பதனை மாணவர்களுக்கு புரிய வைத்து பாடசாலை காலங்களில் இருந்தே சுய தொழில் ஒன்றை செய்வதற்கான ஆலோசனைகளை கல்வித்துறை நிறுவனங்கள் செயற்படுத்தல் வேண்டும்.

எனவே, இவ்வாறான சில நடைமுறை செயற்திட்டங்களினூடாக இப்பொருளாதார நெருக்கடியால் கல்வித்துறையினரிடம் ஏற்பட்டுள்ள உளவியல் ரீதியிலான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். இவ்வாக்கத்தின் மூலம் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் எடுத்துக்கூறப்பட்டுள்ளதுடன் எத்தகைய வழிமுறையில் எமது நாடான இலங்கையானது தற்காலத்தில் எதிர் நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியை அடைந்த விதம் பற்றியும் கூறப்பட்டுள்ளது. மேலும், இப்பொருளாதார நெருக்கடியானது பல்வேறு தரப்பினரையும் பாதித்துள்ளது எனலாம். அந்தவகையில் இவ்வாக்கத்தின் மிகப் பிரதானமாக கருத்தில் கொள்கின்ற 'கல்வித்துறையினர்' இதற்கு வதிவிலக்கானவர்களல்ல என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும். அந்த அடப்படையில் கல்வி என்பது ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான விடயமாகும். ஆகவே இத்தகைய மகத்துவமிக்க கல்விச்செயற்பாட்டினை முன்னெடுத்துச் செல்கின்ற சமூகத்தின் முதுகெலும்பாகத் திகழ்கின்றவர்கள் கல்வித்துறையினரே ஆவார். சமூகத்தின் இத்தகைய முதுகெழும்புகள் இன்று பொருளாதார நெருக்கடியால் உளரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இவர்களது இத்தகைய பாதிப்பானது அக்குறிப்பிட்ட கல்வித்துறையினர் சார்ந்த பிச்சினை மாத்திரம் அல்ல. மாறாக அது ஒரு சமூகம் சார்ந்த பிரச்சினையாகும். இத்தகைய சமூகம் சார்ந்த பிரச்சினைகள் இன்று நாடளாவிய ரீதியில் காணப்படுகின்றன. ஆகவே, இவ் ஆக்கத்தின் மூலம் விதந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை உரிய முறையில் பொருத்தமான வகையில் காலத்தின் நிலைமையினை கருத்தில் கொண்டு செயற்படுத்தும்பட்சத்தில் பொருளாதார நெருக்கடியால் உளவியல் ரீதியாக பாதிப்படைந்துள்ள கல்வித்துறையினரை பாதுகாத்து சிறந்த கல்வித்துறை சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும




# இலங்கையின் பொருளாதார நெருக்கடி

## – பற்றி ஓர் ஆய்வு –

**JF. AFRAH** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

**இலங்கை பொருளாதார வீழ்ச்சியின் பின்னணி என்ன?**

பணவீக்கம் பலவீனமான அரசாங்க நிதி, தவறான நேரத்தில் வரிக் குறைப்பு, முக்கிய வருவாயான சுற்றுலாத் துறை கொரோனாவால் பாதிக்கப்பட்டமை ஆகியன இலங்கையை மிகப்பெரிய பொருளாதார அழிவை நோக்கித் தள்ளியுள்ளது. உதாரணமாக உணவுப் பொருட்களின் விலை கடந்த மாதத்தில் மட்டும் 25 வரை உயர்ந்துள்ளது.

இலங்கையின் தற்போதைய கையிருப்பு சுமார் ஒரு மாத மதிப்புள்ள பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மட்டுமே போதுமானது.

அந்நியச் செலாவணி தட்டுப்பாட்டால் எரிபொருள், உணவு, மருந்துகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் பணம் செலுத்துவதற்கும் நாடு போராடி வருகிறது. இவை வரலாற்றில் இல்லாத மின்வெட்டுக்கு வழிவகுத்தது. ஒரு நாளைக்கு நான்கு மணிநேரம் மட்டுமே மின்சாரம் வழங்கப்படுகிறது. அதே போல் எரிபொருள் நிலையங்கள் வெளியே மிகப்பெரிய வரிசையில் மக்கள் காத்திருக்கின்றனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக செய்தித்தாள் மற்றும் அச்சுத் தொழில்கள் கூட அச்சுப் பொருட்களின் கடுமையான தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளன. இவை பள்ளித் தேர்வுகளை ஒத்திவைக்கும் அளவுக்கு கொண்டு சென்றது.

பொருளாதார நெருக்கடி இலங்கை வாசிகளிடையே கவலையையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கம் பொருளாதாரத்தை தவறாக நிர்வகிப்பதாக பலர் குற்றம் சாட்டுகின்றனர்.

2019 ஆம் ஆண்டு விரைவான பொருளாதார வளர்ச்சியை உறுதியளித்து ஆட்சிக்கு வந்த அதிபர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தற்போதைய பொருளாதார அவசரநிலை சவாலாக மாறியுள்ளது.

ராஜபக்ஷ தனது பிரச்சாரத்தின்போது 15 மதிப்பு கூட்டப்பட்ட வரியை பாதியாக குறைப்பதாகவும் நுகர்வு மற்றும் வளர்ச்சியை அதிகரிப்பதற்கான வழியாக வேறு சில வரிகளையும் ரத்து செய்வதாகவும் உறுதியளித்தார்.

இந்த வரிக் குறைப்பு அரசாங்கத்திற்கான வருவாயில் பில்லியன் கணக்கான ரூபாய் இழப்புக்கு வழிவகுத்தது. ஏற்கனவே கடனில் உள்ள பொருளாதாரத்தின் பொது நிதி மேலும் அழுத்தத்தை வழங்கியது.

அச்சமயத்தில் வந்த கொரோனா பெருந்தொற்றால் இலங்கையின் முக்கிய வருவாய் ஆதாயமான சுற்றுலாத் துறை பாதிக்கப்பட்டது.அந்த துறை நாட்டின் மொத்த பொருளாதார உற்பத்தியில் 12 இற்கும் அதிகமாக உள்ளது. இலங்கையின் பொதுக் கடன் 2019 இல் 94 ஆக இருந்த நிலையில் 2021 இல் 119 ஆக உயர்ந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆராய்ச்சிக் குழுவின் பொருளாதார நிபுணர் சாயு தம்சிங்க கூறுகையில் “வரிகள் குறைப்பு, மத்திய வங்கியின் நிதியுதவி மூலம் அதிக பணம் சேர்த்தது ஆகியவை தவிர்க்க முடியாத நெருக்கடியை மேலும் மோசமாக்கியது என்றார். 1948 இல் பிரிட்டனிடம் இருந்து விடுலை பெற்ற பிறகு இலங்கை எதிர் கொண்டிருக்கும் மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடி இதுவாகும்.

உணவுப் பொருள்களின் விலை பல மடங்கு உயர்ந்திருக்கிறது. மின்வெட்டு கடுமையாக இருக்கிறது. நெருக்கடியைச் சமாளிக்க இந்தியா போன்ற நாடுகளிடம் கூடுதலாகக் கடன் வாங்குகிறது. சர்வதேச செலாவணி நிதியத்திடம் கடன் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள்.**

கோவிட் 19 தொற்றினால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் துறையினால் நாட்டின் வருமானம் மேலும் குறைந்ததால் நாட்டின் பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளாகியது. இலங்கை பணமதிப்பு வீழ்ச்சி ஏற்பட்டமை, உணவுப் பொருட்களின் விலை உயர்வின் விளைவாக பணவீக்கம் அதிகரித்தமை. இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் விற்பனை தடை செய்யப்பட்டதால் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அண்மையக் காலத்தில் நாட்டின் கடன் சுமை அதிகரித்ததால் நாட்டின் பொருளாதாரம் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியது. மேலும், அன்னியச் செலாவணி கையிருப்பு தீர்ந்து போனது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணமாகும்.

சுற்றுலா, ஆடை மற்றும் தேயிலை ஏற்றுமதித் துறையில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சி. நிலையான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை நோக்கி இலங்கை நகர்ந்துள்ளமை. இலங்கையில் நிலவும் மாபெரும் பொருளாதார நெருக்கடிக்கு இன-மத உணர்வுகளை தூண்டும் அந்நாட்டு அரசின் கொள்கையும் ஒரு காரணமாகும்.

முக்கியமாக சீனாவிடம் வாங்கிய கடன் சீனாவின் பல்வேறு ரோட் அண்ட் பெல்ட் திட்டத்திற்காக வாங்கப்பட்ட நிதி உதவிகள் அதற்கான வட்டி அனைத்துமே இலங்கையின் பொருளாதாரத்தை முடக்கிப் போட்டது. அதன்பின் வந்த கொரோனா காரணமாக இலங்கையின் பொருளாதாரம் பாதாளத்திற்குச் சென்றது.முக்கியமாக கொரோனா சமயத்தில் இலங்கையின் பொருளாதாரம் படுவீழ்ச்சி அடைந்தது.

கோவிட்–19 நெருக்கடி குறிப்பிடத்தக்க பின்னடைவுக்கு வழிவகுத்ததால் வறுமை மற்றும் சமத்துவமின்மை அதிகரித்ததால் நாட்டின் பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளாகியது.

பொருளாதாரம் மிக மோசமான இறுக்கத்தை பதிவு செய்ததால் கோவிட்-19 பல ஆண்டு கால முன்னேற்றத்தை திடீரென நிறுத்த வழிவகுத்தது. தொற்றுப் பரவல் ஆரம்பித்த உடனேயே தொழில்வாய்ப்புகள் மற்றும் வருமான இழப்புகள் பரவலாகின. 3.20% ஏழைகளின் பங்கு 2020 இல் 11.7 சதவிகிதம் அல்லது அரை மில்லியனுக்கும் அதிகமான மக்களால் அதிகரித்திருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது - இது ஐந்து வருட மதிப்புள்ள முன்னேற்றத்திற்கு சமமான பாரிய பின்னடைவாகும்.

அதிக முறைசாராமை மற்றும் பலவீனமான பாதுகாப்பு முறைகள் காரணமாக பணியாளர்களிடையே பாதிப்பு அதிகமாக இருந்தது. இது அதிர்ச்சிகளைச் சமாளிக்கும் திறனைக் குறைக்கிறது. தொற்றுநோயைக் கட்டுப்படுத்தவும் பொருளாதார அதிர்ச்சியைத் தடுக்கவும் அரசாங்கம் விரைவாகச் செயல்பட்டது. ஆனால் முழுமையான தாக்கத்தை ஈடுசெய்வதற்கான நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. இந் நிலை அதிகரிக்க சமத்துவமின்மையும் வழிவகுத்துள்ளது.

உலக நாடுகள் பல பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்ட நிலையில், சுற்றுலாத்துறையை கணிசமாக நம்பி இருக்கும் இலங்கை படுமோசமான வீழ்ச்சியை சந்தித்தது. அதிலும் டொலருக்கு நிகரான இலங்கையின் ரூபாவின் மதிப்பு நாளுக்கு நாள் வீழ்ச்சி அடைந்து கொண்டே சென்றது. கடந்த வருடம் 190 ரூபாவைத் தாண்டிய இலங்கை ரூபாய் மதிப்பு இப்போது 260 ரூபாவைத் தாண்டிச் சென்று கொண்டு இருக்கிறது.

அமெரிக்காவின் பொருளாதாரத் தீர்மானங்கள் காரணமாக டொலரின் பெறுமதி அதிகரித்துள்ளமையால் நாட்டின் பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளாகியது.

மொத்த தேசிய உற்பத்தி வேகம் 2015 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் 4.4 வீதமாகக் காணப்பட்டதுடன் இந்த வருடம் குறித்த காலப்பகுதியில் அது 3.2 வீதமாகக் குறைவடைந்துள்ளதால் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்தது.

ரஷ்ய போர் காரணமாக இன்னொரு பக்கம் இலங்கையில் பெட்ரோல் டீசல் விலை உச்சத்தை தொட்டுள்ளது. பெட்ரோல் டீசல் இலங்கையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை 207.00 ரூபாவாக உள்ளது.சில இடங்களில் இது 250 ரூபாவைத் தாண்டி விற்பனை செய்கிறது. ஒரு லிட்டர் டீசல் விலை 159.00 ரூபாவாக உள்ளது. 10 கிராம் தங்கத்தின் விலை 154 566 ரூபாவாக உள்ளது.

**விலைவாசி ஏன் உயர்ந்தது?**

இலங்கையில் பல பொருள்களின் விலை பல மடங்கு வரை உயர்ந்திருக்கிறது. இதற்கு இரண்டு வகையான காரணங்களைக் கூறுகிறார் கொழும்பு பல்கலைக்கழக பொருளாதாரப் பேராசிரியரான அமிர்தலிங்கம்.

அந்நியச் செலாவணி இருப்பு குறைந்ததால் இலங்கை நாணயத்தின் நெகிழ்வுத் தன்மையைப் பேணுவதற்காக ரூபாவின் மதிப்பை இலங்கை மத்திய வங்கி குறைத்தது. இதனால் பொருள்களின் மதிப்பு படிப்படியாக உயரத் தொடங்கியது.

ஒரு டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு 200 ரூபாய் என்ற அளவில் இருந்து 300 ரூபாய்க்கும் அதிகமாகச் சரிந்திருந்திருக்கிறது.ரூபாவின் மதிப்புச் சரிந்தததால் நாட்டின் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகள் மற்றும் கட்டணங்கள் திடீரென அதிகரித்தன.

பெட்ரோல், டீசல், எரிவாயு, பால்மா போன்ற அத்தியாவசியப் பொருள் அனைத்தும் இறக்குமதியை நம்பியிருக்கின்றன. இவற்றுக்குக் கொடுக்கும் அளவுக்கு இலங்கை வங்கிகளிடம் டாலர் கையிருப்பில் இல்லை. அதாவது அந்நியச் செலாவணி கையிருப்பில் இல்லை. இதனால் இறக்குமதி தடைபட்டதால் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விலைகள் கட்டுப்பாட்டை இழந்து உயரத் தொடங்கின.

**வேறு என்னென்ன பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன?**

அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் இறக்குமதியை நம்பியிருப்பதால் அவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்துக்கு கோழித் தீவனம்கூட அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது. பால்மா, சர்க்கரை, முட்டை, பெட்ரோல், டீசல், எரிவாயு என முக்கியமான பொருள்கள் அனைத்தும் விலை உயர்ந்திருக்கின்றன.

நாட்டின் முக்கியமான மின் உற்பத்தி நிலையங்கள் டீசலில் இயங்கக் கூடியவை என்பதால், அவையும் உற்பத்தியைக் குறைத்திருக்கின்றன. அல்லது மூடப்பட்டிருக்கின்றன. அது நெடிய மின்வெட்டுக்கு வழிவகுத்திருக்கிறது.

வாகனங்கள் இயக்கப்படாததால் அத்தியாவசிய சேவைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக இலவச மருத்துவ சேவை வழங்கும் மருத்துவமனைகளில் திடீர் ஆள் பற்றாக்குறையும், மருந்துகள் பற்றாக்குறையும் ஏற்பட்டிருக்கிறது என்கிறார் பொருளாதார பேராசிரியர் அமிர்தலிங்கம்.

**சாத்தியமான தீர்வுகள்**

வருமானங்களை விட இறக்குமதிக்காக செலவு அதிகரித்தமை தற்போதைய அந்நிய செலாவணி கையிருப்பு நெருக்கடிக்கு வழிவகுத்துள்ளது. ஆகவே அரசாங்கம் இறக்குமதி செலவினங்களைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இலங்கையின் சுற்றுலாத் துறையை வலுப்படுத்துவதற்காக செயற்பாடுகளை துரிதப்படுத்தல் வேண்டும். வர்த்தக சமூகம், வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்களிடையே நம்பிக்கை உருவாக்கப்பட்டு கவர்ச்சிகரமான செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தும் போது அவை பெரும்பாலான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வழிவகுக்கும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) உதவி கோருவதற்கான செயற்பாட்டை துரிதப்படுத்துவதோடு அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தலும் ஊழலை இல்லாதொழித்தலும் அவசியமாகும்.

நாணய மாற்று சதவீதத்தை ஸ்திரத்தன்மைக்கு கொண்டு வருவதற்கு பணவியல் கொள்கை, நாணயமாற்றுவீதக் கொள்ளை மற்றும் நிதிக்கொள்கை ஆகிய மூன்றையும் ஒரேநேரத்தில் சீரமைப்பதினூடாக பொருளாதார மேம்பாட்டினை ஏற்படுத்த முடியும்.

கடனை மேலும் நிலையானதாக மாற்றுவதற்கு அரசாங்கம் நிதி சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். விருத்தி முறையடிப்படையில் உள்நாட்டு வரி வருமானத்தை உயர்த்தக்கூடிய செயற்பாடுகள் குறிப்பாக வரிகளை அதிகரிப்பதனூடாக வரி வருவாயை அதிகரிக்க வேண்டும்.

செலவினப் பக்கத்தில் அரசாங்கத்தால் ஓரளவிற்கு கட்டுப்படுத்தக்கூடிய செலவினங்கான பொதுத்துறையின் சம்பளம் மற்றும் ஊதியங்களை நெருக்கடியின் மோசமான நிலையில் இருந்து வெளிவரும் வரை முடக்குவதன் மூலம் அரச செலவீனங்களை குறைத்துக் கொள்ள முடியும்.

இலங்கையின் தற்போதைய பாரிய பொதுக்கடன் அதிகரிப்பு நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு பாரிய தடைக்கல்லாகும் என்பதை பல்வேறு பொருளாதார நிபுணர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

சில நீடித்த கடன் நிலைத்திருப்புச் செயல்முறைக்கு உட்படின், அது பொருளாதார மீட்சிக்கு ஆதரவான நிதியை விடுவிக்கும்.

ஆகவே முதலீடுகளைக் கவர்ந்து உற்பத்திகளை அதிகரிப்பதற்கு முதலில் நாணய மாற்றுவிகித உறுதித்தன்மையை பேணுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

முடிவுரை

ஆகவே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியானது தனித்த ஒரு காரணத்தினால் மாத்திரமன்றி பல்வேறு காரணிகளின் தொடர்ச்சியான ஒரு கூட்டுக் கலவையாகயும் குறிப்பாக பொருளாதார வல்லுநர்களின் ஆலோசனைகளை கவனத்தில் கொள்வதாலும் ஏற்பட்டவொரு பாரிய அவலமாகவே காணப்படுகின்றது.

இருப்பினும் நெருக்கடி தீவிரமடைந்துள்ளபோதிலும் அவற்றை முகாமைசெய்வதற்கான முன்வைக்கப்பட்ட சாத்தியமான ஆலோசனைகளுக்கு கவனம் செலுத்துவதன் மூலம் தற்போதைய நெருக்கடி நிலைமையினை குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கமுடியும்.

இதற்கான வழிமுறையாக இலங்கையின் உயர் வருமானப்பிரிவினர் அதிகளவு வரிகளை செலுத்தக் கூடியவகையில் வரிக்கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட வேண்டும்.

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியும் மக்களின் வாழ்வாதார போராட்டங்களும்



**FATHIMA AFRA** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

பொருளாதாரமானது ஒரு நாட்டினுடைய உயரிய பலம் என கருதலாம். ஒரு நாட்டில் பொருளாதாரம் சீரும் சிறப்புமாக இருந்தால் தான் அந்நாட்டில் உள்ள மக்கள் மனநிறைவுடன் வாழ்வார்கள். நாடும் வளம் பெறும். அந்தவகையில் இலங்கையின் பொருளாதாரம் ஆரம்பகாலங்களில் மந்த நிலையிலேயே காணப்பட்டது. 2001 ஆண்டின் பின் இலங்கை ஒரு பொருளாதார ஒடுக்கத்தை காண நேர்ந்தது. கிட்டத்தட்ட 2007 ஆம் ஆண்டுக்குப் பின்னரே இலங்யையில் பொருளாதாரம் உயர்வடையத் தொடங்கியது.

இலங்கையில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கைகளான தேயிலை, இறப்பர், கராம்பு, சாதிக்காய், கறுவா, கொக்கோ போன்றவற்றின் உற்பத்தி பிரதான வருவாயாக விளங்கியது. விவசாயம், காய்கறிச்செய்கை, புடவை தயாரிப்பு என பல உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு சுற்றுலாத்துறையில் பிரசித்தி பெற்ற நாடாக இலங்கை காணப்பட்டது. அதிகளவான சுற்றுலாப்பயணிகள் வருகை தந்தனர். இலங்கையின் பிரதான வருமானமாக வெளிநாட்டுப் பயணாளர்கள் மூலம் கிடைக்கப்பெற்றது. குறிப்பாக மத்திய கிழக்காசிய நாடுகளில் வீட்டு பணிப்பெண்களாக பணிபுரிவோரின் ஊடாக பெறப்பட்டன. இதனால் இலங்கை நாடு அதிக வருமானம் ஈட்டியது. நாட்டின் பொருளாதாரம் சிறந்து விளங்கியது.

இதற்கான வழிமுறையாக இலங்கையின் உயர் வருமானப்பிரிவினர் அதிகளவு வரிகளை செலுத்தக் கூடியவகையில் வரிக்கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு பலவழிகளிலும் சிறப்புற்று விளங்கிய இலங்கையின் பொருளாதாரம் 2019 ஆண்டு இறுதிப்பகுதியில் கோவிட் 19 தொற்று பரவலின் காரணமாக மிக மோசமான இறுக்கத்தை பதிவு செய்தது.

இருப்பினும் முழுமையான தாக்கத்தை ஈடுசெய்யமுடியாமல் இருந்தது. ஏனெனில் கோவிட் 19 பரவல் வீரியம் அடைந்திருந்தது. திடீரென உற்பத்திகளை நிறுத்தப்பட்டன. தொழில்வாய்ப்புக்கள் இன்றி மக்கள் வீடுகளில் முடக்கப்பட்டனர். மக்கள் அத்தியவசயத் தேவைகளைக் கூட நிறைவுசெய்யமுடியாமல் அவதிப்பட்டனர். இக்கொடிய நோயால் அதிகளவான உயிர்ச்தேங்கள் ஏற்பட்டன. மக்கள் பணம் இல்லாமல் தங்களிடம் இருந்த பொருட்களை விற்று தேவைகளை நிவர்த்திசெய்தனர். ஏழை மக்களின் வீதம் சடுதியாக அதிகரித்தது. இதுவே இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் ஆரம்பகட்டமாக இருந்தது.

நிலையான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியை நோக்கி இலங்கை நகரத்தொடங்கியது. சுற்றுலாத்துறையை நம்பியிருந்த இலங்கை பாரிய வீழ்ச்சி அடைந்தது. ஆடை ஏற்றுமதியிலும், பெருந்தோட்டப்பயிர்கள் ஏற்றுமதியிலும் வீழ்ச்சி அடைந்தது. முக்கியமாக இலங்கை சீனாவிடம் பல திட்டங்களுக்காக வாங்கப்பட்ட நிதி உதவிகள், அதற்கான வட்டி இலங்கையின் பொருளாதாரத்தை முடக்கி விட்டன. டாலருக்கு நிகரான இலங்கையின் ரூபாயின் மதிப்பு நாளுக்கு நாள் வீழ்ச்சி அடைந்து கொண்டு செல்கிறது. இவ்வாறு இலங்கையின் வருமானம் வீழ்ச்சி பாதையில் நகர்ந்ததால் நாட்டில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படத்தொடங்கின.

மக்களின் அத்தியவசிய உணவுப்பொருட்கள், ஆடைகள் மற்றும் பாவனைப் பொருட்கள் என அனைத்தினதும் விலை உயர்த்தப்பட்டன. இதனால் மக்கள் அத்தியவசிய உணவுப்பொருட்களை கூட வாங்க முடியாமல் வறுமையினால் வாடுகின்றனர். விவசாயிகள் பயிர்செய்கைக்குத் தேவையான உரம் இறக்குமதியின்மையினால் குறைந்தளவான விளைச்சலையே பெறுகின்றனர். தோட்டத்தொழிலாளர்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். அன்றாடம் கூலிவேலை செய்யும் நபர்களுக்கு தொழில் இன்மை. தொழிற்சாலைகளில் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருள் பெறுவதில் சிரமம். நாட்டில் மின்சாரம் மற்றும் நீர் கட்டணம் உயர்வடைந்துள்ளது. போதியளவான பணம் இன்மையால் அதனை செலுத்த முடியாமல் ஏழை மக்கள் அவதிப்படுகின்றனர். பொருளாதார வீழ்ச்சியினால் உள்நாட்டில் தொழில் பற்றாக்குறை, தொழில்புரியும் நபர்களின் தகைமைக்கு உரிய போதுமான பணம் கிடைக்காமை காரணமாக அதிகமான நபர்கள் வெளிநாட்டிற்கு தொழில் நிமிர்த்தம் செல்கின்றனர்.

வைத்தியசாலைகளில் மருந்துத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் நோயாளிகளைப் பரிசோதிக்க உரிய உபகரணங்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அத்தோடு எரிபொருள் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. இவை மக்களுக்கு பெரும் சவாலுக்குரிய பிரச்சினைகளாக இருக்கின்றன. அத்தோடு எரிவாயுக்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படுகின்றமையினால் மக்கள் அதனை வரிசையில் காத்திருந்து பெற வேண்டிய நிலை உள்ளது. இதன்போது சில சமயங்களிள் சனநெரிசல் மற்றும் காத்திருப்பு காரணமாக மக்கள் தள்ளுண்டு அவர்களுக்கு பலத்த காயங்கள் மற்றும் உயிரிழப்புக்களும் ஏற்பட்டதுண்டு.

கல்வி கற்பதற்கு அவசியமான பொருட்கள் மற்றும் உபகரணங்களின் விலை அதிகரிப்பினால் பெற்றோர்கள் அவற்றை பிள்ளைகளுக்கு வாங்கிக்கொடுப்பதற்கு சிரமப்படுகின்றனர். அத்தோடு முக்கிய சவாலாக தாள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளன. இதனால் பரீட்சைகள் பிற்போடப்பட்டுள்ளன. உரிய நேரங்களில் பரீட்சைகள் இடம் பெறாத காரணத்தால் மாணவர்கள் பல்வேறு இடையூறுகளை எதிர்கொள்கின்றனர். பஸ் கட்டணம் அதிகரிப்பினால் பொதுமக்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். அரச சேவையில் பணிபுரியும் நபர்கள் பஸ்கட்டணம் செலுத்தவே அதிக தொகை வேண்டும்

என கருதி அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தும் படி அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைத்தனர். அதை அரசு நிறைவேற்றாத பட்சத்தில் வேலை நிறுத்தம் செய்தார்கள். இதனால் இவர்களின் சேவையை நம்பியிருக்கும் பொது மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இலங்கை நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவாக மாபெரும் பிரச்சினைகளை மக்கள் எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றால் மக்கள் கடனாளிகளாக மாறி அதனை திருப்பிச்செலுத்த முடியாமல் மற்றும் பொருட்களை அடைமானமாக வைத்து அதனை மீட்க முடியாமல் அவதிப்படுகின்றனர். மனவேதனைக்கு உட்பட்ட மக்கள் அரசுக்கெதிராக பல போராட்டங்களையும் நடத்தினர். பசி, பட்டினி, வறுமை போன்றவற்றால் நாட்டில் களவு, மோசடி, கடத்தல், போதைப்பொருள் விற்பனை போன்ற குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. இவ்வாறான நெருக்கடியிலிருந்து இலங்கை நாடு மீண்டுஎழுந்து எழுச்சி பெற பல்வேறு தீர்மானங்களை ஆலோசித்து உரிய திட்டங்களை வகுக்க வேண்டும். நிதிக்கொள்கைகளை வகுக்க வேண்டும். உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். பசளைகள் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டும். பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டு அவை ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். சுற்றுலாத்துறை மேம்படுத்தப்பட வேண்டும். விவசாயம் மற்றும் ஏனைய பயிர்ச்செய்கைகள் மேம்படுத்தப்பட வேண்டும். எனவே இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக இலங்கை நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுவித்து மீள் எழுச்சி பெறச்செய்யலாம்.



**M.H.F HUSNA** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES &
ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY
OF SRI LANKA

# இலங்கையின் தற்கால நிலையும் அது இலங்கை மக்கள் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களும்

உலகம் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் மாற்றங்கள் என்பவை இன்றியமையாதவை ஆகும். பொதுவாக இன்றைய உலகில் மக்கள் அனைவரும் இன்னல்கள் இன்றி வாழவே ஆசைப்படுகின்றனர். ஆயினும் நவீன காலத்தில் ஏற்பட்ட பல மாற்றங்கள் காரணமாக இலங்கையின் தற்போதைய நிலையில் பாரிய ஒரு வீழ்ச்சியினை நாம் காணலாம். மேலும் மக்களுக்கு அன்றாட வாழ்வும் கேள்விக்குறியாக மாறிவிட்டது. ஏனெனில் இங்கு மக்கள் படும் இன்னல்கள் எண்ணிலடங்காதவையாக அதிகரித்து வருகின்றதே தவிர குறைந்த பாடில்லை. இவ்வாறான சூழ்நிலை மக்கள் வாழ்வில் தாக்கம் செலுத்துவதனை தவிர்த்து விடமுடியாதுள்ளது.

இலங்கையின் தற்கால நிலையினைப் பொறுத்த வரையில் பல மாற்றங்களை நோக்கி அது தள்ளப்பட்டிருப்பதை எம்மால் காணக்கூடியதாக உள்ளது. அந்த வகையில் பலதரப்பட்ட மக்கள் வாழ்வாதாரமின்றி, உணவின்றி தவிக்கும் நிலையும் தற்காலத்தில் உருவாகி இருப்பதனை அறிய முடிகின்றது. ஏனெனில் மக்களை வழி நடத்துவதற்கு சரியான வழிமுறைகளும் காணப்படவில்லை. ஆனாலும் ஆரம்பத்தில் இலங்கை முன்னேற்றமடைந்து வரக்கூடிய வகையில் பல திட்டங்களை மேற்கொண்டு முன்னேற்றம் அடைந்து வந்தது. ஆனால் நாட்டில் ஏற்பட்ட கோவிட்-19 காரணமாக அவை அனைத்து வகையிலும் பாரிய வீழ்ச்சியை காணத்தொடங்கியது. மாணவர்களது கல்வி நடவடிக்கைகளை கூட முன்னெடுக்க முடியாத நிலைக்கு அனைவரும் தள்ளப்பட்டனர். இதனை அரசாங்கத்தினாலும் கட்டுப்படுத்துவது என்பது சற்று சிரமமான விடயமாக காணப்பட்டது என்பதே உண்மை நிலையாகும். மேலும் இக்காலப் பகுதியில் ஊரடங்கு சட்டங்களும் பிறப்பிக்கப்பட்டன. இதனால் உணவு, தொழில், கல்வி என்பவற்றில் பல தட்டுப்பாடுகளும் இன்னல்களும் ஏற்பட்டன.

இவ்வாறான நிலையினால் மக்கள் பல பாதிப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய

ஏற்பட்டது. பிரதானமாக தங்களின் பிள்ளைகளின் எதிர்காலம் என்ன? அவர்களால் பாடசாலை செல்ல முடியாதா? அவர்களுக்கான கல்வி முறையாக வழங்கப்படுமா? என்றவாறெல்லாம் பயந்தனர். அதனை தொடர்ந்து Zoom தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டு கல்வி நடவடிக்கைகள் உடனடியாக முன்னெடுக்கப்பட்டது. ஆயினும் பாடசாலைக்கு செல்லாமல் Zoom வசதி இன்றிய மாணவர்கள் இதனால் பல இன்னல்களை எதிர்கொண்டனர். வெளிநாட்டில் இருந்து இலங்கை வருவதற்கும் இலங்கையில் இருந்து வெளிநாடு செல்வதற்கும் தற்காலிக தடை, ஊரடங்கு உத்தரவு சட்டங்கள் என்பன பிறப்பிக்கப்பட்டன. மேலும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது இதனால் பலர் உணவின்றி கஷ்டங்களை எதிர்கொண்டனர். பாடசாலைக்கும் பல மாணவர்கள் செல்லாது, தமது அன்றாட தேவைகளை கூட நிவர்த்தி செய்ய முடியாத நிலை காணப்பட்டது. சிலர் தற்கொலையும் செய்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஏனெனில் இவ்வாறான பற்பல இன்னல்களுக்கு மக்கள் முகம் கொடுத்தனர்.

மேலும் பணவீக்கம் அதிகரிக்க தொடங்கியதனால் இன்னும் பாரிய வகையில் மக்கள் பாதிக்கப்பட்டனர். அதனால் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ந்ததுடன் மக்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகினர். எரிபொருள் தட்டுப்பாடு நிலவியது. மற்றும் அதனை பெற தற்போதும் மக்கள் வரிசையாக நிற்பதனை எம்மால் காணக்கூடியதாக உள்ளது. ஏனெனில் அத்தியாவசியமான அனைத்தையும் மக்கள் பெறுவது சிரமமாகியது. அத்துடன் சுற்றுலா பயணிகள் வருகை இன்மையால் ஹோட்டல்கள் வெறுமையாகின. இதுவும் பாரிய பொருளாதார வீழ்ச்சிக்கு வழி சமைத்தது. இதுவே இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் சந்தித்த மிகவும் மோசமான நெருக்கடியான நிலையாக காணப்படுகின்றது. மேலும் இவ்வாறான பொருட்களின் விலைகளின் அதிகரிப்பு, தேவைகளை பெற முடியாமை போன்றவற்றினை ஏற்க முடியாது மக்கள் பல ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர். ஆயினும் அனைத்து விதமான பொருட்களின் விலையும் அதிகரித்தே தற்போதும் காணப்படுகின்றது. எனவே முன்னைய காலத்தினை விட தற்காலத்தில் உள்ள மக்கள் தம் சகல தேவைகளையும் நிறைவேற்றுவதில் பாரிய சிக்கல்களை எதிர்கொண்ட வண்ணமே காணப்படுகின்றனர்.

எனவே, இவ்வாறான பல தாக்கங்களை மக்கள் எதிர்கொண்டும் , பல சவால்களுக்கு முகம் கொடுத்த வண்ணமும் தங்களின் முன்னேற்றகரமான வாழ்வினைத் தேடி நகர்ந்து கொண்டே இருக்கின்றார்கள் என்பது எம்மால் புறக்கணிக்க முடியாத உண்மையாக காணப்படுகின்றது. மேலும் “கூடி வாழ்ந்தால் கோடி நன்மை” என்பதற்கு இணங்க அனைவரும் நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைக்கின்றனர். எனவே நாமும் இவற்றினை உணர்ந்து செயற்படுவோமாக!

**N. NASEEHA BANU** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

# இலங்கையின் தற்கால நெருக்கடி நிலைகளும் அது இலங்கை மக்கள் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களும்

உலக நாடுகளின் வரிசையில் அனைத்து துறைகளிலும் சிறப்புற்று விளங்கும் நாடுகளில் எமது நாடான இலங்கையும் ஒன்றாகும் சமீப காலமாக இலங்கையானது பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதை நாம் அறியக்கூடியதாக உள்ளது. காரணம் எமது நாட்டின் தற்கால நடைமுறைகளே ஆகும்.குறிப்பாக பொருளாதாரம், போக்குவரத்து, ஏற்றுமதி ,இறக்குமதி, உற்பத்தி துறைகள் போன்ற அனைத்தும் பின் தங்கிய நிலையிலே காணப்படுகின்றது. இதனால் எமது நாடானது பல இன்னல்களை எதிர்நோக்கி பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியும் உள்ளது.

குறிப்பாக இந்நெருக்கடிகளுக்கு அடித்தளமாக கோவிட்-19 தொற்று நோயினை குறிப்பிட முடியும் இந் நோய்ப் பரவலானது, இலங்கையை வறுமைக்கு இட்டுச் சென்று பாதகமான விளைவுகளைத் தோற்றுவித்தது மட்டுமல்லாமல் 2019 இல், மனிதன் உழைப்புகள் இன்றி முடக்கப்பட்டு அவனது இயல்பு நிலையானது மாற்றப்பட்டும் வழமைக்கு மாற்றமான செயல்பாடுகளை எதிர் நோக்கக்கூடிய வகையிலும் காணப்பட்டன. இதன் விளைவுகள் உலகளாவிய ரீதியில் விமர்சிக்கப்படக்கூடிய ஒன்றாகவே காணப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து 2020 இல் கடன் தர மதிப்பீடு சர்வதேச மட்டத்தில் குறைக்கப்பட்டும் சந்தை வாய்ப்புகளுக்கான திறமைகளை படிப்படியாக எமது நாடானது இழக்கவும் நேரிட்டது.இருப்பினும் அதற்கான முதலீடுகளை கடன் என்ற அமைப்பில் பெற்றுக் கொண்டு, எமது நாட்டின் இருப்பினை இன்னொரு நாட்டின் மீது தங்கி இருக்கக்கூடிய ஒரு நிலைப்பாட்டையும் தோற்றுவித்திருந்தது. அவ்வாறே இந்நிலை தற்காலத்தில் 4.8% மான பொருளாதாரம் ஆனது சுருங்குவதற்கும் போக்குவரத்து பிரச்சினைக்கும் அடித்தளமாகவே காணப்பட்டது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் நாட்டின் இயல்பு நிலையினை மாற்றக்கூடிய நிலைப்பாடாக தலைமைத்துவ அதிகார மாற்றமும் செல்வாக்குச் செலுத்தியது. இச்செற்பாடானது உற்பத்தி துறை மற்றும் பொருட்களுக்கான விலை உயர்வு, நிதி பற்றாக்குறை, நாணய தேய்மானம், இரசாயன உரங்கள் உற்பத்தி, விவசாயம் போன்ற அனைத்தையும் பாதிப்படையச் செய்தது.பொதுவாகக் கூறின் நாட்டின் அத்தியாவசிய பொருட்களான எரிவாயு, மருந்துகள், சமையல் எரிவாயு ,போன்ற நாட்டிற்குத் தேவையான உள்ளீடுகள் பற்றாக்குறையும் இறக்குமதிக்கு தேவையான முதலீடுகளும் பின்தங்கிய நிலைக்கு இட்டு செல்லப்பட்டு வெளிநாட்டு கடன் சேவைகள் அதிகரித்தும் மக்களிடையே பல்வேறு முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டும்

சேவைகள் அதிகரித்தும் மக்களிடையே பல்வேறு முரண்பாடுகள் தோற்றுவிக்கப்பட்டும் தங்களுக்கு தேவையான வளங்களை பெற்றுக் கொள்ள முயற்சிக்கும் போது பல்வேறுபட்ட எதிர்ப்புக்களையும் சந்திக்க நேரிடுகின்றது.

அது மட்டுமல்லாமல் பணவீக்கம் குறைவடைந்ததனால் பொருட்களுக்கான கேள்விகளும் உயர்வடைந்து தங்களது உணவுத் தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கும் 8-15 வீதமான (மத்திய வங்கி கணக்கெடுப்பு) மக்கள் தொகையினர் பட்டினியில் பாதிக்கப்படக் கூடியவர்களாக காணப்படுகின்றனர்.மாறாக பரந்தளவில் அரச வருமானம் உள்ளோர்களின் பணப்புழக்கமும் சாதாரண உழைப்பாளர்களின் பணப்புழக்கங்களுக்கும் இடையிலான வேற்றுமைகளும் தற்கால நெருக்கடி நிலைமைகளை உணர்த்தக்கூடிய ஒன்றாகவே காணப்படுகின்றது .மேலும் நீண்ட கால உழைப்பும் அவர்களின் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய நிலைமைகளும் போட்டி நிறைந்ததாகவும் காணப்பட்டு வருகின்றது.
நாட்டின் நிலைமைகள் நெருக்கடி மிக்கதாக காணப்பட்டிருந்தாலும் அவற்றில் சில சாதக நிலைமைகளும் தோற்றம் பெற்று வரக்கூடியதாக உள்ளது அதாவது வளங்கள் குறைவடைந்ததனால் இருக்கின்றவற்றினை பொறுப்புள்ள விதங்களில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற உணர்வும் வீண்விரய பாவனை,வீண் செலவுகள் போன்ற அனைத்தும் குறைக்கப்பட்டு சேமிக்கக்கூடியவனாக மனிதனானவன் மாற்றம் பெற்று வருகின்றான்.இவ்வாறான நிலைப்பாடானது ஒரு விதம் நன்மை தரக் கூடியதாகவும் உள்ளது.

எனவே இவ்வாறான தற்கால நடைமுறைகளை சற்று தளர்த்தெறிவதற்கும் எமது நாடானது கடனிலிருந்து மீள்வதற்கும் பல்வேறு முயற்சிகளை எடுப்பது சிறந்ததாகும். எமது நாடு முன்னேற்றமடைய மனிதர்களாகிய ஒவ்வொருவரும் தனது உழைப்புகள் மற்றும் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கு நாட்டின் நிலைமையானது சீர் பெற்று அதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் ஊடாகவே மேற்கூறப்பட்ட அசௌகரியமான நிலைமைகளை உடைத்தெறிய முடியும்.மேலும் தனது குடும்பம் சமூகம் சிறப்புற்று வாழ்வதற்கும் நாட்டின் செல்வாக்கானது திறம்பட்டு காணப்படுவதற்கும் இயற்கை வளம், போக்குவரத்து துறை ,பொருளாதார ஏற்றுமதி,இறக்குமதி போன்ற அனைத்து துறைகளும் சிறப்புற்று விளங்குவதற்கும் எமது நாடானது பழைய நிலைக்கு திரும்ப வேண்டும் என்பதனை யாராலும் மறுக்க முடியாது.

‘‘பாழடைந்த கிணற்றைப் போல் முடங்கிய இலங்கையை செழிப்படைய செய்வோம், சவால்களை உடைத்தெறிவோம்,’’



# இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி

M.R.F. RISNA 3RD YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

இன்று உலகமே உற்று நோக்கும் விடயமாக இலங்கையின் பொருளாதார நெருக்கடி உருவாகி உள்ளது.ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான இலங்கையின் அரசாங்கம், தொடர்ச்சியாக அடுக்கடுக்கான கொள்கைப் பிழைகளை மேற்கொண்டது. இதன் விளைவாக, இலங்கைக்குப் பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இலங்கைக்கு மூன்று வழிகளில் அதிகமான வருமானம் கிடைக்கின்றது. தேயிலை, ஆடை உற்பத்தி, சுற்றுலா என்பவையே அவையாகும் இலங்கையின் பொருளாதாரத்தில் இந்த மூன்று துறைகளில் பெரும் பங்களிப்பை வழங்குகின்றன. இந்த வழக்கத்தை 2020ஆம் ஆண்டில் வந்த கொரோனா உடைத்தெறிந்தது என்றே கூற வேண்டும்.2020 மார்ச் மாதம் முதல் இலங்கையும், அண்டைய நாடுகளும் சர்வதேச விமான சேவைகளை நிறுத்தின. நாடும் முடங்கிப் போனது. பொருளாதாரத்தின் தூண்களாக காணப்பட்ட தேயிலை, ஆடை உற்பத்தி, சுற்றுலாத்துறை என அனைத்தும் முற்றிலுமாக பாதிக்கப்பட்டன.இந்த மூன்றையும் தவிர வேறு எந்த நிரந்தர வருமானமும் இல்லாத இலங்கை படிப்படியாக பொருளாதார பின்னடைவை சந்திக்க தொடங்கியது.

பிற நாடுகளின் நாணய மதிப்பில் ஒரு நாடு வைத்திருக்கும் பணமே அந்நிய செலவாணி கையிருப்பு எனப்படுகின்றது. வங்கி பத்திரங்கள்,கடன் பத்திரங்கள், வைப்பு நிதி போன்ற பல வழிகளில் அந்நியச் செலவாணி ஈட்டப்படுகின்றது. பொதுவாக ஒரு நாட்டின் மத்திய வங்கியே இவற்றை பேணும். ஒரு குறிப்பிட்ட அளவில் அந்நிய செலவாணியை கையிருப்பில் வைத்திருப்பது பாதுகாப்பானது.தங்களது நாட்டின் நாணய மதிப்பு குறைந்தாலோ வேறு வகையிலான நிதி நெருக்கடி ஏற்படும்போதோ இது கைகொடுக்கும்.பெரும்பாலும் அமெரிக்காவில் டொலர்களிலேயே அந்நிய செலவாணி வைக்கப்படுகின்றது. உலகத்திலேயே சீனாதான் அதிக அந்நிய செலவாணியை கையிருப்பில் வைத்திருக்கும் நாடாக அமைகின்றது. உலக வங்கியின் மதிப்பீட்டின்படி அந்த நாட்டின் அந்நியச் செலவாணி கையிருப்பு 3.35 திரில்லியன் டொலர்கள்.

இந்த மதிப்பு இலங்கையைப் பொறுத்த வரையில் சுமார் 2 பில்லியன் டொலர்களாக குறைந்திருக்கிறது. இலங்கைக்கான வரவு குறையத் தொடங்கியதால் இலங்கையின் மத்திய வங்கியின் கையிருப்பில் இருந்த அந்நிய செலவாணி தொடர்ச்சியாகவே வீழ்ச்சியடைந்து இருக்கின்றது. இது பொருளாதார நெருக்கடியின் ஆபத்தை

உணர்த்தக் கூடியது எனக் கூறின் மிகையாகாது. அண்மைக் காலத்தில் இலங்கையில் பல பொருட்களின் விலை 2 மடங்கு வரை உயர்ந்திருந்தது. இதற்கு கொழும்பு பல்கலைக்கழக பொருளாதாரப் பேராசிரியர் அமிர்தலிங்கம் இரண்டு வகையான காரணங்களை குறிப்பிட்டதாக செய்திகள் வெளியானது.அந்நிய செலவாணியின் இருப்பு குறைந்ததால் இலங்கை நாணயத்தின் நிகழ்வு தன்மையை பேணுவதற்காக ரூபாயின் மதிப்பை இலங்கையின் மத்திய வங்கி குறைத்தது.இதனால் பொருட்களின் விலை படிப்படியாக உயரத் தொடங்கியது. ஒரு டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு என்ற அளவிலிருந்து 2200 என்ற அளவில் இருந்து 275 ரூபாய்க்கு அதிகமாக சரிந்திருந்தது.

ரூபாயின் மதிப்பு சரிந்ததால் நாட்டில் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான விலைகள் மற்றும் கட்டணங்கள் திடீரென அதிகரித்தன. பெற்றோல், டீசல், எரிவாயு, பால்மா போன்ற அத்தியாவசிய பொருட்கள் அனைத்தும் இறக்குமதியை நம்பியிருந்தன. இவற்றுக்கு கொடுக்கும் அளவிற்கு இலங்கை வங்கிகளிடம் டொலர் கையிருப்பில் இருக்க வில்லை. இதனால் இறக்குமதி தடைபட்டதால் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விலையும் கட்டுப்பாட்டை இழந்து உயரத் தொடங்கின. உதாரணமாக கோழி தீவனம் கூட அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கின்றது. மேலும் பால்மா, சர்க்கரை, முட்டை, பெற்றோல், டீசல், எரிவாயு என முக்கியமான பொருட்கள் அனைத்தினதும் விலை உயர்ந்து இருந்தன. நாட்டின் முக்கியமான மின் உற்பத்தி நிலையங்கள் டீசலில் இயங்கக் கூடியதாக இருந்ததால் அவையும் உற்பத்தியைக் குறைத்தன அல்லது மூடப்பட்டன. மக்கள் பெற்றோல், டீசல், எரிவாயு சிலிண்டர், மண்ணெண்ணை ஆகியவற்றை நீண்ட வரிசையில் நின்று பெற்று வந்தனர். அதிக விலைக்கு விற்பனை செய்தாலும் கூட அத்தியாவசிய தேவைகளுக்காக அதனை தவிர்க்காமல் வாங்க முயற்சிக்கின்றனர். இருப்பினும் கடும் தட்டுப்பாடு நிலவுகிறது.இதனால் தகராறு ஏற்படுகிறது. வாகனங்கள் இயங்காததால் அத்தியவசிய சேவைகள் பாதிக்கப்பட்டன. உதாரணமாக இலவச மருத்துவ சேவை வழங்கும் மருத்துவமனைகளில் திடீர் ஆள் பற்றாக்குறையும், மருந்துகள் பற்றாக்குறையும் ஏற்பட்டிருந்தது என்றார் பொருளாதாரப் பேராசிரியர் அமிர்தலிங்கம்.

தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி போல சமகாலத்தில் கண்டதில்லை என பலர் குறிப்பிடுகின்றனர். ஏனெனில் பொதுமக்கள் அந்தளவுக்கு அல்லல்படுகின்றனர். இலங்கையில் 1970களில் காணப்பட்ட பஞ்ச நிலையை விடவும் தற்போது நாட்டில் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.மேலும் இலங்கைக்கு சுமார் 50 பில்லியன் டொலர் வெளிநாட்டு கடன் இருக்கின்றது என மதிப்பிடப்படுகிறது.

அதில் சுமார் 7 மில்லியன் டொலர் டொலர்களை இந்த ஆண்டே செலுத்த வேண்டி இருக்கின்றது. ஆனால் இலங்கையின் கையிருப்பில் இருப்பதோ 2.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டுமே. இலங்கை சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் நிதி உதவியை நம்பி இருக்கின்றது. ஒரு பில்லியன் டொலர் அளவுக்கு இந்தியா கடன் வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.இலங்கைப் பொருளாதாரம் ஸ்திரத்தன்மையை அடைவதற்கு கடன் மறு சீரமைப்பும், ஆழமான சீர்திருதத்த திட்டங்களும் அவசியமானவை என உலக வங்கி தெரிவித்துள்ளது.மேலும் தீவிரமடைந்து வரும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு இலங்கை ஆழமான சீர்திருத்தங்களை துரிதப்படுத்துகின்ற இந்த தருணத்தில் நலிவடைந்த நிலையில் உள்ளவர்களை பாதுகாப்பது மிகவும் அவசியமாகும்.



# இலங்கை பற்றிய ஓர் கண்ணோட்டம்

R.M. IFRATH 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

இலங்கை ஒரு காலத்தில் வளமிக்க நாடாக இருந்ததை முன்னிட்டு அக்கால அரசர்கள் எம் தாயகத்தை ஆட்சி செய்தனர். அந்த வகையில் கால ஓட்டத்தில் பல இன அரசர்கள் அந்நிய நாட்டில் இருந்து படையெடுத்து ஒவ்வொரு அரசியல் தலைவர்களை நோட்டமிட்டு சதிமுயற்சியாலும் தந்திரோபாயத்தினாலும் பல உத்திகளைக் கையாண்டு எமது நாடான இலங்கைக்கு பாய்க்கப்பல் மூலமாக இயந்திர கப்பல்கள் இன்னும் எத்தனையோ வகையான சாதனங்களைப் பயன்படுத்தி இந்த நாட்டின் வளத்தை கைக்கொள்ள எத்தனித்தனர்.

இந்த மதிப்பு இலங்கையைப் பொறுத்த வரையில் சுமார் 2 பில்லியன் டொலர்களாக குறைந்திருக்கிறது. இலங்கைக்கான வரவு குறையத் தொடங்கியதால் இலங்கையின் மத்திய வங்கியின் கையிருப்பில் இருந்த அந்நிய செலவாணி தொடர்ச்சியாகவே வீழ்ச்சியடைந்து இருக்கின்றது. இது பொருளாதார நெருக்கடியின் ஆபத்தை உணர்த்தக் கூடியது எனக் கூறின் மிகையாகாது.அண்மைக் காலத்தில் இலங்கையில் பல பொருட்களின் விலை 2 மடங்கு வரை உயர்ந்திருந்தது. இதற்கு கொழும்பு பல்கலைக்கழக பொருளாதாரப் பேராசிரியர் அமிர்தலிங்கம் இரண்டு வகையான காரணங்களை குறிப்பிட்டதாக செய்திகள் வெளியானது.அந்நிய செலவாணியின் இருப்பு குறைந்ததால் இலங்கை நாணயத்தின் நிகழ்வு தன்மையை பேணுவதற்காக ரூபாயின் மதிப்பை இலங்கையின் மத்திய வங்கி குறைத்தது.இதனால் பொருட்களின் விலை படிப்படியாக உயரத் தொடங்கியது. ஒரு டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு என்ற அளவிலிருந்து 2200 என்ற அளவில் இருந்து 275 ரூபாய்க்கு அதிகமாக சரிந்திருந்தது.

இந்த வகையில் இங்கு வாழ்ந்த அக்கால மக்கள் சாதாரண குடிமகனாகவும் விவசாயிகளாகவும் வாழ்ந்த கால கட்டத்தில் இவர்களுடைய ஆதிக்கம் அதிகரிக்கப்பட்டு எமது நாட்டினுடைய பெண்களை இனம் மதம் பாராது திருமணமும் செய்து பல ஆட்சி விதிமுறைகளை ஏற்படுத்தி எப்படியோ இந்நாட்டை செழிமைப்படுத்தி வளப்படுத்தினார்கள்.

இதன் மூலம் எத்தனையோ இழப்புக்கள் இந்நாட்டில் ஏற்ப்பட்டு வெள்ளைக்காரர்களின் சூழ்ச்சியால் பல நாடுகளான இங்கிலாந்து, ஒல்லாந்து, ஜேர்மனி, ஜப்பான் போன்ற பல வல்லரசு நாடுகளின் ஆக்கிரமிப்பிற்குட்பட்டு பின்னர் 30ஆம் நூற்றாண்டு காலகட்டத்திலே இலங்கை நாட்டில் வெள்ளையராட்சி ஆதிக்கம் செலுத்தியது. இது பெரிய சரித்திரமாக திகழ்ந்ததை கடந்த கால வரலாறுகள் எமக்கு பாடம் புகட்டின.

பல நூற்றாண்டிற்குப் பின் எமது இலங்கை நாட்டில் மனித வளம் பெருகிய காலத்தில் அரசியல் உட்பூசல்கள் பெருகி யுத்தமுனை தவிர்க்கப்பட்டு பல நல்லாட்சியாளர்கள் வெள்ளையர் இனத்துடன் அந்நியொன்னிய உறவை ஏற்படுத்தி 1938 களில் எமது நாட்டில் சுதந்திரம் வேண்டி போராடிய கால கட்டத்தில் பல ஆண்டுகள் யுத்த கெடுபிடியில் சிக்கி 1942 இல் உலக மகாயுத்தம் தோன்றி அது ஒரு சில ஆண்டுகள் நீடித்து 1948 இல் பிரித்தானியர் வசம் இருந்த ஈழநாட்டை சுதந்திர தேசமாக பிரகடனப்படுத்தி ஒப்பித்த சான்றுகள் இன்றும் எமக்கு பாடமாக அமைந்துள்ளது.

இந்த நிலை வளர்ச்சியடைந்து நாட்டின் சுதந்திர வேட்கை அதிகரித்து மக்கள் நலன் காக்கப்படது. காலத்திற்கு காலம் வளர்ந்து வந்த காலகட்டத்தில் தான் எமது சுதந்திர தேசத்தின் எழுச்சி பல இன மக்களால் சின்னாபின்னமாக்கப்பட்டு தொற்று நோய் தாக்கத்திலும் பெரும்பான்மையின மக்களின் கெடுபிடியிலும் சிக்குண்டு அண்மைக்காலமாக எமது நாட்டில் அரசியல் புரட்சி தலைதூக்கியது.

வற்றாத ஜீவ நதி வளைந்தோடும் நாட்டில் வளமான சோலைகள் நிறைந்திருந்த சந்தர்ப்பத்தில் தான் எதேச்சதிகார அரசியல் பின்னணியில் பாதிக்கப்பட்டு பொருளாதாரத்தில் பின்னடைவு கண்டு பல துன்பங்களை மக்கள் அனுபவிக்க வேண்டிய நிலை தற்போது ஏற்ப்பட்டுள்ளது. இதனால் மக்கள் மீண்டு வர என்ன செய்வதென்று புரியாமல் தத்தளிக்கின்றனர் எனலாம். இது தற்போதைய சுதந்திர தேசத்தினதும் அதனுடைய குடிமகனினதும் கால சூழ்நிலையாகும். இந்த நாட்டில் நிலையான அரசியல் அமையவில்லை மிகவும் பின்னடைந்த நிலையில் எம் தேச மக்கள் சொல்லன்னா துயரத்தில் வாழ்கின்றார்கள் என்பதே மறைக்க முடியாத உண்மையாகும்.

பொருளாதாரம் குன்றியது கல்வி, கலை, சமூகப்பண்பாட்டு விழுமியம், விவசாயம் போன்ற இன்னோரன்ன துறைகள் பாதிக்கப்பட்டு வறுமை நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இத்தகைய நிலை மாற ஜனநாயக ஆட்சி தலைதூக்க வேண்டும் மக்கள் ஆட்சி நிலைக்க வேண்டும். எமது தேசம் மக்களுடைய அவலம் வெற்றி பெற இன்னும் எத்தனையோ யுகம் வேண்டுமென தோன்றுகின்றது. இவ்வாக்கம் மிகச்சுருக்கமாக படைக்கப்பட்டுள்ளது. நாட்டின் மகிமையை சொல்ல இவ்வேடு போதாது.

ஆகவே எம்நாட்டின் எழுச்சி இன்னதென்று சொல்வதற்கு முடியாதவிடத்து இங்கு வாழ் பல இன மக்களிடையே ஒற்றுமை, சகவாழ்வு, சகோதரத்துவம் போன்ற அம்சங்கள் உதயமாக வேண்டும். நபியும் புத்தரும் காந்தியும் இயேசு வும் புகழ்ன்றிட்ட பொன்மொழி மெய்ப்பிக்கப்பட வேண்டுமானால் கல்வியில் தேரிய சமுதாயம் எதிர்காலத்தை பயன்படுத்த வேண்டும். ஏற்றத்தாழ்வின்றி இந் நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். இதுவே எமது தாற்பரியமாக அமைய வேண்டும்.




# நாளைய தலைமுறையினரின் எதிர்காலம்!

**ROSNI HANEEFA** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

இலங்கையில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடியின் விளைவுகளும், தாக்கங்களும் அதிகரித்துக் கொண்டே நகரும் நாட்களில் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி மனோநிலை மிகவும் வீழ்ச்சிப் பாதையில் செல்கிறது என்பது கவலைக்குரிய விடயமாகும்.

இலங்கையில் 2019 இல் ஏற்பட்ட ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து நிகழ்ந்த ஊரடங்கு சட்டங்களும், திடீர் விடுமுறைகளுமே பாடசாலை, பல்கலைக்கழக நிர்வாக ஒழுங்குகள் சீர்குலைய ஆரம்பகர்த்தாவாக அமைந்தது. அதனைத்தொடர்ந்து வந்த கொவிட்-19 பெருந்தொற்றானது உலகையே உலுக்கி தன் வசப்படுத்தியதுடன் ஒரு கைப்பேசிக்குள் உலகம் அடங்கிப் போனது எனலாம். இதற்கு கல்விச் செயற்பாடுகளும் விதிவிலக்கல்ல. நிகழ்நிலைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நல்ல முறையில் இடம்பெற்றாலும் அசாதாராண சூழ்நிலைகள் காரணமாக இலங்கையில் இணையவழிக் கற்கைகள் தோல்வி கண்டது என்பதை கல்வி அமைச்சே ஏற்றுக்கொண்டது.

கொவிட் பெருந்தொற்றை நல்ல முறையில் கையாண்டு வெற்றிகொண்ட இலங்கை மீண்டும் மாணவர்களின் கல்வி செயற்பாடுகளை ஒழுங்குற வடிவமைத்து ஆரம்பித்த போது இலங்கையில் புகைந்து கொண்டிருந்த பாரிய பொருளாதார நெருக்கடி பூகம்பமாய் மாறியது. எரிபொருள் தட்டுப்பாடு, அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களின் அதிரடி விலை உயர்வு, எரிவாயு தட்டுப்பாடு, டொலர் பணவீக்கம், இலங்கை மத்திய வங்கியால் கூடுதலாக பணத்தாள் அச்சிடுதல் மேலும் பல காரணங்களால் ஏற்பட்ட நெருக்கடி நிலை உத்வேகம் அடைய வீதிக்கு இறங்கிய பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களாலும், போராட்டங்களாலும் தமக்கான உரிமைக் குரலை தாமே பெற்றுக் கொள்ள துணிந்தெழுந்தனர். இலங்கையில் ஆரோக்கியமான பொருளாதாரக் கட்டமைப்பென்பது சீர்குலைந்து நாடு மற்றும் நாட்டுப் பிரஜைகள் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுத்துள்ளமை தெள்ளத் தெளிவாகியுள்ளது.

இந்த நெருக்கடி நிறைந்த சூழலில் மாணவர்களின் கல்வி மனோநிலை மற்றும் உள, சமூக, ஆண்மீக மாற்றங்கள் ஆராயப்பட வேண்டிய விடயமாகும். அந்தவகையில் 2019 இல் இருந்து மாணவர்களுக்கு பாடசாலைச் சூழல் என்பதைத் தாண்டி வீட்டுச் சூழல் பழக்கப்பட்ட ஒன்றாக மாறியது. இதனுடன் சேர்த்தே மாணவர்களின் கல்வி மனோநிலை அபத்தமான நிலைக்கு தள்ளப்பட்டது.

கட்டிளமைப்பருவ மாணவர்களின் எதிர்பாற் கவர்ச்சி வீதம் சடுதியாக அதிகரிக்கலானது. காதல் வயப்படும் மாணவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்ததுடன் சேர்த்தே இலத்திரனியல் திரை அடிமையாதலும் அதிகரித்தது. இன்னும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் அரைப்புள்ளிகளில் முற்றுப்பெறாமல் இருக்க இணைப்பாட விதான செயற்பாடுகளும் மருவிய நிலையாக தொடர்ந்தது. மொத்தமாக மாணவர்கள் கல்வியைத் தேடுவதிலும், கற்பதிலும் ஆர்வம் காட்டவில்லை.

மிகவும் ஆபத்தான விடயமாக மாணவர்களில் அதிகமானோர் போதைப் பாவனைக்கு அடிமையாகியதாகும். முன்னைய நாட்களில் போதைப் பொருள் பாவனை ஆங்காங்கே காணப்பட்டாலும் இளைஞர்களே அதிகம் அடிமையாகி இருந்தனர். இன்றைய நெருக்கடி நிறைந்த சூழலில் மாணவர்கள் போதைக்கு அடிமையாகி இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

இன்னும் மாணவர்களின் இடைவிலகல்கள் ஒவ்வோர் பிரதேசங்களிலும் அதிகரித்துக்கொண்டே செல்வதை பல ஆய்வுகள் நிரூபிக்கின்றன. உயர்தரத்தில் கற்கும் மாணவர்கள், பல்கலை இளம் பட்டதாரிகளே அதிகம் இடைவிலகுவதாகவும், தமக்குப் பொருத்தமான சிறுவேலைகளை செய்து சம்பாதித்துக் கொள்ள எத்தணித்தும் இன்னும் வெளிநாடுகளுக்குச் செல்ல முயற்சித்தும், சென்றும் இருப்பதால் இலங்கையின் நாளைய தலைமுறையினரின் கல்விச் சமூக மலர்வு மற்றும் வாழ்தல் மனோநிலை கேள்விக்குறியாகியுள்ளது.

இலங்கையில் இலவசக் கல்வி முறைமை போற்றத்தகுந்த முறைமை என்று கூறப்பட்டாலும் இன்றைய நாட்களில் தனியார் நிறுவனங்கள், அமைப்புக்கள் ஒழுங்குபடுத்திய கட்டமைப்புக்களுடன் தமக்கேயான தனிச் சிறப்புக்களுடனும் வியாபார நோக்கில் விளம்பரப்படுத்தலின் அதீதத்தால் தனியார் வகுப்புக்களுக்கு அதிகம் முன்னுரிமை, முக்கியத்துவங்களை வழங்கி மாணவர்களைப் பாடசாலைச் சூழலை விரக்திப் பாங்கில் சித்தரித்து ஏனைய வகுப்புக்களை நல்ல முறையில் புலக்காட்சிப்படுத்தி மூலைச் சலவை செய்துள்ளமை அனைவரும் அறிந்தவிடயமே. ஆகவே இந்த தனியார் வகுப்புகளுக்கும் இன்றைய நாட்களில் அதிகமான மாணவர்கள் இடைவிலகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட பணத்தை செலுத்த போதியளவு வருமானமின்மையும், வறுமை தலைதூக்கியமையுமே இதற்கான காரணங்களாக குறிப்பிட முடியும்.

இவ்வாறே இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் நாளைய தலைவர்களின் கல்வி மனோநிலை அபாரமாக தாக்கமடைந்துள்ளது.

அதனைத்தொடர்ந்து மாணவர்களுக்கும் சமூகத்திற்குமான தொடர்புகள் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. சமூக வலைத்தள பாவனை, வீடியோ கேம்ஸ்களில் ஆர்வம் போன்ற விடயங்கள் மாணவர்களையும் சமூகத்தையும் தொடர்பற்ற ஒன்றாக மாற்றியுள்ளது. சமூக சிந்தனை, சமூக நல மனப்பாங்குகள் இன்றைய தலைமுறையினரிடம் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

அத்துடன் இன்றைய தலைமுறையின் உள மாற்றங்கள் வியப்பூட்டுவதாகவே அமைகின்றன. மாணவர்களிடம் காணப்படும் இலக்கற்ற மனோநினையும், எதிர்காலம் பற்றிய அச்சமும், குறிக்கோள்கள் அற்ற செயற்பாடுகளும் சிறந்த ஆரோக்கிய உளநிலைக்கு உகந்ததல்ல.

இத்தகைய கல்வி, உள, சமூக மனோநிலை மாற்றங்களை நேர்மறையாக மாற்ற நாம் என்ன செய்ய வேண்டும்?

- மாணவர்களுக்கு மத்தியில் மங்கிப் போன ஆண்மீகத்தை புத்துணர்வூட்ட வேண்டும்.
- பாடசாலைகளில் மதப் போதனைகள் அதிகரிக்க வேண்டும்.
- மாணவர்களுக்கு மத்தியில் விழிப்புணர்வு அரங்குகள், நிகழ்ச்சிகள் ஒழுங்கமைப்பட்ட வேண்டும்.
- வறுமைக் கோட்டு மக்கள் இணங்காணப்பட்டு நிதி உதவிகள்,ஸகாத் உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

விழுந்த ஓர் கல்விச் சூழல் மீண்டும் தலைதூக்க ஒன்றிணைவோம்...!

சிந்திப்போம்..! செயற்படுவோம்..!




# இலங்கையின் தற்கால நிலை


S.F. SAFANA 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA


நினைவுகளுக்கு முந்திய காலப் பகுதியிலிருந்தே இலங்கை அதன் இயற்கை அழகு மற்றும் செழிப்பான பன்முக கலாசாரம் என்பனவற்றின் காரணமாக உலகம் முழுவதும் இருந்து பயணிகளைக் கவர்ந்த ஒரு நாடாகும். இலங்கை 65610 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட ஒரு தீவாகும். இந்தியாவின் தென்முனைப்பகுதியில் இது அமைந்துள்ளது. இதன் சிறப்பான அமைவிடமானது பல நூற்றாண்டுகளாக உலகம் முழுவதும் உள்ள வர்த்தகர்கள் மற்றும் பயணிகள் மத்தியில் இலங்கையை மிகவும் பிரபலமான ஒரு இடமாக ஆக்கியுள்ளது.அவ்வாறு இருந்த போதிலும் தற்போது இலங்கை பல நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த 70 ஆண்டுகாலப்பகுதிகளுக்குள் மிக மோசமான நிதி நெருக்கடியை இலங்கை தற்போது எதிர்கொள்கிறது. ஈஸ்டர் தாக்குதல், கொரோனா தொற்றுநோயின் போதான பூட்டுதல்கள் மற்றும் உக்ரைன் ரஷ்யாவின் போர் என்பன காரணமாக சுற்றுலாத்துறை வருமானம் குறைவடைந்தமையால் பணவீக்கம் அதிகரித்துள்ளது. இருப்பினும் 2020 பெப்ரவரி ஆரம்பத்திலேற்பட்ட கொரோனா தொற்றுநோய் உள்ளிட்ட, தரவு விடயங்கள் நாட்டின் சுற்றுலாத் துறையில் குறைவான பாதிப்பினையே ஏற்படுத்தியிருந்த அதேநேரம் இப்பாதிப்பினை தகுந்த கொள்கைகள் மூலம் விரைவாக சீர்செய்திருக்க முடியும். இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பொருத்தமற்ற பொருளாதார தந்திரோபாயங்களால் ஏற்பட்ட தற்போதைய மோசமான நெருக்கடியானது இலங்கை அனுபவிக்கத் தொடங்கி உச்சமடைந்திருக்கின்றது.

நாட்டில் உணவுப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்ததோடு 22.2 மில்லியன் மக்கள் வசிக்கும் இலங்கை அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நாளொன்றுக்கு 7000 ரூபாவை செலவிடவேண்டிய நிலையும் காணப்படுகின்றது. அதேநேரம் வாழ்க்கைச் செலவு பலரால் தாங்க முடியாததாகிவிட்டதால் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி பாரிய போராட்டங்களில் ஈடுபட்டும் வருகின்றனர்.

பாரிய நாணய நெருக்கடி, உணவு, எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு, மின்சார துண்டிப்பு மக்களின் மற்றும் தொழிற்சாலைகளின் இயல்பு நடவடிக்கைகளை ஸ்தம்பிதமடையச் செய்துள்ளது. எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் பெற்றோல் நிலையங்களில் வரிசையில் நின்று நேரத்தை வீணடிக்கின்றனர். மேலும் அரசுக்கு சொந்தமான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 137 ரூபாவாக இருந்த ஒரு லீற்றர் பெற்றோலின் விலையை 338 ரூபாவாக அதிகரித்ததோடு டீசல் லீற்றரொன்றின் விலையையும் 104 ரூபாவில் இருந்து 289 ரூபாவாக அதிகரித்தது.

தற்போதைய நாட்டின் பேரிடி இலவச சுகாதார சேவையையும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. இலங்கைக்குத் தேவையான மருந்துகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. மருத்துவர்கள் நோயாளிகளுக்கு ஒளிரும் விளக்கு மூலம் சிகிச்சை அளிக்க வேண்டிய கட்டாயத்தில் காணப்படுவதோடு வடிகுழாய்கள், மயக்கமருந்துகள் மற்றும் கையுறைகள் போன்ற உபகரணங்களும் பற்றாக்குறையாகவே காணப்படுகின்றது.

உயர் பணவீக்கம் இலங்கை ரூபாவின் கொள்வனவு சக்தியை பாரியளவில் வீழ்ச்சியடையச் செய்துள்ளது. பல குடும்பங்களின் வருமானம் பாரியளவில் வீழ்ச்சியடைந்தமை மக்களை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு இட்டுச்சென்றுள்ளது. 2020 மார்ச்சில் அமுல்படுத்தப்பட்ட இறக்குமதி தடைகள், இயற்கை விவசாயக் கொள்கை, அத்துடன் உலகளாவிய ரீதியிலான பொருட்களின் விலை உயர்வு ஆகியவையும் பணவீக்க அழுத்தத்திற்கு பங்களிப்புச் செய்த காரணிகளாகக் காணப்படுகின்றன.

இதற்கு மேலாக அந்நியச் செலாவணி கையிருப்பை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட அனைத்து உர இறக்குமதிகளுக்குமான தடை விவசாய உற்பத்தியின் பாரிய வீழ்ச்சிக்கு வழிவகுத்ததோடு அதிக இறக்குமதிகளுக்கும் வழிவகுத்துள்ளது. இவற்றுக்கப்பால் உரம் மீதான தடை காரணமாக தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி ஏற்றுமதி வருமானத்தை வீழச்சியடையச் செய்தததது.

குறைந்த ஏற்றுமதி வருமானம் உணவு இறக்குமதியை குறைவடையச் செய்ததோடு உணவுப் பற்றாக்குறையையும் ஏற்படுத்தியுள்ளது. உலக வங்கியின் மதிப்பீட்டின்படி, இலங்கையில் ஐந்து இலட்சம் மக்கள் வறுமைக் கோட்டிற்குள் தள்ளப்பட்டுவிட்டனர். இது ஐந்தாண்டு கால வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது பெரும் பின்னடைவாகும். இதனை மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறையின் 2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டுக்கான நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.5 சதவீதம் குறைந்துள்ளதன் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

2020 ஏப்ரல் 8 மற்றும் ஜூன் 22 ஆம் திகதிகளில் மத்திய வங்கி வெளிநாட்டுப் இருப்புக்களிலிருந்து 1,007 மில்லியன் அமெரிக்க டொலர்களை அரசாங்கம் வெளிநாட்டுக் கடனுக்காகச் செலுத்தியமையால் ஏற்பட்ட 5-7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அந்நியச் செலாவணி கையிருப்பு வெளியேற்றம் தற்போதைய நெருக்கடியை மோசமாக்கியுள்ளமையுடன் பணநிரம்பலையும் அதிகரிக்க முடியாமால் போய்விட்டது. இந்நிலைமை நாட்டை பாரிய எரிபொருள் பற்றாக்குறைக்கு இட்டுச்சென்றுள்ளதுடன் தினசரி மின்வெட்டு, உணவு, மருந்துகள், சீமெந்து மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறையையும் ஏற்படுத்தியுள்ளது.

வெளிநாட்டு கையிருப்பு குறைவடைவதன் மற்றுமொரு தாக்கம் சர்வதேச மதிப்பீட்டு நிறுவனங்களிடையே இலங்கையின் இறையாண்மை மதிப்பீடுகள் குறைவடைந்து முதலீட்டாளர்களை பாதித்துள்ளது. அதாவது கடன் சேவையை செலுத்துவதிலுள்ள

தாமதம் காரணமாக நாடு அதிக அபாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளதால், இலங்கையில் முதலீடு செய்வதில் முதலீட்டாளர்கள் நம்பிக்கையை இழந்துள்ளனர்.

வரிக்குறைப்பு வரி வருமானத்தைக் குறைவடையச் செய்தமை பிரச்சினைகளை மேலும் தீவிரப்படுத்தியது. குறிப்பாக பெறுமதி சேர் வரி குறைக்கப்பட்டதோடு ஏனைய மறைமுக வரிகளான தேசத்தை கட்டியெழுப்பும் வரி, சம்பாதிக்கும் வரி மற்றும் பொருளாதார சேவை கட்டணங்கள் என்பன நீக்கப்பட்டன.

வங்கிகளில் வெளிநாட்டு நாணய பற்றாக்குறை காரணமாக இறக்குமதியாளர்கள் கடன், கடிதம் என்பவற்றைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கினர். இது பல கொள்கலன்களை துறைமுகத்தில் தேக்கமடையச் செய்தமையும் பொருட்பற்றாக்குறையை ஏற்படுத்தி விலை அதிகரிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியானது தனி ஒரு காரணத்தினால் மாத்திரமன்றி பல்வேறு காரணங்களின் தொடர்ச்சியான ஒரு கூட்டுக் கலவையாகயும் குறிப்பாக பொருளாதார வல்லுனர்களின் ஆலோசனைகளை கவனத்தில் கொள்ளாததனாலும் ஏற்பட்டவொரு பாரிய அவலமாகவே காணப்படுகின்றது.

இருப்பினும் நெருக்கடி தீவிரமடைந்துள்ள போதிலும் அவற்றை முகாமை செய்வதற்கான ஆலோசனைகளுக்கு கவனம் செலுத்துவதன் மூலம் தற்போதைய நெருக்கடி நிலைமையினை குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க முடியும்.



# இலங்கை நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகள்

**SUHAILA RISWAN** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

இன்றைய இலங்கை பொருளாதார நெருக்கடியால் பாரியளவு வீழ்ச்சியடைந்திருக்கிறது என்பது யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை. விலைவாசி உயர்ந்து நாணயத்தின் மதிப்பு சரிந்திருக்கிறது. இலங்கைக்கு செய்யப்பட்ட இறக்குமதிகள் அமெரிக்க டாலர்களையே சார்ந்திருந்தன. தற்போது டாலர் இன்மைப் பிரச்சினையால் அதுவும் முடக்கப்பட்டு பல தொழில்துறைகள் செய்வதறியாது திணறிக்கொண்டிருக்கின்றன. இதனால் பாதிப்படைந்த மக்களும் எதிர்க்கட்சிகளும் போராட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை தற்போது சந்தித்துள்ள நெருக்கடி முடிவுக்கு வருமா? அடுத்த நடக்கப் போவது என்ன? இதனால் அவதியுறும் மக்களுக்கு விடியல் கிடைக்குமா?

கடந்த காலங்களில் மக்களுக்கு சம்பாத்தியம் குறைவாக இருந்தாலும் அன்றாடத் தேவைகளை அதைக்கொண்டு பூர்த்தி செய்தும் கொண்டனர். ஆனால் இன்று இலங்கை மக்களுக்கு கையிருப்பில் பணம் இருக்கிறது. தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் அளவு பொருட்கள் இல்லை. அந்தளவு பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து மக்களை இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளி உள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் மக்களின் மத்தியில் இயற்க்கையாகவே எழும் கேள்வியாக இருப்பது இலங்கை நாணயம் வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் வேறொரு நாணயத்தை ஏற்றுக்கொள்ளும் சூழல் ஏற்படுமா? ஆனால் இச்சூழ்நிலை துளிகூட இல்லை என்கிறார் சந்திரசேகர். “இலங்கை பொதுவாக தன்னுடைய ரூபாயின் பெறுமதியை இழந்துக்கொண்டிருக்கின்றது. பாரிய முதலீடுகள், சர்வதேச நாடுகளின் உதவிகள் அல்லது நன்கொடைகள் கிடைப்பதன் ஊடாக, இந்த நிலைமையிலிருந்து மீளலாம். ஆகவே, அதன் அடிப்படையில் இன்னுமொரு நாட்டின் நாணயத்தை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கான அவசியம் இப்போதைக்கு இல்லை என்று கருத முடிகிறது.”

இலங்கைக்கு சுமார் 51 பில்லியன் டாலர்கள் கடன் இருப்பதாக கணிப்புகள்

அவற்றில் இந்த ஆண்டில் 7 பில்லியன் டாலர்கள் செலுத்தப்பட வேண்டியதாகவும் சுமார் 2 பில்லியன் டாலர்கள் மாத்திரமே தற்போது இலங்கையில் கையிருப்பில் உள்ளது.இப்படி இருக்க இலங்கையின் பொருளாதார நெருக்கடி எப்படி எப்போது முடிவுக்கு வரும்.

இலங்கையின் பொருளாதாரத்தில் சுமார் பத்து வீதம் சுற்றுலாத்துறை மூலமே கிடைக்கின்றது. அதன் பின் தேயிலை, ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணி கிடைத்தது. இதனைச் சார்ந்து தான் இலங்கையின் பொருளாதாரம் இயங்கிக் கொண்டிருந்தது. தற்போது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை கொவிட் தொற்று காரணமாக நாடு முடக்கப்பட்ட நிலையில் வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதி தடைப்பட்டு, சுற்றுலாத்துறை முடக்கப்பட்டது.இது பொருளாதாரத்தில் பெரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியது.

இதனால் பஸ் கட்டணம் முதல் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியவசியப் பொருட்கள் மற்றும் அதற்கான விலைவாசிகள் சடுதியாக கட்டுப்பாட்டை மீறி அதிகரித்திருக்கிறது. இது மக்களுக்கு தாங்க முடியாத சுமையைக் கொடுத்துள்ளது. சாப்பிடுவதற்கு உணவு இன்றி பட்டினியால் வாழ்ந்து மடிவதை விட மக்கள் தற்கொலை செய்து கொள்ளும் நிலையையும் நாம் காணக் கூடியதாக உள்ளது. எங்கு பார்த்தாலும் விலைவாசி அதிகரிப்பு, பொருட்கள் தட்டுப்பாடு, பால்மா, பெற்றோல், டீசல், கேஸ் போன்றவற்றிற்காக மக்கள் அன்றாடம் கடைத்தெருக்களில் வரிசையில் நிற்கும் நிலையைக் கடந்து இன்று அனைத்தும் சிக்கனமாக பயன்படுத்தும் ஒரு நிலையைப் பார்க்கக்கூடியதாக இருக்கிறது. இதனால் இன்று இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி வறுமையின் உச்சத்திற்கே கொண்டு சென்றுள்ளது.

எமது நாடு இந்த பாரிய வீழ்ச்சியிலிருந்து மீண்டும் பழைய நிலைக்கு வருமா? என்றால் கூட அது சாத்தியமற்றதே. எமது ஜனாதிபதி இதனைத் தீர்ப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தை அணுகினார். ஆயினும் ஐ.எம்.ஏ.ஃ.ப் கடன் வழங்கினால் கூட பழைய நிலைக்கு ஓரளவு மீள முடியுமே தவிர முழுமையாக மீள முடியாது.

ஆகவே, பொருளாதார நெருக்கடி என்று விமர்சனங்களை முன்வைத்து எமது காலங்களை வீணடிப்பதை விட அதற்கான மாற்று வழிகளைக் கையாள்வதே சிறந்தது. உணவுத்தட்டுப்பாட்டினைத் தீர்க்க உணவுகளை வீண் விரயம் செய்யாது எஞ்சிய உணவுகளை பக்கத்து வீடுகளுக்கு கொடுத்தல், நீரை சிக்கனமாகப் பயன்படுத்தல், எரிபொருள் தட்டுப்பாட்டினை சமப்படுத்த தேவையற்ற எண்ணங்களை குறைத்துக் கொள்ளல், சிறு பயணங்களாயின் துவிச்சக்கர வண்டி, நடந்து செல்லல் போன்றவாறான மாற்று வழிகளைக் கையாள்வதனூடாக இந்த நிலையை அதாவது பொருளாதார நெருக்கடியை எமக்கு பாதிப்பற்ற வகையில் அமைத்துக் கொள்ளலாம்.



# இலங்கையின் தற்கால நெருக்கடி நிலையும் அது இலங்கை மக்கள் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களும்

M.M.M. RASMY 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## இலங்கையின் தற்கால நெருக்கடி நிலை

நமது நாடான இலங்கையை பொருத்தமட்டில் உலகின் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் பட்டியலில் உள்ள ஒரு நாடாகும். ஆனால் தற்காலத்தில் இடம்பெறுகின்ற அரசியல் ,பொருளாதார, பௌதீக பிரச்சினைகள் மூலமாக இலங்கை ஒரு வளர்ச்சி அடைந்து வரும் நாடு என்ற சந்தேகம் எழுகின்றது. அப்பேற்பட்ட பல்வேறு பிரச்சினைகளை இலங்கை சந்தித்து வருகின்றது. அந்த வகையில் தற்கால நெருக்கடி நிலைகளைஎடுத்துக்கொண்டோமேயானால் அதனை ஒரு சில எடுத்துக்காட்டின் ஊடாக காணலாம்.

01. பொருளாதார நெருக்கடி
02. பணவீக்கம்
03. அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம்
04. அந்நிய செலாவணி கையிருப்பின்மை
05. கடன் பொறிச் சிக்கல்கள்
06. உரப் பிரச்சினைகள்

இதுபோன்று இன்னும் பல்வேறுபட்ட பிரச்சினைகளை இலங்கை நாடானது தற்கால சூழ்நிலையில் சந்தித்து வருவதனை நம்மால் காண முடிகின்றது. அந்த வகையில் இலங்கைக்கு மிக முக்கியமாக ஒரு சவாலாக காணப்படக்கூடிய பிரச்சினைகளில் உள்ள ஒரு விடயம் தான் “பொருளாதார நெருக்கடி” இதனை சற்று விரிவாக பார்ப்போம்.

## பொருளாதார நெருக்கடி

இலங்கை நாடானது பல்வேறுபட்ட வளங்களை தன்னகத்தே கொண்டு இயங்கக்கூடிய ஒரு நாடாகும். தேயிலை, நெல் ,போன்ற பெரும் போக பயிர்கள் இறப்பர், தென்னை, ஏலம், கறுவா போன்ற தானிய வகைகளை எடுத்துக் கொள்ளலாம். இதுபோன்ற பல்வேறுபட்ட வளங்களை கொண்டுள்ளது. இப்படியான பல்வேறுபட்ட வளங்களை கொண்டிருந்த நாடாக இலங்கை இருந்த போதிலும் அங்கு பலதரப்பட்ட பொருளாதார நெருக்கடிக்குள் தன்னையும் நாட்டு மக்களையும் ஆழ்த்தி இருக்கின்றது. என்பதில் எவ்வித ஐயமும் கிடையாது. இந்த பொருளாதார நெருக்கடியின் ஆரம்பகட்டத்தை எடுத்து நோக்கினோமேயானால் 2019 ஆம் ஆண்டிலிருந்து இன்றை வரைக்கும் இந்த ஒரு பிரச்சினையை இலங்கை சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றது. 2010 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் வெளிநாட்டு கடன் கடுமையாக உயர்ந்தது. இதன் காரணமாகத்தான் 2019 ஆம் ஆண்டு நாட்டின் மொத்த உற்பத்தி 88% ஆக எட்டியது. இதன் பின்னர் உலகில் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலை (கொரோனா வைரஸ்) தோற்றம் பெற்றது.

இது இவ்வாறு இருக்க 2021 ஆம் ஆம் ஆண்டு நாட்டின் வெளிநாட்டு கடன் நாட்டில் காணப்படக்கூடிய உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 101% எட்டியது. இதன் பின்புறமாக தான் 2022 அண்மை காலம் நாட்டில் பல்வேறு பாகங்களில் பல கலவரங்கள் பல போராட்டங்கள் மக்களால் அரசுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டது. என்பதனை எடுத்துக் காட்டலாம்.

இலங்கை நாடானது 2015 ஆம் ஆண்டு மைத்திரியின் ஆட்சியில் பல்வேறுபட்ட வளர்ச்சி கட்டத்தை நோக்கிய ஒரு பயணத்தை கொண்டிருந்த போதிலும், அவருடைய ஆட்சிக்காலம் முடிந்ததை அடுத்து இலங்கைக்கு ஒரு சாவகேடான ஆட்சியாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ ஆட்சி பொறுப்பினை பொறுப்பேற்றதிலிருந்து பல்வேறுபட்ட பொருளாதார சிக்கலுக்குள் இலங்கை தன்னை ஆழ்த்திக் கொண்டதை நம்மால் காண முடிகின்றது. அந்த வகையில் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ஏதுவாக அமைந்த காரணிகளாக:

1. 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் தேதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகள்.

2. அந்நிய செலாவணி கையிருப்பு இன்மையினால் பொருட்களை இறக்குமதி செய்வதில் பாரிய இன்னல்கள்.

3. பணவீக்கம் உயர்வு.

4. கொவிட்-19 பெருந்தொற்றில் இலங்கை பெரிதும் பாதிக்கப்பட்டமை.

5. இலங்கை மத்திய வங்கி அளவுக்கு அதிகமான பணத்தினை அச்சிட்டமை.

6. ராஜபக்க்ஷ குடும்பத்தினரின் பொருளாதார முறைகேடுகள்.

7. உலக நாணய நிதியம் இலங்கைக்கு உதவுவதில் கைவிரித்தமை.

8. 2022 ஆம் ஆண்டில் உக்கரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு.

இதுபோன்ற பலதரப்பட்ட காரணங்களினால் இலங்கை நாடானது பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியது. 2019 ஆம் ஆண்டு ஆட்சியை கைப்பற்றிய கோத்தாபய ராஜபக்ஷ அரசாங்கம் அவர்களது கொள்கை பிரகடனத்தில் பொருளாதாரக் கொள்கையில் பலதரப்பட்ட மாற்றங்களுக்கு பதிலாக பல தவறுகளை செய்தமை, இதற்கு மிக முக்கிய காரணமாக அமைகின்றது. அதில் மிக முக்கியமானது “அரசு நிதிக் கொள்கையில் வரி குறைப்பு செய்தமை”. இந்த வரிக்குறைப்பின் மூலம் இலங்கையின் பல்வேறுபட்ட எதிர்கால முன்னெடுப்புகளை மேற்கொள்வதில் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டன. பட்ஜெட் பற்றாக்குறை அரசாங்கத்திற்கு முதல் அடியாக காணப்பட்டது.

2020 ஆம் ஆண்டில் 5%ல் இருந்த இந்த பட்ஜெட் பற்றாக்குறை 2022ஆம் ஆண்டில் 15 வீதமாக உயர்ந்தது என அரச தகவல் வட்டாரம் கணக்கெடுப்பின் மூலம் வெளிப்படுத்தியது. இதன் காரணமாக 2022-ஆம் ஆண்டு அரசு செலுத்த இருந்த ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் உடன் மேலும் ஏழு பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படும் நிலை தோன்றியது. அப்பொழுது இலங்கை அரசிடம் 2.3 பில்லியன் டொலர் தான் கையிறுப்பில் இருந்தமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

இதன்படி தேசிய நுகர்வோர் குறியீட்டின்படி 2022 ஆம் ஆண்டு பெப்ரவரியில் 17.5% ஆக பணவீக்கம் அதிகரித்தது இதன் பின்னணியில் 2022ஆம் ஆண்டு ஜூனில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க இலங்கைக்கு தற்காலிக பொருளாதாரக் கொள்கை பிரகடனப்படுத்தினார். இது இலங்கை பொருளாதாரத்தை ஓரளவு சரிவு பாதையில் இருந்து இலங்கையை மீட்டெடுத்து, நாடு இன்னும் வழமைக்கு திரும்பவில்லை என்பது நாம் அறிந்த உண்மையாகும். இன்னும் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் இதுவரை பெரும் அளவில் குறைக்கப்படவில்லை.

தற்கால நெருக்கடி நிலைமை இலங்கை மக்கள் மத்தியில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியது. அவற்றுள் சிலவற்றை எடுத்து நோக்குவோம். அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றத்தால் நாட்டு மக்கள் பல அசௌகரியங்களை சந்திக்க நேரிட்டனர். அதாவது இலங்கை நாணயத்தின் பெறுமதியை விட இலங்கையில் காணப்படக்கூடிய பொருட்களின் பெறுமதி அதிகரித்தமையினால் மக்களுடைய பொருள் தேவையை பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் போனது. இது நாட்டு மக்களிடையே வறுமை நிலையை மேலோங்க செய்தது எனலாம் .போதிய வருமானம் இன்மையால் மக்களின் அன்றாட இயல்பு வாழ்க்கை பின்னடைவை நோக்கி நகர்ந்தமை குறிப்பிடத்தக்கது. இலங்கை விவசாய நாடு என்பதனை மறந்து உரத்தட்டுப்பாட்டு சட்டம் கொண்டு வரப்பட்டமையினால் விவசாயத்தை ஜீவனோ பாயமாகக் கொண்ட மக்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டனர். மக்களின் அன்றாட வருமானத்தை இழந்து தவிக்கும் நிலைக்கு நாட்டின் பொருளாதார நிலை, பாரிய செல்வாக்கு செலுத்தியது.

தற்கால நெருக்கடி நிலைமையானது கல்வித்துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது.எவ்வாறு என்றால் நாட்டிலே வருடம் தோறும் பட்டப்படிப்பை பூர்த்தி செய்து வெளியாக கூடிய பட்டதாரிகளின் வேலையின்மை பிரச்சினை அதிகரித்தமையைக் கூறலாம். இதனால் வேலையில்லா பட்டதாரிகள் தங்களுக்குரிய வேலையை பெற்றுத் தருமாறு கோரி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதை எம்மால் காண முடிகிறது. அத்தோடு 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற இருந்த பாடசாலை தேர்வுகள் அனைத்தும் காகிதத்தாள் தட்டுப்பாட்டின் மூலம் ஒத்திவைக்கப்பட்டது. இதனால் மாணவர்கள் பரீட்சை கலண்டரிற்கு அப்பால் அவர்களுடைய தேர்வுகளை மேற்கொள்வதில் சிரமங்கள் காணப்பட்டது.

பொருளாதார நெருக்கடி மக்களிடம் ஏற்படுத்திய தாக்கங்களில் மிக முக்கியமானதாக எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயு தட்டுப்பாடு என்பவற்றினை குறிப்பிடலாம். அந்நிய செலாவணி கையிருப்பு இன்மையினால் நாட்டில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் பற்றாக்குறையால் தான் இந்த இன்னல்களை சந்திக்க நேரிட்டது. அதிலும் நீண்ட வரிசையில் பல நாட்களாக காத்திருந்து எரிபொருள் பெற்றுக் கொள்ளும் நிலையே காணப்பட்டது .ஆனால் தற்போது இந்நிலைமை DR முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதனால் ஓரளவுக்கு மாற்றம் கண்டது எரிவாயு கட்டுப்பாடு காணப்பட்டபோதாகும்.

நாளாந்தம் இயங்கக்கூடிய 10 ஆயிரத்துக்கும் அதிகமான உணவகங்கள் மூடப்பட்டது. இதனால் உணவகங்களை நம்பி குடும்பத்தை கொண்டு செல்லக்கூடிய மக்களுக்கு பல்வேறு இன்னல்கள் ஏற்பட்டது. மின்சார தடை அமுல்படுத்தப்பட்டதும் மக்கள் மத்தியில் பாறிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒரு நாளைக்கு 4 - 5 மணி நேர மின்வெட்டு அமல்படுத்தப்பட்ட போது பாடசாலை மாணவர்கள் உட்பட பொதுமக்களும் பாதிக்கப்பட்டனர். 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் தெரு விளக்குகளை அணைக்கும் சட்டம் கொண்டுவரப்பட்ட போது அன்றாட தின தொழிலை நம்பி வேலைக்குச் செல்லும் பெண் தொழிலாளர்களின் தொழில் ரீதியான பங்களிப்பு வீதம் வீழ்ச்சி அடைந்தது. அது மட்டுமல்லாது கோவிட்-19 மூலம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் இலங்கை வருகை தடைபட்டதனால் சுற்றுலா பயணிகளை நம்பி தமது வாழ்வாதாரத்தை நகர்த்திக் கொண்டிருந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இன்னும் சுற்றுலாப் பயணிகளினால் நாட்டுக்கு கிடைக்கும் வருமானமும் தடைப்பட்டது. அத்தோடு சர்வதேச நிறுவனங்களில் தடை உத்தரவினை இலங்கை அரசாங்கம் 2021 ஆம் ஆண்டு மேற்கொண்டதினால் வெளிநாட்டு வருவாயில் குறைபாடும் காணப்பட்டது.

இலங்கை வாழ் மக்களை அரசியல் கட்சிகள் ரீதியாக மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் மூலமாக ஒழுங்கமைக்கப்பட்ட அரசுக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மக்களால் ஏற்படுத்த முயன்றமையும் தற்கால நெருக்க நிலைமையினாலேயே ஆகும். உதாரணமாக ஜனாதிபதி மாளிகை மக்களினால் கைப்பற்றப்பட்டமையை கூறலாம். இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட போராட்டக்காரர்களை தீவிரவாத குழு என்று அரசாங்கம் குற்றச்சாட்டில் அவர்களை கைது செய்தது. இதனால் இலங்கை ஒரு ஜனநாயக நாடு என்ற அந்த வரையறை மீறியது. எனவே இந்த நெருக்கடிகளை எல்லாம் ஒரு சவாலாக எண்ணி அவற்றை வெற்றிகரமாக முடிவெடுக்க வேண்டியது ஒவ்வொரு தனி மனிதனதும் பொறுப்பாகும்.

இலங்கையின் தற்கால நெருக்கடிகளை களைந்து,
நெருக்கடிகளற்ற இலங்கை நாடை உருவாக்குவோமாக!!!!




# இலங்கையின்

## தற்கால நெருக்கடி நிலையும் அது இலங்கை மக்கள் வாழ்கையில் ஏற்படுத்திய தாக்கங்களும்

**N.F. ISHRA** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES &
ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

இலங்கையில் தற்போது நிலவி வரும் நெருக்கடி நிலையை நாம் யாவரும் அறிந்தே உள்ளோம். அது எமது அன்றாட வாழ்கையில் ஏற்படுத்திய ஒவ்வொரு தாக்கங்களையும் அதன் விளைவுகளையும் இலங்கை மக்களாகிய நாம் தினமும் அனுபவித்து கொண்டே இருக்கின்றோம். தற்போது நிலவுகின்ற நெருக்கடியானது இலங்கை மக்களை பல்வேறு வழிகளிலும் பல்வேறு துறை சார்ந்தும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந் நெருக்கடியானது எவ்வாறு உருவாகியது? இது முற்று முழுவதும் பொருளாதாரத்தை மையமாக கொண்டு பொருளாதார வீழ்ச்சியால் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையாகும். இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட மிக மோசமான நெருக்கடி என்று இலங்கையின் முக்கியஸ்தர்களாலும் கல்விமான்களாலும் இது அடையாளப்படுத்தப்படுகிறது. இலங்கை இத்தகைய பாரியதொரு நெருக்கடிக்கு எவ்வாறு முகங் கொடுக்க நேரிட்டது என்பதை நோக்கினோமானால் 2019 இல் ஏற்பட்ட கொவிட் 19 தொற்று இந் நெருக்கடியின் ஆரம்பத்திற்கு வழிவகுத்ததுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. நாட்டின் முக்கிய இலாபமீட்டும் வழிமுறைகள் கொவிட் தொற்றின் காரணமாக முடக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்நிய செலாவணி வீழ்ச்சியடைந்தததது மட்டுமல்லாது ஏற்றுமதி, இறக்குமதிகள் முடக்கப்பட்டதோடு அவற்றை நம்பியிருந்த தொழில் துறைகளும் முடங்கின. அத்தோடு உலக நாடுகளுக்கான கடன் தொகையும் அதிகரித்ததுள்ளது. மேலும் இலங்கையின் நாணய மதிப்பு சரிவடைந்துள்ளதோடு விலைவாசியும் அதிகரித்ததுள்ளது.

மேலும் இந் நெருக்கடி மக்கள் வாழ்க்கையில் இலகுவில் சீர்செய்ய முடியாதளவு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 3 வருட காலமாக உலகை ஆக்கிரமித்த கொரோனா தொற்றினால் மக்கள் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர். தொழில்களை இழந்து, அன்றாட செலவுகளை செய்வதில் பெரும் சிக்கலுக்கு முகங்கொடுத்து சிறிது சிறிதாக மீள முயற்சித்துக்கொண்டிருக்கும் மக்களை பொருளாதார வீழ்ச்சியானது மேலும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது. இது அவர்களது

அன்றாட வாழ்க்கை, கல்வி, போக்குவரத்து, ஆரோக்கியம் மற்றும் அரசியல் என பல்வேறு துறைகளிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. அவை பற்றி அடுத்து நோக்குவோம்.

அதாவது தொழிற்துறைசார் பண்டங்கள் இறக்குமதி செய்யப்படுவதைப் போன்றே மக்களது அத்தியாவசியப் பொருட்களாகிய பால்மா, எரிவாயு, எரிபொருட்கள் என்பனவும் ஏனைய உணவுப்பொருட்களும் முற்றுமுழுதாக இறக்குமதியை நம்பியிருக்கின்றன. பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக இறக்குமதிகள் அனைத்தும் முடக்கப்பட்டதனால் இந்தப் பொருட்களுக்கு மிக மோசமான தட்டுப்பாடு நிலவியுள்ளதை காணலாம். பணக்காரர் முதல் ஏழை வரை நுகரக் கூடிய பாணின் விலை அதிகரித்திருப்பது போன்று அனைத்து உணவுப்பொருட்களும் விலையுயர்ந்துள்ளன. இதனால் உணவுக்கான பஞ்சநிலை உருவாகியுள்ளது.

மேலும் எரிவாயு, எரிபொருட்கள் மாதக்கணக்கில் இறக்குமதி செய்யாததன் விளைவாக போக்குவரத்து பாதிப்புக்குள்ளாகியது. போதுமானளவு வாகனங்கள் இயங்காததனால் வாகனங்களின் யன்னல்கள், பின்பகுதிகளில் தொங்கியவாறும் கூறைகளில் ஏறியவாறும் ஆபத்தான முறைகளில் மக்கள் பயணங்களை மேற்கொண்டனர். மேலும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் இவற்றை கொள்வனவு செய்வதற்காகவேண்டி நாள் கணக்கில் மக்கள் வெயிலிலும், மழையிலும் வரிசைகளில் தொடர்ச்சியாக நிற்க வேண்டி ஏற்பட்டது. பலர் இந்த வரிசைகளில் காத்துக்கொண்டவாறே மரணமடைந்தனர். எனினும் தற்போது இந்த வரிசைகள் இல்லாமலாகி இவற்றைப் பெற்றுக் கொள்ள முடிந்தாலும் அவற்றுக்கான விலை இன்னமும் குறையவில்லை.

மேலும், இலங்கையிலுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் டீசலில் இயங்கக்கூடியவை. அதற்குத் தேவையான எரிபொருள் தட்டுப்பாட்டின் காரணமாக நாட்டில் தொடர்ச்சியாக மின் வெட்டு நிலவுகின்றது. இது மக்களை மேலும் அசௌகரியத்திற்குள்ளாக்கியுள்ளது. அது மாத்திரமல்லாது வைத்தியசாலைகளில் நோயாளிகளுக்குரிய மருந்துகள் பற்றாக்குறையாகவும் வெற்றிடமாகவும் உள்ளது. இதனால் உரிய சிகிச்சைகளை மேற்கொள்ளவும் நோயைக்குணப்படுத்துவதற்காக வருபவர்களுக்கு நிவாரணமளிக்க முடியாத நிலமையும் ஏற்பட்டுள்ளது. மேலும் பொருளாதார நெருக்கடியின் விளைவினால் மக்கள் வீட்டிற்குள்ளே முடக்கப்பட்டு பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிட்டமையானது அவர்களை உளவியல் ரீதியாக பாதிப்புக்குள்ளாக்கியதை நாம் அறிவோம். இதனால் பல குடும்பத்தலைவர்கள் தனது குடும்பத்தை எவ்வாறு பராமரிப்பது என்ற பயத்தினால் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

மேலும் இப்பொருளாதார நெருக்கடியின் பாதிப்பின் இன்னொரு விளைவாக நமது மக்கள் இந்தியா போன்ற நாடுகளுக்கு அகதிகளாக சென்று தஞ்சம் புகுந்தமையை குறிப்பிடலாம். அது மாத்திரமல்லாது பொருளாதார வீழ்ச்சியினால் ஏற்பட்ட மிக மோசமான தாக்கமாக நாட்டில் பல இடங்களிலும் பிரச்சினைகள் கலவரங்கள் வெடித்ததைக் குறிப்பிடலாம். இந்த நெருக்கடிக்குப் பின்னால் பல அரசியல் சூழ்ச்சிகள், மோசடிகள் உள்ளது என்பதை தெரிந்து கொண்ட மக்கள் இதற்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென்றும் நியாயத் தீர்ப்பை வேண்டியும் மக்கள் பாதைகளிலும் அரச நிறுவனங்கள் முன்னிலையிலும் மாதக்கணக்கில் போராட்டங்களை நிகழ்த்தினர். இதன் போது பல உயிர்கள் பாதிக்கப்பட்டு உடைமைகள் சேதமாக்கப்பட்டன. இதன் விளைவாக அரசாங்கமும் மாற்றப்பட்டது. இதனால் நிலைமை ஓரளவு சீரடைந்து நீண்ட வரிசைகளுக்கான தேவை குறைந்தமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

இவ்வாறாக நாட்டில் நிலவும் இந் நெருக்கடியின் காரணமாக கடந்த 3 வருடங்களிலிருந்து இன்று வரை மக்கள் பலவிதமான தாக்கங்களுக்கு உட்பட்டதோடு பல சவால்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர். இந் நிலை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது கேள்விக்குறியாக இருந்தாலும் அரசாங்கம் மாறியதன் பிற்பாடு இந்நிலை ஓரளவு சீரடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே நாடு இந் நிலையிலிருந்து மீண்டு பழைய நிலையை அடையவும் மக்கள் நிம்மதியான ஓர் வாழ்வை வாழவும் நாட்டுப் பிரஜைகளாகிய நாம் அனைவரும் பொறுப்போடு ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமாக நல்லதொரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவோம்.

# நாட்டைப் புரட்டிய பொருளாதாரம்

**AROOSA JAWAHIR** 1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

இலங்கை அதன் பொருளாதார
நிலையால் உலக நாடுகளில்
" இல்லங்க" என்றளவுக்கானது

நான்கு புறமும் கடல் சூழ்ந்திருந்த
நாட்டை மொத்தமாய் பொருளாதாரம்
எனும் ஒரு கரும் இருட்டு
சூழ்ந்து கொண்டது

நாளுக்கு நாள் நாட்டின்
பொருளாதாரம் வீழ்ச்சி கண்டது
வீதிக்கு வீதி நாட்டு மக்கள்
போராட்டம் எழுச்சி கண்டது

பெற்றோல் வரிசைக்கு
பெற்றோர் செல்ல பச்சிளம் பிள்ளை
பால் இன்றி இறக்கும் ஒரு அவல
நிலை கண்டோம்

கார்களை வைத்துக் கொண்டு
கால் நடையாக திரயக் கண்டோம்
சிலின்டர்களை சுமந்து கொண்டு
சிறுவர்களும் அலையக் கண்டோம்

படிப்புகள் பாதியிலேயே
நிறுத்தப்பட்டதைக் கண்டோம்
பட்டதாரிகளும் கூலி
வேலை பார்க்கக் கண்டோம்

மூன்று வேளை உணவுக்கு செத்து செத்து
பிழைத்ததைக் கண்டோம்
சில நாட்களாக உண்ண உணவின்றி சிலர்
உயிரிழந்ததையும் கண்டோம்

நாட்டின் பொருளாதார நெருக்கடி
ஒவ்வொரு வீட்டையும் தாக்கியது
இன மத பேதமின்றி வீதிகளில்
போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும்
தலை தூக்கியது

இருப்பினும் நடப்பது நடக்கட்டும்
என அத்தியவசியப் பொருட்களின்
விலைகள் ஏறிக் கொண்டே போனது
நாட்டின் நிலையும் நாட்டு மக்கள் நிலையும்
ரொம்பவும் மோசமாக
மாறிக்கொண்டே போனது

இன மத பேதமின்றி மாற்றத்தை நோக்கி
கிளர்ந்தெழுந்தனர், நாட்டு மன்னரையே
தூக்கி எறிய திட்டம் தீட்டினர்

பல நாள் போராட்டம்
வெற்றியும் கண்டது
புதுத்தலைவரோடு
இப்போது புதிய தொரு
இலக்கை நோக்கி புதிதாய்
பயணிக்கிறது இலங்கை.

இலங்கை வளர்ந்து வரும் ஒரு நாடு மட்டுமல்ல ஆசியா கண்டத்திலுள்ள ஒரு வளமான நாடுமாகும். இவ்வளமான நாடானது கடந்த 2019 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு பொருளாதார நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. அந்தவகையில் 1948 இல் விடுதலை பெற்ற பின்னர் நாட்டில் ஏற்பட மிக மோசமான பொருளாதார நெருக்கடி இதுவாகும். 2010 ஆம் ஆண்டிலிருந்து, இலங்கையின் வெளிநாட்டுக் கடன் கடுமையாக உயர்ந்தது. 2019 இல் அது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 88% ஐ எட்டியது. கோவிட்-19 பெருந்தொற்றால் ஏற்பட்ட உலகளாவிய பொருளாதார மந்தநிலையின் தொடக்கமானது நெருக்கடியை விரைவு படுத்தியது. மேலும் 2021 ஆம் ஆண்டில், வெளிநாட்டுக் கடன், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 101% ஆக உயர்ந்தது. இதனால் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் 2022 இலங்கைப் போராட்டங்களுக்கு வழிவகுத்தன.

சுற்றுலா துறையானது இலங்கைக்கு வருமானம் வரும் முக்கிய துறையாக காணப்படுவதுடன் இச் சுற்றுலா துறை கோவிட் 19 தொற்றினால் அதிகம் பாதிக்கப்பட்டது. இதனால் நாட்டின் வருமானம் மேலும் குறைந்ததால் நாட்டின் பொருளாதாரம் நெருக்கடிக்கு உள்ளாகியது. இலங்கை பணமதிப்பு வீழ்ச்சி ஏற்பட்டதால் உணவுப் பொருட்களின் விலை உயர்வு ஏற்பட்டு பணவீக்கம் அதிகரித்தது. இவ்வாறாக அன்னியச் செலாவணி கையிருப்பு தீர்ந்து போனது நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணமாகியது.

இந்த நெருக்கடி நிலையானது இலங்கை மக்களின் வாழ்வாதாரத்தை பாதித்ததுடன் பல்வேறு நெருக்கடிகளையும் உருவாக்கியது. மக்களின் வாழ்க்கை இதனால் கேள்விக்குறியாக்கப்பட்டது. தொடர்ந்து பல மணி நேர மின்வெட்டு, பாடசாலைகளுக்கு தொடர்ந்து விடுமுறை அளிக்கப்பட்டதுடன் மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டது. மூன்று உணவு வேளையாக இருந்த இலங்கை மக்களின் உணவு வேளை இரண்டு வேளையாக ஒரு வேளையாக மாறியது.

**M.H. BANU** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES &
ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

# இலங்கை பொருளாதார ரீதியான ஓர் கண்ணோட்டம்



இந்த நெருக்கடியைச் சமாளிக்க இந்தியா,சீனா போன்ற நாடுகளில் கூடுதலாகக் கடன் வாங்கியது இலங்கை அரசாங்கம். நிதி உதவி பெறுவதற்காக அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிட்டன், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுடன் பேச்சு வார்த்தைகளும் நடாத்தப்பட்டன. நாட்டின் நிலைக்கு அரசே காரணம் என மக்களும் எதிர்க்கட்சிகளும் தொடர்ந்து குற்றம்சாட்டினர்.

இலங்கையில் சாதாரண குடிமக்கள் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் சமூக அமைதியின்மை மற்றும் எதிர்ப்புக்கள் ஏற்படக் காரணமாயிற்று. அத்தோடு மக்கள் இந்தியா போன்ற நாடுகளுக்கு கடல் வழியாக தஞ்சம் புகுகின்றனர். பெற்றோல், மண்ணெண்ணெய், அரிசி போன்ற அத்தியாவசிய பொருட்களுக்காக மக்கள் பல நாட்களாக வரிசையில் காத்திருந்ததோடு வரிசையிலே மக்கள் உயிரிழந்துள்ளனர்.

வேதி உரங்களுக்கு பாராளுமன்றத்ததால் தடை செய்யப்பட்டதோடு விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டது இதனால் விவசாயிகள், மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டனர். பல்வேறு போராட்டங்களின் பின் தடை நீக்கம் செய்யப்பட்டாலும் அதனை பெற்றுக் கொள்ள மக்களால் முடியாத நிலை உருவாகியதுடன் அரசாங்கத்தால் அதனை பெற்றுக் கொடுக்க கையிருப்பில் பணமும் இருக்கவில்லை.இதனால் விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டது.

மருந்து மாத்திரைகளின் இறக்குமதி தடைபட்டதால் நோயாளிகளுக்கு மருந்து வழங்க வைத்தியசாலைக்கு சவாலாக அமைந்தது.இதனால் பெரிதும் நோயாளிகள் பாதிக்கப்பட்டனர். சத்திர சிகிச்சைகள் இடைநிறுத்தம் செய்யப்பட்டதுடன் வைத்திய துறை அதிக பாதிப்புக்குள்ளாகியது.மாத்திரைகளின் விலை அதிகரிப்பினால் நோயாளிகள் மாத்திரைகளை வாங்குவதில் பாரிய சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இப்பாரிய நெருக்கடியினால் ஜனாதிபதி, பிரதமர் என்போர் மக்கள் புரட்சியால் மாற்றப்பட்டு புதிய அரசாங்கம் பாராளுமன்ற வாக்குகளால் நியமிக்கப்பட்டிருந்தாலும் இன்னுமே இலங்கை தீவானது பல சவால்களை எதிர்கொள்கின்றதோடு மக்களின் வாழ்க்கை செலவும் குறைந்தபாடில்லை. 22.2 மில்லியன் மக்கள் வசிக்கும் இலங்கை அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நாளொன்றுக்கு 7000 ரூபாவை செலவிடவேண்டிய நிலையும் காணப்படுகிறது.

ஆகவே அரசாங்கம் இறக்குமதி செலவினங்களைக் குறைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். அரசாங்கம் நிதி சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். விருத்தி முறையடிப்படையில் உள்நாட்டு வரி வருமானத்தை உயர்த்தக்கூடிய செயற்பாடுகள் குறிப்பாக வரிகளை அதிகரிப்பதனூடாக வரி வருவாயை அதிகரிக்க வேண்டும்.இதற்கான வழிமுறையாக இலங்கையின் உயர் வருமானப்பிரிவினர் அதிகளவு வரிகளை செலுத்தக் கூடியவகையில் வரிக்கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட வேண்டும்.

கடன் வாங்குவதைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, குறிப்பாக இறையாண்மைக் கடன்களை பெற்றுக்கொள்வது குறித்து கவனம் செலுத்தப்படலாம். அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவில் இருந்து பொருளாதாரத்தின் முதுகெலும்பான ஏழை மக்களைப் பாதுகாக்க சமூக இலக்கு நோக்கிய பாதுகாப்பு வலைத்திட்டத்தை செயல்படுத்துவது இன்றியமையாதாகும். வளம் பொருந்திய இந்நாட்டை கட்டியெழுப்ப வேண்டியது அரசாங்கத்தின் மட்டுமல்ல இலங்கை குடிமக்கள் அனைவரினதும் தலையாய கடமையாகும்.

# இலங்கையின் தற்கால நெருக்கடி நிலையும் அது இலங்கை மக்கள் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களும்



**N. NAHLA** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

தற்கால இலங்கை சூழலில் மக்கள் பல்வேறு வகையான சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். சமூகத்தில் தற்போது பல்வேறு நெருக்கடிகள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன.இலங்கையின் இந் நெருக்கடி நிலையானது ஒருபோதும் தீராதவை என்றே தோன்றுகின்றது. 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் பல தசாப்தங்களாக இச் சிறிய நாடானது தமிழ் மக்களுக்கெதிரான இன வன்முறைகள், இடதுசாரிக் கிளர்ச்சிகள், முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள், அரசியல் நெருக்கடி, ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிகள், சுகாதார நெருக்கடிகள், வேலைவாய்ப்பின்மை, அதுமட்டுமல்லாமல் பிரதான காரணமாகவும் தொடர்ச்சியாக நிலவும் பொருளாதார பிரச்சினையயும் மக்கள் முகங்கொடுத்த வண்ணமே உள்ளனர். அந்த வகையில் இவ்வாறான ஒவ்வொரு பிரச்சினைகளும் பல்வேறு கோணங்களில் காணப்பட்டாலும் தற்போது மக்கள் சவாலாகவே முகம் கொடுத்து வருகின்றனர். எனவே அவ்வாறான சவால்களின் ஒட்டுமொத்த பாணியை விளக்குவதாகவே இக்கட்டுரை அமைந்துள்ளது.

இன்றைய தற்கால சூழலில் ஆமை வேகத்தில் உயரும் சம்பளமும் முயல் வேகத்தில் அதிகரிக்கும் செலவுகளும் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு வழி வகுக்கின்றன. பொருளாதாரத்தைப் பற்றிய போதிய கல்வி அறிவில்லாத நம் இளைஞர்களின் நிலையோ கேள்விக்குறியாக உள்ளது. இலங்கையின் தற்போதைய நிலவரம் ஒரு பொருளாதார நெருக்கடி என்பதிலிருந்து மனித வாழ்க்கை நெருக்கடி என்ற நிலையை எட்டி வருகின்றது. அதாவது உணவுப்பொருள், எரிபொருள் அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் போன்ற அனைத்து நுகர்வு பொருள்களுக்கும் தட்டுப்பாடு,உணவுப் பொருள்களின் பாரிய விலையேற்றம், மருத்துவமனைகளின் இயக்கநிறுத்தம், முதலீடுகளின் முடக்கம் போன்ற தாக்கங்களினால் மக்கள் பாரிய சவால்களை தற்போது முகங்கொடுத்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்தோடு இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியானது பாமர மக்கள் முதல் படித்த சமூகம் வரை நேரடியாக பாதிப்புக்களை ஏற்படுத்தி உள்ளது என்பதை நம்மால் கண்கூடாக பார்க்கக் கூடியதாக உள்ளது. இப் பொருளாதார நெருக்கடியில் இருப்பதற்கு பல்வேறு காரணங்கள் துணை நிற்கின்றன.

அதாவது கொரோனா பாதிப்பால் வந்த ஊரடங்கு, வேலையின்மை, வெளிநாட்டுக் கடன்தொகை அதிகரிப்பு, பணவீக்கம், அண்ணியச்செலாவணி வருமானக் குறைப்பு, எரிபொருள் பற்றாக்குறை போன்றன பிரதான காரணங்களாக அமைகின்றன. இதனால் மக்கள் பெரும் இன்னலுக்குள்ளாகின்றனர்.

அத்தோடு அன்னியச் செலாவணி கையிருப்பு குறைந்ததனால் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதில் இலங்கை அரசுக்கு பிரச்சினை உள்ளது. இதனால் நாட்டில் உணவுப் பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருவதனை அவதானிக்க கூடியதாக உள்ளது.அத்தோடு இவற்றின் விலை பாரியளவில் அதிகரித்து வருகிறது. இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் இலங்கை மிகப்பெரும் உணவுப் பஞ்சத்தை முகம் கொடுக்கும் நிலை ஏற்படும். மேலும் அரிசி,சீனி, பால் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதனால் இலங்கையில், கடைகளுக்கு முன்பு மக்கள் வரிசையில் நின்று பொருட்கள் வாங்கும் சூழல் உருவாகி வருகிறது. அத்தோடு பால்,மண்ணெண்ணெய்,சமையல் எரிவாயு என்பவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உணவுப் பொருட்கள் அதிக விலைக்கு விற்கப்படுவதனாலும் நாட்டில் கொரோனா ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாகவும் வேலையின்மையாலும் மக்கள் பாரிய நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

தற்காலத்தில் அனைத்து சமூகங்களையும் மோசமாக பாதித்துள்ள இந்த பொருளாதாரப் பிரச்சினையானது பல தசாப்தங்களாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் மேற்கொண்ட தவறான பொருளாதார முகாமைத்துவத்தின் அடைவாகவே உள்ளது. எரிபொருள் பற்றாக்குறை, மின்வெட்டு அத்துடன் அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிப்பு போன்றவற்றால் மக்கள் தனது வாழ்க்கையைக் கொண்டு செல்வதில் மிகக் கடினமான விடயாமாகவே உள்ளது.

மேலும் தற்போது இலங்கையில் நாளாந்தம் அமுல்படுத்தப்பட்டு வரும் மின்வெட்டின் காரணமாகவும் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றனர். இதனால் மக்களின் தொழில்துறை நேரடியாக பாதிக்கின்றது. மின்வெட்டு அமுல்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் ஜெனரேட்டர்கள் ஊடாக மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சித்த போதிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு அதற்கு தடையாக உள்ளது. மேலும் மின்சாரத் தடைப்படும் சந்தர்ப்பத்தில் இணையத்தள வசதிகளும் இடையூறுகளும் ஏற்பட்டுள்ளன. தொழில்நுட்பத்துறைக்கு மிக முக்கியமானதாக காணப்படும் இணையத்தள வசதி தடைப்படுவதனால் அந்த தொழில்துறையை நேரடியாக பாதிக்கின்றது.மேலும் மக்கள் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ,மண்ணெண்ணெய் போன்றவற்றை நீண்ட வரிசையில் நின்று பெற்று வருகின்றனர். அதிக விலைக்கு விற்பனை செய்வது அதாவது அத்தியாவசிய தேவைகளுக்காக தவிர்க்காமல் வாங்குகின்றார்கள். டீசல் தட்டுப்பாட்டால் பல அனல் மின் நிலையங்கள் செயல்படுவதில்லை.இதனால் மின் நிலையங்கள் மூடப்பட்டு நாடு முழுவதும் மின்வெட்டு ஏற்படுகின்றது. இதனால் மக்கள் பெரும் இன்னலுக்கு உள்ளாகின்றனர். அத்தோடு வாகனங்களுக்கு எரிபொருளற்ற நிலையில் இரவு பகலாக வாகனங்களுடன் எரிபொருள் வரிசையில் காத்திருந்து தத்தளிக்கின்றனர். இது மக்களுக்கு பெரும் சிக்கலாகவே உள்ளது.

இலங்கை மக்கள் எதிர்நோக்கும் மற்றுமொரு பிரச்சினைகளில் ஒன்றாக அரசியல் நெருக்கடியை குறிப்பிடலாம். நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் மற்றும் பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்கள்

காரணமாக அரசியல் நெருக்கடியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இலங்கையின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டுள்ள அரசியல் வரலாற்றிலிருந்து அரசியல் ஸ்திரமற்ற நிலையை தூண்டி உள்ளது. அதற்குப் பிரதான காரணம் அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவமே ஆகும். 2021 செப்டம்பரில் அரசாங்கம் பொருளாதார அவசர நிலை அறிவித்தது.அதாவது வீழ்ச்சியடைந்த தேசிய நாணய மாற்று விகிதம் அதிகரித்த உணவு விலைகளின் விளைவாகவும் அதிகரித்த பணவீக்கம் என்பவற்றாலும் நிலமை மேலும் மோசமடைந்துள்ளது.

அத்தோடு தற்போது சுகாதார நெருக்கடியும் தவிர்க்க முடியாத ஒன்றாகவே மாறிவிட்டது. அதாவது அத்தியாவசிய மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு நிலை வருகின்றதே அவதானிக்க முடிகிறது. தற்போது பல அத்தியாவசிய மருந்துகளுக்கான தட்டுப்பாடு நிலவுவது மட்டுமல்லாமல் இருக்கின்ற மருந்துகளும் ஓரிரு வாரங்களில் தீர்ந்து போகக்கூடிய நிலையும் காணப்படுகின்றமையினால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுகின்றது. நாட்டிலே தற்போது பொதுமக்கள் உயிர் வாழ்வதற்கான உரிமை பறிக்கப்படுகிறது. அத்துடன் சுகாதாரமானது இலங்கையில் இலவசமாக கிடைக்குமொன்றாகும்.ஆனால் தற்போது அத்தியாவசிய மருந்துப் பொருட்களின் பற்றாக்குறையினால் மக்களுக்கு ஒழுங்கான மருத்துவ வசதிகள் கிடைக்கும் உரிமை பறிக்கப்படுகிறது. அத்தோடு நாட்டில் நிலவும் பணவீக்கம் காரணமாகவும் பல்வேறுபட்ட பொருட்களுக்கான விலைகள் அதிகரிக்கின்றது. இந்நிலையில் மருந்துப் பொருட்களின் விலைவாசியும் அதிகரித்துள்ளது. இந்நிலையை பொதுமக்கள் சமாளித்துக்கொள்ள முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றதை கண்கூடாக அவதானிக்க முடிகிறது. இது தற்காலிக பிரச்சினை இல்லாமல் தொடர் பிரச்சினையாக தொடர வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது எனவே நாட்டில் நிலவும் அசாதாரண சூழல் இல்லாமலாகி சாதாரண நிலைக்கு வர வேண்டும்.

இது மட்டுமல்லாமல் தற்போது எதிர்நோக்கும் பிரதான நெருக்கடியாக தகுதிக்கேற்ற வேலை வாய்ப்பின்மையை குறிப்பிடலாம். இலங்கையைப் பொறுத்தவரையில் தகுதிக்கான வேலைவாய்ப்பின்மை ஒரு பெரும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. அதாவது படித்த படிப்பிற்கேற்ப பொருத்தமான வேலைகளை பெற்றுக் கொள்ள முடியாமல் கிடைத்த வேலையினை செய்கின்ற நிலைமையே உள்ளது. இது முற்றும் முழுதாக வேலைவாய்பற்றிருக்கின்றவர்களின் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வதிலும் பாரிய அளவில் தாக்கத்தை செலுத்தியுள்ளது. வேலையின்மையானது பல்வேறு வழிகளில் சமூகச் செலவுகளை ஏற்படுத்தி உள்ளது. குடும்ப அலகின் ஜீவனோபாயத்திற்கு உழைப்பவர்கள் தொழில் கிடைக்குமிடத்து நாளாந்த அத்தியாவசிய தேவைகளை ஈடு செய்வதற்கு வருமான மூலங்கள் குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில் குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் இது பெரும் இழப்பாகவே இருக்கும். அத்தோடு இதனால் வாழ்க்கை தரம் வீழ்ச்சியடையும் வேளையில் வறுமை சார்ந்தோரின் மட்டம் உயர்வடைகின்றது.

அத்துடன் இலங்கையில் இறப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஏற்கனவே நீண்ட காலமாக ஊதிய குறைவு, பணிச்சுமை ,போதுமான உட் கட்டுமான வசதியற்றும் தொழில் பாதுகாப்பின்றி குறிப்பாக அட்டைத்தொல்லை, குளவிக்கடி, சிறுத்தைப் புலிகளின் நடமாட்டம், கடும்மழை, வெள்ளம், குடியிருப்புப் பாதைகள் உடைதல் போன்ற அசௌகரியமான வாழ்க்கைச் சூழலில் இருக்கின்றனர். மேலும் இம்மக்களுக்கு இப் பொருளாதார பேரிடரினால் தற்போதைய பொருளாதார நெருக்கடி ,இந்த தொழிலாளர்களின் மிகக் குறைவான நாட் சம்பளம், அதிகமான விலையேற்றம் காரணமாகவும் சிக்கித் தவிக்கின்றனர். பலர் தினசரி தொழிலுக்காக

பணியாற்றுகிறார்கள்.அவர்களால் சொந்தமாக சிறிய வீட்டையேனும் கட்டுவது இயலாத காரியமாக இருக்கின்றது.

எனவே, இவ்வாறான தற்கால நெருக்கடிகள் நாட்டின் அனைத்து பாகங்களிலும் உள்ள மக்களுக்கு கடினமான ஒரு விடயமாக அமைந்துள்ள அதே வேலை தமிழ் மக்களை பொருத்தவரையில் அவர்கள் அனுபவித்த கடந்த கால பிரச்சனைகளை நினைவூட்டுவதாகவும் உள்ளது. இந்நெருக்கடிகளின் போது வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மக்களால் வாழ்ந்த காலங்களைப் போன்று இலகுவான மண்ணென்னை விளக்குகள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளுக்கு மீள திரும்பும் நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே இவ்வாறான இலங்கையின் நெருக்கடிகள் அனைத்தையும் அலசி ஆராய்கின்ற விடயமாகவும் அதனால் ஏற்படும் தாக்கங்களையும் முன்வைக்கும் முகமாகவே கட்டுரை அமைந்துள்ளது.

# ஏழையின் மனக் குமுறல்



**M.M.M. RAMZEEN** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

வாசல் அருகே காத்திருக்கிறேன்
வழி மேல் விழி வைத்து
ஒரு கவள உணவை எதிர்பார்த்து
புசிப்பதற்கு வழியின்றி
பட்டினியால் பல நாட்கள்
வாடி வதங்குகின்றேன்

என் வீட்டு அழுகை குரல்
தெரு எங்கும் ஒலிக்க
அயலில் இருப்பவர்கள்
செவிசாய்க்க மறுக்கிறார்களா
அல்லது செவிடர்களாய்
வாழ்கிறார்களா

நினைத்து நினைத்து
கண்ணீர் வடித்து தண்ணீர்
இன்றி கண்கள் வரண்டு
கனநாளாயிற்று

என் நிலையை எடுத்துரைக்க
நாவு பிரழ்கிறது என்றாலும்
மொழியின் ஒலியெழுப்ப என்
வரண்ட தொண்டை மறுக்கிறது

என் நிலையை ஏறெடுத்து பார்க்க
இவ்வுலகில் ஒரு ஜீவனேனும்
பிறக்கவில்லையா
ஏங்கி தவிக்கிறது என் உள்ளம்
என்றென்றும்

உறவு இருந்தும் அனாதையாய்
உயிர் இருந்தும் உணர்வற்றவனாய்
கண் மூடி உறங்குகின்றேன்.

# தற்காலத்தில் இலங்கை வாழ் மக்கள் எதிர்நோக்கிவரும் சமூகப் பிரச்சினைகள்

**அறிமுகம்.**

தற்கால சமூக சூழலில் இன்று இந்த கொவிட் காலப்பகுதிக்குப் பின்னரான அல்லது கொவிட் காலப்பகுதிக்கு முன்னரான சூழலில் இலங்கையில் பல்வேறு சவால்களை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர்.சமூகத்தில் தற்போது பல்வேறு பிரச்சினைகள் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. அந்த வகையில் கல்விப் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சிறுவர்கள் முகங்கொடுக்கும் சவால்கள், சுகாதாரப் பிரச்சினைகள், உளவியல் ரீதியான தாக்கங்கள், தொழிநுட்ப ரீதியான தாக்கங்கள், குடும்ப ரீதியான தாக்கம், ஆன்மீக ரீதியான தாக்கம் போன்ற சிலவற்றை குறிப்பிடலாம். அந்த வகையில் இந்த ஒவ்வொரு பிரச்சினையையும் பல்வேறு கோணங்களில் காணப்பட்டாலும் இவ்வாறான பிரச்சினைகளை தற்போது மக்கள் சவாலாகவே முகம்கொடுத்து வருகின்றனர். ஏனவே, அவ்வாறான சவால்களில் ஒட்டுமொத்த பாணியை விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**கல்விப்பிரச்சினைகள்**

இன்றைய காலகட்டத்தில் கல்வி இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது. அறிவுசார், நடத்தைசார், நுட்பம்சார் விருத்திகளுடனும் மாணவர்களை மென்மேலும் மெருகூட்டவும் சிறந்த ஆளுமையுள்ள மாணவர்களை சமூகத்தில் உருவாக்கவும் பலர் முனைப்புடன் செயற்படுவதை இன்றைய காலச் சூழ்நிலையில் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இன்று எம் சமூகத்தில் மாணவர்களை




**N. NAHLA** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

முதனிலைப்படுத்த பாடசாலை ஆசிரியர்களும் பெற்றோர்களும் பயன்தரும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். எனினும் சகல பிரதேசங்களுக்கிடையேயும் உள்ள மாணவர்களுக்குமிடையே ஏற்படும் வளப்பாய்ச்சல் வேறுபாட்டினால் அவர்களின் அடைவு மட்டங்களில் வேறுபாடு காணப்படுவதனை அவதானிக்க கூடியதாக உள்ளது.

இந்நிலையில் மாணவர்கள் தமது இலக்குகள், நோக்கங்களை அடைவதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். அதாவது குறைந்த வருமான மட்டத்தையுடைய குடும்பங்களில் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வேலைக்கு அனுப்புகின்றனர். இதனால் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாமல் சிரமப்படும் நிலையையும் எமது சமூகத்தில் காணக்கூடியதாக உள்ளது.

அத்தோடு இன்று மாணவர்களிடையே ஒழுக்கம், நன்னடத்தை, நேர்மை, ஒற்றுமை என்பவற்றில் பலர் அக்கறை காட்டாமல் செயற்படுவதைக் காணமுடிகின்றது. முக்கியமாக இலங்கையில் இடம் பெறுகின்ற இனப் போரினால் பல்வேறுபட்ட சவால்களை மாணவர்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர். இதனால் மாணவர்களின் பாதுகாப்பு சந்தேகத்திற்கிடமாக உள்ளது. இதனால் இவர்கள் அச்சத்திற்குள்ளாகி பாடசாலைக்குச் செல்லாமலும் பாடசாலையை இடைநடுவே விட்டும் கல்வியைத் தொடர முடியாமலும் இருப்பதை நம் கண்முன்னே காணமுடிகின்றது.

இன்றைய கற்றல் சூழலில் கற்பித்தல் முறைகள் ஒழுங்கான முறையில் பயன்படுத்தப்படாமை பாரிய சவாலாக உள்ளது. பயிற்சி பெற்ற ஆசிரியர்களின்மையும் கற்பதற்கேற்ற சூழலின்மையும் பெரும் பிரச்சினையாக உள்ளது. பாமர மக்களிடம் ஆங்கில மொழியின் ஊடுறுவல் குறைவாக காணப்படுவதால் உலகளாவிய ரீதியில் ஏற்படும் மாற்றங்கள் சமூகப், பொருளாதார, அரசியல் பிரச்சினைகள், முன்னேற்றங்கள் என்பவற்றை உடனுக்குடன் அறிவதில் கால தாமதம் ஏற்படுகின்றன.

அத்தோடு பெரும்பாலான மாணவர்களின் பெற்றோர் பொருளாதார நிலையில் பின்தங்கியவர்களாக அன்றாடக் கூலி வேலைகளை மேற்கொள்பவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களிடம் சாதாரண தொலைபேசியொன்று இருப்பது கூட அரிதாகவே காணப்படுகிறது. இந்நிலையில் அவர்கள் வாட்ஸ்அப், வைபர் போன்ற குழுக்களிலும் நிகழ்நிலை வகுப்புகளிலும் கற்றலில் ஈடுபடுவது எவ்வாறு சாத்தியமானது என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இதேவேளை நடுத்தரக் குடும்பங்களில் வாழ்ந்த பிள்ளைகளிடம் ஓரளவு தொழிநுட்ப வசதியுள்ள தொலைபேசிகள் காணப்பட்டாலும் அவற்றை பயன்படுத்துவதற்கான தொலைபேசிக் கட்டணங்களை செலுத்தும் வசதியுடன் பெரும்பாலான குடும்பங்கள் காணப்படுவதில்லை. ஓரளவு வசதியுள்ள மாணவர்கள் இதனை பயன்படுத்துகின்றனர் என்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அத்துடன் ஆசிரியர், மாணவர்களிக்கிடையே இடம்பெறும் நேரடிக் கருத்துப் பரிமாற்றமும் இணையவழிக் கல்வி முறையில் கிடைப்பதில்லை. அதனால் ஒரு பாடத் திட்டத்தின் செயலாற்றுக் குறிக்கோள் என்ன என்பதை மனதிற்கொண்டு இணையவழிக் கல்வி தேவையா இல்லையா என்பதை தீர்மானிக்க முடியும்.

தற்காலத்தில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாக கொரோனா என்ற உயிர்கொல்லி வைரஸின் தாக்கம் காரணமாக கற்றல் சிதைவுற்று முடங்கிக் கிடக்கின்ற துர்பாக்கிய நிலைக்கு மாணவர்கள் சென்று கொண்டிருக்கின்றனர். பாடசாலை மாணவர்கள் தொட்டு பல்கலைக்கழக மாணவர்கள் வரை கற்றல்

செயற்பாடுகள் நலிவடைந்த நிலையில் சென்று கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் அரசாங்கம் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்காக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்து செயற்படுத்தி வருகின்றது. அதாவது இணைய வகுப்புக்கள், தொலைக்காட்சி, வானொலி மூலமாக குருகுலம் போன்ற நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டாலும் கூட அதனை மாணவர்கள் தற்போதுள்ள மனோ நிலையில் அதனை எவ்வளவு தூரம் உள்வாங்குகின்றார்கள் என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அத்தோடு பல்கலைக்கழக மாணவர்கள் இணைய வகுப்புகள், இணையப் பரீட்சைகள், செயற்திட்டங்கள், அறிக்கைகள் என இவ்வாறான செயற்பாடுகளில் சிக்குண்டு இன்னலுறுகின்றனர்.

மாணவர்களின் நலன் கருதி இவ்வாறான செயற்பாடுகளை இணையத்தின் வழியாக இலங்கை பல்கலைக்கழக நிர்வாகத்தோடு இணைந்து செயற்படுத்தினாலும் இதன்மூலமாக முழு மாணவர்களும் பயனடைகின்றார்களா? என்பது பெரும் ஐயமாகவே உள்ளது. இவ்வாறு எமது சமூகத்தில் காணப்படும் பல பிரச்சினைகளை இணங்கண்டு உரிய முறையில் தீர்க்கவேண்டிய பொறுப்பு நாட்டினதும் அரசாங்கத்தினதும் கடமையும் கல்வித்திணைக்களங்களினதும் உயர்கல்வி அதிகாரிகளினதும் கடமையாகும்.

### பொருளாதார ரீதியான பிரச்சினைகள்

பொருளாதாரப் பிரச்சினைகள் என்று நோக்கும்போது மிக வேகமாக நகரும் இன்றைய தற்கால சூழலில் ஆமை வேகத்தில் உயரும் சம்பளமும் முயல் வேகத்தில் அதிகரிக்கும் செலவுகளும் பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு வழிவகுக்கின்றன. பொருளாதாரத்தைப் பற்றிய போதிய கல்வி அறிவு இல்லாத நம் இளைஞர்களின் நிலையோ மிக மோசமாக உள்ளது. பொருளாதார அறிவின்மை மோசமான பொருளாதார திட்டமிடலுக்கு வழிவகுத்துச் செல்வதை குறைத்து கடன் அதிகரிக்கச் செய்கின்றது. இதனால் ஓய்வூதிய திட்டங்களும் பாதிப்புக்குள்ளாகின்றன.

தற்போது அரச ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கக் கூட அரசிடம் பணம் இல்லாத நிலை நீடிக்கின்றது. கடந்த சில மாதங்களாக இலங்கையர்களின் பொருளாதாரம் மிகப்பெரும் வீழ்ச்சியை எதிர்நோக்கியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு பிரதான காரணமாக கொவிட்19 தாக்கத்தை குறிப்பிடலாம். இதனால் நாடு முழுமையாக முடக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு இருந்தது.இவ்வாறு சமூகத்திற்கிடையில் கொவிட் தொற்று பரவாதிருக்கும் நோக்குடனேயே இந்த நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்திருந்தது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் காரணமாக கொவிட் தொற்றை கட்டுப்படுத்த முடிந்த போதிலும் நாட்டின் பொருளாதாரம் மோசமான அளவில் பாதிப்பை எதிர் நோக்கியுள்ளது.

### பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

தற்கால சூழ்நிலையில் பெண்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். பொதுவாக பெண்களைப் பொறுத்தவரையில் இரண்டாம் தரத்திலேயே வைத்து கணிக்கப்படுவதாகவும் பல்வேறு விடயங்களிலும் பாரபட்சமாக நடத்தப்படுவதாகவும் திறமைகளும் உரிமைகளும் உள்ள போதிலும் தொழிற் தளங்களிலும் சமூகத்தின் பல்வேறு தளங்களிலும் அவர்களுக்கு உரிய இடம் அளிக்கப்படுவதில்லை என்றும் பெண்ணிலைவாதிகள் கூறுகின்றார்கள்.

பெண்களுக்கென தனித்துவமான உரிமைகள் உள்ள போதும் இன்று உலகளாவிய ரீதியில் பெண்களுக்கான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. எமது சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் கருவில் தொடங்கி கல்லறை வரை தொடர்ந்து கொண்டே வருகிறது. பெண்களுடைய உரிமைகள், பால்நிலை சமத்துவமின்மையால் சமூக,பொருளாதார கலாச்சார ரீதியாக ஒதுக்கப்படுகிறது. ஆண்களும் பெண்களும் பாரபட்சமின்றி சரிநிகர் சமத்துவம் உடையவர்களாக வேண்டும். எது எப்படி இருப்பினும் பெண்கள் பிரச்சினைகளை முகங்கொடுத்த வண்ணமே உள்ளனர். குறிப்பாக இன்றைய காலப்பகுதியில் பல்வேறு பிரச்சினைகள் இடம் பெற்றுக்கொண்டேதான் உள்ளன.

அந்தவகையில் வன்முறைகள், ஆர்ப்பாட்டங்கள் என்பன அவற்றில் சிலவாகும். கணவன் மனைவிக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகள், தகராறுகள் மற்றும் தந்தைக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான தகராறுகள் மற்றும் பாரிய வன்முறைகளுக்கும் கொலைச் சம்பவங்களும் வாக்கு வாதங்களுக்கும் வித்திட்டது என்றே கூறலாம்.

வன்முறை எனும்போது வெறும் உடல் தொடர்பான புறத்தாக்கம் என்று மட்டும் நினைக்காமல் அகத்தை பாதிக்கக்கூடிய நீண்டகால நிரந்தரமான உளைச்சல்களையும் தரக்கூடிய உளவியல்ரீதியான தாக்கங்களையும் மனதிற் கொள்ள வேண்டும். உடல் தாக்கங்கள், அடிதடிக் கொடுமை,பலாத்காரம் அத்தோடு கட்டாய உடலுறவுக்கு வற்புறுத்தல் பாலியல் துன்புறுத்தலாகிய பல பிரச்சினைகள் கற்பழிப்பு போன்ற வன்முறைகள் நிகழ்கின்றன. ஆதிக்க உணர்வுகளின் மிகையான செல்வாக்கினால் தற்கால சூழலில் இத்தகைய கொடுமைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன. ஆணாதிக்கம் அதிகமாக இருக்கும் சமுதாயத்தில் பெண்ணிய மேம்பாட்டுக்கென தனியான கவனம் செலுத்துவதென்பது சிக்கலானது.

### சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

அதிகரித்துவரும் சமூகப் பிரச்சினையில் முக்கியமான ஒன்றாக சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகள் காணப்படுகின்றன. அந்த வகையில் சிறுவர்கள் பல்வேறு வகையான சமூக சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். கல்வி என்பது இன்றைய காலத்தில் மிகவும் அவசியமானதொன்றாக காணப்படுகின்றது.சிறுவர்களில் அதிகளவானவர்கள் இடைநிலைக் கல்விவரை தான் கல்வி கற்றுள்ளனர். வீட்டுச்சூழல் ஆய்வுப் பிரதேசம் போன்றன திருப்தியற்ற நிலையில் காணப்படல், கல்வி கற்றலுக்கான வளங்கள் போதிய அளவின்மை,கற்பதற்கேற்ற மனநிலை இன்மை.இதுபோன்ற காரணங்களால் கல்வியை இடைநிறுத்தி தொழில்களில் ஈடுபடுகின்றனர். இதனால் சிறுவர்களின் எதிர்காலமென்பது கேள்விக்குறியாக உள்ளது.

வீட்டில் உரிய முறையில் கல்வி கற்கும் சூழலை அமைத்துக் கொடுப்பதில் பெற்றோரின் பங்கு குறைவாகவே உள்ளது.சிறுவர்கள் பல்வேறு விதத்தில் உளரீதியான சவால்களுக்கு உட்படுகின்றனர். அதாவது சொந்த இடமின்மை,சூழல்,பாதுகாப்பின்மை மற்றும் திருப்தியின்மை, கல்வி தொடர்பான பாரபட்சம் மற்றும் விழிப்புணர்வின்மை, நண்பர்களுக்கிடையிலான இடைவினையற்ற தன்மை, வீட்டுச் சூழல் பொருத்தமற்ற தன்மை, பெற்றோரின் திருமண வாழ்வில் ஏற்பட்ட திருப்தியற்ற நிலை, தொழில் இடர்பாடுகள், வருமானமின்மை, அதிகளவு கவலை, மகிழ்ச்சியற்ற தன்மை, விரக்திநிலை, வெறுப்பு போன்ற நிலைக்கு உள்ளாகின்றனர். ஏனவே, இவ்வாறு உளரீதியாக பாதிப்படைந்தவர்களுக்கு ஆற்றுப்படுத்தல் செய்வதோடு அவர்கள் மீது நம்பிக்கை ஏற்படுத்தும் முறையில் ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

**சுகாதாரப்பிரச்சினைகள்.**

சமீப காலத்தில் உலகையே தன் வசத்தில் வைத்துக் கொண்டிருக்கும் கொடிய நோய் என்று எல்லோராலும் பேசப்படும் கொரோனாவானது அது தொடங்கிய ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரை அதன் பிடியை சற்றும் தளர்த்தாமல் மனிதனின் உயிருடன் விளையாடிக் கொண்டிருக்கிறது. சிறியவர், பெரியவர் என்று பாராது தன் குணத்தை சிறிதும் மாற்றாது ஒரே வகையான தாக்கத்தை காட்டி வருகிறது. வைரஸ் என்பது பெரும் தொற்று நோய் என்று அழைக்கப்படுகிறது. அத்தோடு இலங்கையை மட்டுமன்றி முழு உலகையே நடுநடுங்க வைத்துள்ள கொரோனா வைரஸ் தொற்றினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இலங்கை அரசாங்கம் மக்களின் பாதுகாப்பு நலன் கருதி பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. மேலும் பொதுமக்கள் பாதுகாப்பாக இருப்பதன் மூலம் நோய் தொற்றிலிருந்து விடுபடுமாறும் இதன் மூலம் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அரசாங்கம் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுகாதார சேவைகளை பரந்துபட்ட அளவில் பெறக்கூடியதாக அமையும் பொருளாதாரச் செழிப்பு அதிகரிப்பும் இலங்கையின் சனத்தொகை வயதில் மக்கள் தொகை மற்றும் நோய்கள் தொடர்பான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாக தொற்றுநோய்கள் அதிகரிக்கின்றது. இதனால் நாடு தொடர்ந்து காசநோய் டெங்கு, இன்புளுவென்சா போன்ற தொற்று நோய்களையும் எதிர்கொண்டுள்ளது. தாய் மற்றும் குழந்தைகள் மத்தியில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்படவில்லை.ஒரு வருட காலத்தில் பிறக்கும் குழந்தைகள் 16.8% ஆனவை குறைந்த எடையுடன் பிறக்கின்றன. மேலும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 17% ஆனவர்கள் மிகவும் உயரம் குறைந்தவர்களாகவும் வளர்ச்சி குறைந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.

**உளவியல் ரீதியான தாக்கங்கள்.**

இன்று எல்லோராலும் பேசப்படும் ஒன்றுதான் உளவியல் ரீதியான தாக்கங்களாகும். இதனால் பல்வேறு மனத் தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். உடலும் மனமும் ஒன்றோடொன்று தொடர்புடையது. உடலுக்கு ஒன்று ஏற்பட்டால் அது மனதை பாதிக்கின்றது. அதேசமயம் மனதுக்கு ஒன்று ஏற்பட்டால் அது உடலை பாதிப்படையச் செய்து விடுகின்றது. உளநலம் என்று குறிப்பிட்டு நோக்கும்போது உடலும் மனமும் இணைந்து வைத்தே பார்க்கப்படுகின்றது. உடல், உளவியல், சமூக, ஆன்மீக ரீதியான மற்றும் நிதி வாழ்வின் சமநிலை மூலமே முழுமையான ஆரோக்கியம் அடையப்படுகின்றது. மன அழுத்தத்தை எதிர்கொள்ளும்போது தனிநபர்கள் இந்த முழுமையான சமநிலையில் ஓர் இடையூறினை அனுபவிப்பதுடன் மேலும் தனிநபர்கள் குடும்பங்கள் மற்றும் சமுதாயத்தின் உறுப்பினர்கள் ஆகியோரின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. மன அழுத்தமானது பொதுவாக ஒரு தனி நபரின் வாழ்க்கையில் ஏற்பட்ட துக்ககரமான அல்லது அதிர்ச்சிகரமான சம்பவம் ஒன்றின் அல்லது குறித்த நபருக்கு ஏற்படும் உளரீதியான தாக்கம் ஆகும்.

இவ்வாறான உளவியல் ரீதியான தாக்கத்துக்குள்ளானவர்களை கேலி செய்தல் அவர்களின் பலவீனத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்தி மற்றும் சமூகத்தில் இருந்து அவர்களை ஒதுக்குதல் போன்ற மோசமான செயற்பாடுகளை எமது சமூகம் அவர்களுக்கெதிராக மேற்கொள்கிறது. இதனால் சமூகத்தின் மீதான நம்பிக்கை இல்லாதவர்களாகவும் தமது பிரச்சினைகளை நம்பிக்கைக்குரியவர்களிடம் பகிர்ந்து கொள்ள முடியாதவர்களாகவும் அவர்களது நிலைமை இன்னும் மோசமான

நிலைக்குச் செல்வதற்கு காரணமாக உள்ளது. இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய அவர்களை அணுகி அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும்.உளநலம் சார்ந்த சேவைகளை முறையாகப் பெற்றுக் கொள்ள வழிகாட்டல்களை வழங்க வேண்டும்.

வாழ்க்கை ஓட்டத்தில் அழுத்தம் நிறைந்த காலங்களை கடப்பதற்கு உடலாரோக்கியத்தைப் போல உள ஆரோக்கியமும் எதிர்கொள்ளும் திறனும் இன்றியமையாதவையாகும். உடலியல் ரீதியாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள் உள்ளத்தையும் உள ரீதியாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள் உடற்கூறுகளையும் பாதிக்கும் வல்லமை கொண்டவை. உடலும் உள்ளமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை. மனித வரலாறு முழுவதும் தொற்றுநோய்கள் உலகத்தை மோசமாக பாதிக்கின்றன.இதன்போது மனநல மருத்துவர்கள் உளவியலாளர்கள் மற்றும் மனநிலை பயிற்சியாளர்கள் மக்கள் மத்தியில் அதன் பாதகமான தாக்கங்களை தணிக்க தங்கள் பங்களிப்பைச் செய்து வருகின்றனர்.

**தொழிநுட்ப ரீதியான தாக்கங்கள்.**

தற்போதைய சூழலில் மக்கள் எதிர்நோக்கும் மற்றுமொரு பிரச்சினைகளில் ஒன்றாக தொழிநுட்ப ரீதியான தாக்கங்கள் பற்றி குறிப்பிடலாம். இயற்கையுடன் பின்னிப்பிணைந்து வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதன் ஆறாம் அறிவைப் பயன்படுத்தி நவீன அறிவியல் ஆற்றலை கற்றுக்கொண்டு இருந்ததே நாம் இன்று அன்றாடம் பயன்படுத்தும் தகவல் தொழிநுட்ப வழிமுறையாகும். அத்தோடு ஒரு குழந்தை பிறப்பது முதல் இறப்பது வரை அதன் வாழ்க்கையில் தொழிநுட்பம் இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டது. ஆகவே, தொழிநுட்பத்தின் மூலமாக குறைந்த நேரத்தில் அதிக நலன்களைப் பெற்றுக் கொள்ளவும் விரைவான தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்ளவும் முடிகின்றது.

தொழிநுட்பமென்பது அறிவியல் முறைகளையும் பொறியியல் கருவிகளையும் பயன்படுத்தி நுணுக்கமான வேலைகள் மூலம் திட்டங்களை செயற்படுத்துவதாகும். அத்தோடு பரந்த முறையில் ஒரு மனிதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான வழிமுறையூடாக வரையறுக்கப்படுகின்றது. அதாவது விஞ்ஞான அறிவு முறைகளைக் கொண்டு புதிய பிரயோகங்களின் ஊடாக வேலைகளை நுட்பமாக மேற்கொள்வதற்கான ஒரு செயற்திறனாக கருதப்படுகிறது. அதன்படி அறிவுத்திறன்கள், அனுபவம் மற்றும் நுட்பங்களின் தொகுப்பானது இதன் மூலம் மனிதர்கள் தமது தேவைகள் மற்றும் விருப்பங்களை பூர்த்தி செய்யும் நோக்குடன் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை உருவாக்குவதற்காக நமது சூழலை மாற்றி பயன்படுத்துகின்றனர். இவ்வாறான தொழிநுட்ப வளர்ச்சி மாற்றமானது இன்றைய சமூகப் பண்பாடுகளையும் மாற்றுகின்றது. தொழிநுட்ப பிரயோகமானது ஆரம்பத்திலிருந்தே சமூகத்தில் வளர்ச்சியடைந்து வந்தாலும் கூட இந்த Covid 19 தொற்று காலப்பகுதியில் சமூகத்திடையே அதன் பாவனையானது விரைவாக பரவலடைந்து பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது.

அந்த வகையில் தொழில்சார் ரீதியிலும் வணிக ரீதியிலும் கல்விசார் ரீதியிலும் தொழிநுட்பமானது துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளது. தற்போது மக்கள் தமது தேவைகளை பாதுகாப்பான முறையில் வீட்டில் இருந்தவாறே தொடர்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு தொழிநுட்பப் பிரயோகங்களை பயன்படுத்துகின்றனர். அந்த வகையில் சகல நடவடிக்கைகளும் பாரம்பரிய முறையில் இருந்து தொழிநுட்ப மாற்றங்களுடன் இலத்திரனியல் வடிவமைக்கப்பட்டதாக மாற்றமடைந்திருக்கின்றன.

அவ்வாறு மாற்றமடைந்த ஒரு துறையாக கல்வித்துறையை குறிப்பிடலாம். அதாவது கற்றல் நடவடிக்கைகளானது அதன் தொடர்ச்சியைப் பேணும் வகையில் பாரம்பரிய கற்றல் கற்பித்தல் முறையில் இருந்து விலகி சில தொழிநுட்ப பிரயோகங்களுடன் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக E-learnig எனப்படும் கணினி வழிக் கற்றல் முறைகள் மாணவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மாணவர்கள் அதன் மூலம் கல்வியைத் தொடர்ச்சியாக பேணுதல், உரிய காலத்தில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், கற்றல் செயற்பாடுகளுடனான தொழிநுட்ப ரீதியான நுண்ணறிவை வளர்ச்சியடைய செய்தல் போன்ற கலாசார ரீதியான பல நன்மைகளை பெற்றுக் கொண்டாலும் நேர்மறையான விளைவுகளை சந்திக்கின்றனர். அத்துடன் Covid 19 காலப்பகுதியில் தொழிநுட்ப ரீதியான மாற்றங்களை மாணவர்கள் மத்தியில் புகுத்தியது மட்டுமல்லாமல் கணினி வழிக் கல்வி முறை பல்வேறு தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையாகாது.

தற்போது அனைத்தும் இணையத்தளம் மூலம் செயற்படத் தொடங்கியுள்ளது என்பதால் இவ்வினைய வழி தொழிநுட்பத்திறன் பற்றிய அனுபவத்தை வளர்த்துக்கொள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் இது உதவியாக அமைகின்றது. அத்துடன் ஒன்லைன் கல்விமுறை நமக்கு தற்போதுதான் அறிமுகமாகியுள்ளது. அதேவேளை இணையவழிக்கல்வி என்பது அனைத்து மாணவர்களுக்கும் புரியும் வகையில் உள்ளதா? அவர்களின் சந்தேகங்கள் தீர்க்கப்படுகின்றதா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

மேலும் டிஜிட்டல் கல்வி முறை என்பது உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் சில பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது.அதாவது அதிக நேரம் கணினி மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றை பயன்படுத்துவதனால் கண்களில் பாதிப்புகளும் பார்வைக் குறைபாடுகள் ஏற்படுவது மட்டுமல்லாமல் ஒரே இடத்தில் அதிக நேரம் அமர்ந்து கொண்டிருப்பதனாலும் உளவியல் ரீதியாக இவற்றைப் பயன்படுத்துவதனாலும் குழந்தைகளின் மூளை வளர்ச்சி போன்றவற்றை பாதிக்கும் அபாயமும் உள்ளது.

**குடும்ப ரீதியான தாக்கங்கள்.**

தற்போதைய 21ம் நூற்றாண்டில் அபிவிருத்தி, சமத்துவம், சாதனைகள் என்று உலகளாவிய ரீதியில் முன்னேற்றங்களையும் மேம்பாடுகளை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் நாம், இன்றும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளில் முழுமையான தீர்வை எட்டவில்லை என்பதே நிதர்சன உண்மையாகும். தினந்தோறும் பெண்களுடைய வாழ்வு வீட்டுக்குள்ளேயும் வெளியேயும் பல்வேறுபட்ட சவால்களுக்கு உட்பட்டதாகவே இருக்கின்றது.எல்லாத் துறைகளிலும் ஜொலிக்கும் பெண்கள் அரசியல் என்றதும் பின் வாங்குவதற்கு பல காரணிகள் உண்டு. இதில் முக்கியமானது பெண்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் குடும்பப்பொறுப்பாகும். முக்கியமாக அரசியலில் பெண்கள் ஈடுபட்டால் குடும்பத்தை அவர்களால் கவனிக்க முடியாது. தொழிலுக்குச் சென்று தன் குடும்பப் பொருளாதாரத்தில் பங்கெடுக்கும் போது சமையல், குழந்தை பராமரிப்பு என்று வரும்போது முழுப்பொறுப்பும் பெண்களில் தான் தங்கியுள்ளது.

பெண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபட்ட போதும் குடும்பம் சார்ந்த உழைப்பையும் அவளே செய்ய வேண்டிய நிலை இருந்தது. இதனால் வேலைப்பளுவில் இருந்த பெண்கள் விடுபட முனையும்போது அடக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுக்கும் போது குடும்பத்திற்கு வெளியே உலகை காண விழையும் போது மீண்டும் மீண்டும் அடக்குமுறைக்குள் பெண்களை தள்ளுவதற்கான எதிர்ப்புக் குரல்கள் ஒலித்த வண்ணமே உள்ளன.

பெரும்பாலான மக்கள் மத்தியில் பெண்கள் குறித்து தவறான கண்ணோட்டத்தை கொண்டுள்ளனர். அதாவது பெண்கள் வேலைக்குச் செல்வதால் குடும்ப உறவு சீரழிந்து போகின்றன.போதைப்பொருள் பயன்படுத்துகின்றனர். அவர்களுக்கு அன்பு, அரவணைப்பு கிடைப்பதில்லை. சமுதாயம் அழிந்து போகின்றது என்ற கருத்துக்கள் பரவலாக மக்கள் மத்தியில் காணப்படுகிறது. பல ஆண்டுகளாக குடும்பம் சார்ந்த பெண் சம அந்தஸ்துடன் குடும்பத்திற்கு அப்பால் உள்ள உலகத்திலும் தனது பங்களிப்பைச் செய்ய விழையும் போது குடும்பத்தில் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. சமுதாய உற்பத்தி முறைமை அதன் உறவுகள் கலாச்சார விழுமியங்கள் என்பவற்றிற்கு ஏற்ப குடும்ப அமைப்பு காலத்துக்கு காலம் மாறி வந்துள்ளது. குடும்பம் இன்றியமையாத ஜனநாயக சமூக அமைப்பில் உள்ள ஒரு வடிவம் என்பதனால் குடும்பத்தில் கணவன், மனைவி, குழந்தைகள் ஆகியோருக்கிடையிலான உறவையும் ஒரு ஜனநாயகப் பிரச்சினையாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

**ஆன்மீக ரீதியான தாக்கங்கள்.**

தற்போது பெரும் சவாலாக இருப்பது ஆன்மீகம் பற்றி விடயமாகும். எமது விழுமியங்கள் நாம் பெற்றிருக்கும் மதிப்புக்கள், மயக்கமற்ற அணுகுமுறை, நாம் ஆக்கபூர்வமாக வாழ்வதற்காக தினமும் ஈடுபடுத்தும் திறன்கள் என்பவற்றை நாம் ஆன்மீக அறிவாற்றல் எனலாம். அனைத்தையும் அடக்கி ஒடுக்கி மனிதனுக்கு மனிதத்தை போதித்த கொரோனாவானது இப் பயணத்தடை சூழ்நிலையில் கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவில் விரிசலை ஏற்படுத்தி உள்ளது.

எமது சமய நடவடிக்கைகளும் நம்பிக்கைகளும் பண்பாடுகளும் பண்டிகைகளும் இந் நேரத்திலேயே தேக்க நிலையை அடைந்தாலும் ஏனைய சமயங்களை புரிந்துகொள்ளும் முயற்சிக்கான விதையை கொரோனா இட்டதென்பது மிகையாகாது.

திருமணச்சடங்கென்று பார்க்கின்றபோது Covid 19 இற்கு முன்னரான காலத்தில் அனைத்து உறவுகளும் ஒன்றிணைந்து திருமணத்தை நடத்துவர். ஒவ்வொரு சடங்குகளின் போதும் அனைவரும் இணைந்து உறவினர்களை நேரடியாகச் சென்று பத்திரிகை வைத்து அழைப்பதுடன் நின்று விடாது மண்டபம், மேளம், அலங்காரம் போன்றன பல காலமாகவே திருமணங்கள் இடம் பெற்றுவருகின்றது. ஆனால், தற்கால சூழலில் வீட்டு உறவுகளுடன் வீட்டுக்குள் வைத்து எந்தவித அலங்காரங்களோ கோலாகலமோ இல்லாது கொண்டாடப்படுகின்றது. இது மட்டுமன்றி திருமணம் செய்யும் பெண் ஒரு இடத்திலும் ஆண் ஒரு இடத்தில் இருந்துகொண்டு இணையத்தளங்களின் ஊடாக தற்கால சூழலில் இடம்பெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனவே, தற்காலத்தில் இலங்கை வாழ் மக்கள் எதிர்நோக்கும் சமூகப் பிரச்சினைகள் அனைத்தையும் அலசி ஆராய்கின்ற விடயமாகவும் அவை சில பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்மொழியும் முகமாகவும் இக்கட்டுரை காணப்படுகின்றது.

**உசாத்துணைகள்:**


கிருசாந்தினி,ந.(2020). “இலங்கையில் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும்”. http://www.battinews.com/2020/06/blog-post_153.html?m=1

டினோஜா நவரட்ணராஜா,(2021). “பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தற்காலத்தில் எதிர்கொள்ளும் சவால்களும் சிக்கல்களும்”. https://hashtaggeneration.org/



# இலங்கையில் தற்கால நெருக்கடி நிலை மக்கள் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கம்

**M.N. NAFLA** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

அன்றாடம் கிழக்கு சூரியன் உதிப்பது முதல் மறைவது வரை உலகில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு செயல்பாடுகள் தொடர்ச்சியாக நடப்பது போன்று பிரச்சனைகளும் தொடர்ந்து நாளுக்கு நாள் உருவாகி வருவது இயற்கையாகிவிட்டது. அந்த வகையில் இலங்கை திருநாட்டிலும் மக்கள் ஆதிகாலம் முதல் இன்று வரை பல்வேறு வடிவத்திலான நெருக்கடியை எதிர் நோக்கிய வண்ணமே வாழ்ந்து வருகின்றனர்.

1948 இல் சுதந்திரம் பெற்ற பின் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலைகள் குவிந்து கொண்டே வந்திருக்கின்றன. அதில் பெரும் நெருக்கடியாக பொருளாதார நெருக்கடியை நோக்கலாம். 2010 ஆம் ஆண்டிலேயே வெளிநாட்டு கடன்கள் நாட்டில் குவிந்த ஒரு வருடம் எனலாம். இதனைத் தொடர்ந்து 2019 இல் ஆரம்பித்த கோவிட் 19 எனும் பாரிய வைரஸ் தாக்கம் நாட்டை பொருளாதார ரீதியில் பெரும் சிக்கலுக்கு உட்படுத்திக் கொண்டது. இது நாட்டு மக்கள் அனைவரையும் ஒரு மந்தமான போக்கில் மாற்றிவிட்டது. சுகபோக வாழ்க்கையில் வாழ்ந்து வந்த மக்கள் கூட அவர்கள் சாதாரண நிலைமைக்கு மாற்றம் பெற வழி வகுத்தது. பல புதிய உபகரணங்களும் மாற்று வழிமுறைகளும் கையாள வேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

இது மட்டுமல்லாமல் 2019 ஏப்ரல் 21 ஆம் தேதி ஏற்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு மற்றும் அந்நிய செலாவணிகள், பணவீக்கம் போன்ற பல நெருக்கடிகளுக்கு இலங்கை நாடும், மக்களும் முகம் கொடுத்தனர். 2021 ஆம் ஆண்டு மாதம் பிரதமர் ரணில் விக்ரமசிங்கம் அவர்கள் பாராளுமன்றத்தில் மின்சாரத்தை சேமிக்கும் முயற்சியில் ஒரு பகுதியாக குறைந்தபட்சம் 2022 மார்ச் மாதம் இறுதி வரை அனைத்து தெரு விளக்குகளையும் அணைக்குமாறு நிதி அமைச்சருக்கு கூறினார். இருப்பினும் இந்த நடவடிக்கை குறிப்பாக பெண் தொழிலாளிகளின் பொருளாதாரத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தின. பல்பொருள் அங்காடிகள் இரவு பணியில் ஈடுபடும் பெண்களின் பாதுகாப்பில் தடங்களை உண்டாக்கியது.

இன்னும் பொருட்களின் விலைகள் திடீரென கூடியது பல பொருள் பதுக்கப்படுவதற்கு ஏதுவாகின. இன்னும் பல பொருட்களை வரிசையில் நின்று சிரமத்தின் மேல் சிரமத்தை எதிர்கொண்டு மக்கள் எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இந்த வரிசைகளில் குழப்பங்கள், சண்டைகள், உயிர் நீத்த,உயிர்களைப் பறித்த சம்பவங்கள் கூட பதிவாகிய நிலை காணப்படுகிறது. சிறுபிள்ளைகள் உண்ண உணவுகள் இன்றி வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படவும் செய்தனர். மூன்று வேளை உட்கொண்ட பலர் ஒருவேளை உணவுக்காக தள்ளாடிய நிலைக்கு இலங்கையின் பொருளாதார நெருக்கடி மக்களின் வாழ்வை தலைகீழாக மாற்றி அமைத்தது.

ஏற்கனவே, இலங்கைக்கு காணப்பட்ட கடன் சுமைகள் போதாமைக்கு இவ்வாறான சூழ்நிலைகளில் அண்டை நாடுகளான சார்க் நாடுகளிடம் கூட பண உதவி கேட்க வேண்டிய நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டு அக்கடன்களை திருப்ப செலுத்த முடியாமல் நாட்டின் ஒவ்வொரு பாகங்களை பங்கு போடும் நிலைக்கு இலங்கை சென்றது எனலாம். பொருளாதார நெருக்கடியை போன்று அதைவிட பயங்கரமான எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கும் அளவுக்கு நாட்டின் பாகங்கள் வெளிநாடுகளுக்கு பங்கு போடப்பட்டது. மேலும், மின்சாரத்தை சேமிப்போம் என்ற நோக்கில் மற்றும் குறிப்பிட்ட சில நாட்களாக எரிபொருள் தட்டுப்பாட்டின் உச்சகட்டத்திலும் நாடு முழுவதும் தினசரி மின்வெட்டுக்கள் அமல்படுத்தப்பட்டு வந்து கொண்டே இருக்கின்றது. அந்த வகையில் ஒரு நாளைக்கு ஐந்து மணி நேரம் முதல் 7:30 மணி நேரம் வரை மின்வெட்டுகள் செயல்படுத்தப்பட்டு வந்தது. பகல் நேரங்களிலும் இரவு நேரங்களிலும் மின்வெட்டுகளின் காரணமாக கல்வி செயற்பாடுகள் குறிப்பாக பரீட்சை தேர்வுகளில் மாணவர்களும் பல சிக்கல்களுக்கு ஆளாகி வருகின்றனர். இணைய வழி மூலம் கல்வி கற்கும் மாணவர்களின் கல்விக்கு இந்த மின்வெட்டு பெரும் நெருக்கடியாக முன்னே நிற்கின்றது.

2022 ஆம் ஆண்டு ரஷ்யா உக்ரைன் மீதான அரசியல் படையெடுப்பால் நாடு மேலும் நெருக்கடிகளுக்கு உட்பட்டது. ஏனெனில் குறிப்பாக ரஷ்யா தேயிலை ஏற்றுமதி இலங்கைக்கு இரண்டாவது பெரிய சந்தையாக காணப்பட்டது .மேலும் இலங்கையின் சுற்றுலாத் துறை இந்த இரண்டு நாடுகளையும் பெரிதும் நம்பி இருந்தது. ஆகவே உக்ரைன் ரஷ்யா போரினால் இலங்கையின் பொருளாதாரம் பாதை தடங்கலாக ஆனதும் தேயிலை மற்றும் சுற்றுலாத் துறைகள் பெரிதும் பாதிப்புக்கு உட்பட்டது.

அனைத்து துறையிலும் நெருக்கடியை போன்று இறுதியில் காகித தட்டுப்பாடு என்ற நிலை ஏற்பட, அனைத்து பள்ளி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என்று அனைவரும் தமது தேர்வு நிலைகளை கூட சரியாக முகம் கொடுக்க முடியாத பெரும் சிக்கலுக்கு உட்பட்டனர். காகித தட்டுப்பாடு என்று கூறி காலவரையறை இன்றி முக்கிய பரீட்சைகள் கூட ஒத்திவைக்கப்பட்ட நிலையை காண முடிந்தது. இவ்வாறான பல இன்னல்களுக்கு முகம் கொடுத்த மக்கள் கடந்த சில மாதங்களுக்கு முன் நாட்டில் பேசு பொருளாக மாறிய ஜனாதிபதி எதிர்ப்பு போராட்டங்கள், அரசாங்க எதிர்ப்பு போராட்டங்கள் என பெரும் கோஷங்கள் நாடு முழுவதும் பெரும் பதற்ற நிலையையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தியது. மக்கள் திரள் திரளாக ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் கோஷங்களை ஏற்படுத்தி காவல்துறையினருக்கு கூட கட்டுப்படுத்த முடியாத அளவு களமிறங்கி நாட்டின் ஆட்சியை மாற்றிய நோக்கம் இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளுக்கு ஒரு பெரும் மாற்றத்தை எதிர்பார்த்து ஆகும்.

இருப்பினும் தொடர்ந்து மக்கள் பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்த வண்ணமே இன்னும் தமது வாழ்க்கைகளை கொண்டு நடத்தி செல்கின்றனர். நாளுக்கு நாள் ஏறி வரும் அன்றாட அத்தியாவசிய பொருட்களின் விலைகளும், எரிபொருள் விலைகளும், வரிகளும், மேலும் பல மக்களின் வாழ்வை மேலும் சிக்கலுக்கே உட்படுத்திய வண்ணம் காணப்படுகின்றது. இவ்வாறான பொருளாதார நெருக்கடிகள், சமூக பிரச்சனைகள் அனைத்து துறை இலங்கையர்களையும் வயது வித்தியாசம் இன்றி பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தி இருந்தும், என்றோ ஒரு நாள் நல்ல நிலைமைக்கு நாடு திரும்பும் என்ற முயற்சியில் ஒவ்வொரு மனிதனும் ஓடிக் கொண்டே இருக்கிறான்.

**அறிமுகம்**

இலங்கையின் தற்கால நெருக்கடி நிலை என்பது மனித வாழ்க்கை நெருக்கடி (Humanitarian crisis) என்ற நிலையை எட்டி வருகின்றது. 2019ம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து இந்த நெருக்கடி நிலை உருவாக அடித்தளம் இடப்பட்டுள்ளது என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்ற பட்டியலுக்குள் இருந்த இலங்கை இவ்வளவு சீக்கிரமாக ஒரு நெருக்கடி நிலைக்கு செல்லும் என்று யாரும் கனவில் கூட கற்பனை பண்ணியதில்லை. இலங்கையின் தற்கால நெருக்கடிக்கான காரணங்களையும் அதன் மூலமாக இலங்கை மக்களின் வாழ்வில் ஏற்பட்ட தாக்கங்களையும் இக்கட்டுரை மூலமாக நோக்குவோம்.

இலங்கையின் தற்கால நெருக்கடி நிலைக்கு பல விதமான காரணங்களை கூறலாம். உள்நாட்டில் காணப்பட்ட சில விடயங்கள் இதற்கு துணைசெய்தது மாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற சில காரணங்களும் இதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட கோவிட்-19 பெரும் தொற்று, பொருளாதார நெருக்கடி நிலை, இலங்கை மத்திய வங்க கூடுதலாக பணத்தாள் அச்சிடுதல், அந்நியச் செலாவணி நெருக்கடி, விவசாயங்களுக்கு தேவையான இரசாயன உரங்களுக்கு தடைவிதிக்கும் சட்டம் பாராளுமன்றதினால் நிறைவேற்றப்படுதல், குடும்ப ஆட்சியும் அரசியல் வாதிகளின் பொருளாதார முறைகேடுகளும், உலக நாணய நிதியத்திடம் உதவி பெற மறுத்தது, மற்றும் 2022 ஆம் ஆண்டு உக்ரைன் ரஷ்யாவின் மோதல் போன்ற காரணங்களை இலங்கையினுடைய தற்கால நெருக்கடி நிலைக்கு பிரதான காரணங்களாக நாங்கள் கூற முடியும்.

கோவிட்-19 கொரோனா பெருந்தொற்றினால் இலங்கையில் மிகவும் செழிப்பாக இருந்த சுற்றுலாத்துறையில் ஏற்பட்ட பாதிப்பானது நாட்டின் கடன்களை திருப்பி செலுத்துவதற்கு போதுமான தேசிய வருவாயை ஈட்ட முடியாமல் போனதாக காரணம் கூறப்பட்டுள்ளது. இலங்கையின் சுற்றாத்துறையின் மூலமான தேசிய வருவாய் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு பெரும்பங்காற்றியது. இந்தக் கொரோனா தொற்று நோய் ஏற்பட்ட காலத்தில் நாட்டினுடைய பொருளாதாரம் சீராக இயங்கும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான முடிவுகளை இலங்கை அரசாங்கம் எடுக்கவில்லை என்பதும் இங்கு கோடிட்டு காட்டப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

# இலங்கையின் தற்கால நெருக்கடி நிலையும் அது இலங்கை மக்கள் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களும்



M.H.M. SIFKAN 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

இலங்கையினுடைய அரசியல்வாதிகளில் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக ராஜபக்ச குடும்பம் ஆட்சியில் உள்ளது. இதன் பின்னணியில் மஹிந்த ராஜபக்ஷவின் பங்கு மிக முக்கியமானதாகும். 2009ஆம் ஆண்டு தமிழ் விடுதலை புலிகளை வீழ்த்தி இலங்கையின் பல தசாப்தகால சிங்கள பேரினவாதிகளுக்கும் தமிழர்களுக்குமிடையில் காணப்பட்ட உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்தவர் என்ற பெயரின் மூலமாக தன்னுடைய குடும்ப உறுப்பினர்களை அரசியலிலே போட்டியிட வைத்து இலங்கையினுடைய ஆட்சியை ஒரு மன்னர் ஆட்சியைப் போல தங்களுடைய குடும்பத்தின் உறுப்பினர்களை பல முக்கியமான நிதிசார்ந்த அமைச்சுக்களில் அமரவைத்து பலவிதமான முறைகேடான செயற்பாடுகளை செய்தனர். (ஜடாயு, 2022)

இவ்வாறாக தெரிவு செய்யப்பட்டு வந்த அரசியல்வாதிகள் தொலைநோக்குப் பார்வை இன்மையினால் நீண்ட கால திட்டமிடலுக்குப் பதிலாக தற்காலிகத் தீர்வுகள் மற்றும் குறுகிய கால திட்டமிடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். அதுபோல அத்தியாவசியமான விடயங்களுக்கு மத்திய வங்கியின் நிதிகளை செலவழிக்காது முறையாக திட்டமிடாத அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதிகளை வாரியிறைக்கும் செயற்பாட்டை மேற்கொண்டனர். இதனால் பணவீக்கம் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலையொன்று உருவாகியது.

இலங்கையை 2022 இல் 100% வீத இயற்கை வேளாண்மை உருவாக்குதல் என்ற திட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடங்கி வைத்தார். அதன்படி 2021 ஆம் ஆண்டு செயற்கை உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளுக்கு தடை உத்தரவு விதிக்கப்பட்டது. இவ்வாறான முறையாகத் திட்டமிட்டு ஆய்வுக்குட்படுத்தாத விடயங்களை அமுல்படுத்தியதன் காரணமாக அதே ஆண்டு செப்டம்பருக்குள் இலங்கையின் வேளாண்மை உற்பத்தியில் 50% வரை பெரும் வீழ்ச்சியையும், உணவு பற்றாக்குறையையும் சந்தித்தது. இந்த நெருக்கடி நிலைக்கு பிரதான காரணமாக இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் விற்பனை தடை செய்யப்பட்டதை காரணமாக இங்கே கூற முடியும். இதனால் மக்கள் வருமானத்தை இழந்து உணவுப் பொருட்கள் கிடைக்காமல் தவிக்கும் நிலைக்கு ஆளாகினர்.

ரஷ்யா மற்றும் உக்ரைனின் போருக்கான ஆயத்தம் காரணமாக உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் நிலவிய பதற்றமான சூழ்நிலையின் எதிரொலியாக இலங்கையில் மந்தமான பொருளாதார நிலைமை மேலும் மோசமடைந்தது. ஏனெனில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி அதிகம் செய்யப்பட்ட நாடாக ரஷ்யா இருந்தது. எனவே ரஷ்யா-உக்ரைன் போர் காரணமாக தேயிலை ஏற்றுமதி மந்தகதியில் இடம்பெற்றுது. மேலும் இலங்கையின் சுற்றுலாத் துறை இந்த இரண்டு நாடுகளையும் பெரிதும் நம்பியுள்ளது. தேயிலை மற்றும் சுற்றுலாத் துறை ஆகிய இரண்டும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

இவ்வாறான நிலமைகளால் உருவான கடுமையான நெருக்கடியின் காரணமாக இலங்கைவாழ் மக்களுக்கு உணவு இல்லை, வேலையும் இல்லை என்பதுதான் இலங்கையினுடைய தற்போதைய நிலைமையாக காணப்படுகிறது. மின்சாரம்,



தண்ணீர், எரிபொருள், அத்தியவசிய மருந்துகள் என அனைத்து நுகர்வுப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு, பயங்கரமான உணவுப் பொருட்களின் விலை ஏற்றம், பொருட்களுக்கு தட்டுப்பாடு மற்றும் மருத்துவமனைகள் இயக்கம் நிறுத்தம் போன்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளதால் மக்கள் வீதிக்கு வரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இருப்பினும் இவ்வளவு வளர்ச்சியடைந்து வந்த நாடு இவ்வளவு மோசமான நெருக்கடி நிலையை அடைந்தது எவ்வாறு என்ற கேள்விக்கான எளிமையான பதில் இலங்கையின் கருவூலம் காலியாகிவிட்டது என்பதுதான்.

2022 மார்ச்சில், இலங்கையில் உள்ள பல கல்லூரிகளில் நடத்தபடவேண்டிய பரீட்சைகள் நாடு முழுவதும் நிலவும் காகிதத் தட்டுப்பாடு காரணமாக காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்ட ஒரு கையறு நிலையும் இதன் காரணமாக ஏற்பட்டது. இவ்வாறான நெருக்கடி நிலமைகள் காரணமாக இலங்கை வாழ் மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளை வரையறுத்துக் கூறுவது இயலாத காரியமாகும். இன்னோரன்ன பல கஷ்டங்களை இம்மக்கள் நெருக்கடி நிலையினால் அடைந்து கொண்டனர். உயர்வகுப்பைச் சார்ந்த அரசியல் வாதிகளுக்கே கஷ்டமான ஒரு நிலை இவ்வாறான நெருக்கடியால் ஏற்பட்டதென்றால் மத்தியதர, வறுமைக்கோட்டில் வாழுகின்ற மக்களின் நிலையை கூறவா வேண்டும். மக்கள் பசியாலும் பட்டினியாலும் நோயுற்று வைத்தியசாலைகளில் அனுமதித்தாலும் அங்கு முறையான சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளாமல் மரணித்தார்கள்.

பசியை போக்கிக் கொள்ள உணவு இல்லை, உணவு இருந்தாலும் அதன் விலைகள் வானைத் தொடுகின்றன. மேலும் படித்தவர்களுக்கு தகுதியான வேலை இல்லை, அத்தியவசியத்தேவையாக கருதப்படக் கூடிய மின்சாரம், தண்ணீர், எரிபொருள், மருந்துகள், குழந்தைகளுக்கான பால்மா என அனைத்து நுகர்வுப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு, உணவுப் பொருள் விலை ஏற்றம், பொருட்களுக்கு தட்டுப்பாடு மற்றும் மருத்துவமனைகள் இயக்கம் நிறுத்தம் போன்ற நிலைமைகள் அதிகரித்து மக்கள் வீதிகளில் போராட்டங்களிலும் இறங்கியுள்ளார்கள்.

அத்தியாவசிய பொருட்களுக்காக வரிசையில் நிற்கும் மக்களிடையே பதற்றத்தைத் தடுக்கவும், எரிபொருள் விநியோகத்தை எளிதாக்கவும் பல்வேறு எரிவாயு மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இராணுவ, பொலிஸ் வீரர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். அதிக வெப்பம் காரணமாக மணிக்கணக்கில் நீண்ட வரிசையில் அத்தியவசியப் பொருட்களை பெற்றுக் கொள்ள நின்ற மக்களில் பலபேர் உயிரிழந்தார்கள். மேலும் மக்கள் வரிசைகளில் நிற்கின்ற சந்தர்ப்பங்களில் ஏற்பட்ட தகராறில் பலர் காயமடைந்தார்கள்.

மிகவும் கவலைக்குரிய விடயமாக அதிகமான இளைஞர்கள் ஆட்கடத்தல், கொள்ளையடித்தல், கொலை, திருட்டு போன்ற சமூகச் சீர்கேடான விடயங்களில் ஈடுபடக்கூடியவர்களாக மாறியுள்ளார்கள். மேலும் அதிகமானவர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்ற செயற்பாடுகளையும் அதிகமாக காணக்கூடியதாக இருக்கின்றது. தாய் நாட்டில் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழ முடியாதவர்களாக வெளிநாடுகளுக்குச் செல்லும் அவலநிலை எப்போது முடிவுறுமோ!



**முடிவுரை**

“சிறுதுளி பெரு வெள்ளம்” என்பது போல இலங்கையில் தற்கால நெருக்கடி நிலை என்பது பல விதமான காரணங்களால் இன்று ஒரு பூதகரமான விடயமாக மாறியிருக்கின்றது. இந்த நெருக்கடி நிலைக்கு பலவிதமான காரணங்களை பல கோணங்களிலும் ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். அவற்றில் சில அடிப்படையான காரணங்களை இக்கட்டுரை மூலமாக குறிப்பிட்டிருக்கின்றேன். இலங்கையில் தற்கால நெருக்கடி நிலை காரணமாக பலவிதமான தாக்கங்கள் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. இந்த நெருக்கடி நிலையை எவ்வாறு எதிர் கொள்ளத் தேவையான வழிகாட்டல்களை பொதுமக்களுக்க வழங்க வேண்டியதன் அவசியம் தற்போது பல தரப்பாலும் முன்வைக்கப்படுகின்றது.

எனவே, இவ்வாறான செயற்திட்டங்களை கல்வியலாளர்கள் மேற்கொள்வதோடு நாட்டின் இந்நெருக்கடியான நிலையை இல்லாதொழிக்க வேண்டிய செயற்பாடுகளையும், திட்டங்களையும் அனைவரும் மேற்கொள்ளவேண்டியது மிக முக்கியமாகும்.

**உசாத்துணைகள்:**


Neshella Perera, (2021). Sri Lanka halts chemical fertilizer subsidies. Economynext Web. https://economynext.com/sri-lanka-halts-chemical-fertilizer-subsidies-88134/

Hiran B. Jayasundara, (2021). Organic Farming In Sri Lanka – Ideology Of Hitler & Sri Lankan Agri “Cults” https://www.colombotelegraph.com/index.php/organic-farming-in-sri-lanka-ideology-of-hitler-sri-lankan-agri-cults/

ஜடாயு, (2022). இலங்கையின் பொருளாதார நெருக்கடி ஒரு பார்வை. Tamilhindu.com https://www.tamilhindu.com/tag/

BBC News, (2021). Covid : Sri Lanka in economic emergency as food prices soar. BBC website https://www.bbc.com/news/business-58390292

Colombo Telegraph, (2021). Sri Lanka's foreign debt crisis forecast for 2021 https://www.colombotelegraph.com/index.php/sri-lankas-foreign-debt-crisis-forecast-for-2021/

Lars Halter, (2022). Ukraine war worsens Sri Lanka economic crisis, Deutsche Welle (DW). https://www.dw.com/en/ukraine-war-worsens-sri-lanka-economic-crisis/video-61017541




# மீண்டெழுமா?



கருகிய மேகக் கூட்டம் கலைந்து போக
கதிரவன் ஒளி தடவி புலர்ந்தது விடியல்
காற்றின் தாலாட்டுடன் வான்முகில் மழை கொட்டிட
கச்சிதமாய் ஒலித்தன இலைகளின் இசை
நேற்றைய பொழுதின் மழைத்துளி ஓசை ஓய்ந்திட
பட்டை மரம் இனியும் துளிர் விடுமா?

வாட்டிடும் வறுமை வீட்டிற்குள் படியேற
வாங்கி வந்த அரிசி தீர்ந்து போனதே
வரிச்சுமை பெருகி பொருள் விலையேற
வாய்க்கு பூட்டுப்போட வைத்ததே - தொட்டிலிலே
வாய் பேசா ஜீவன் அழுகை மொழி பேச
வார்த்தைகள் இல்லை பதிலளிக்க...

படாத பாடுபட்டு பை நிறையை சேர்த்த பணம்
கடைப்படி ஏறியவுடன் வியாபாரியின் பைகளிலே
விடாப்பிடி பசியின் கொடுமை போக்க
விழிகள் அனற்பிழம்பாய் கொந்தளிக்கிறதே
காய்ந்த உடல் தேய்ந்து போக - இக்
கானகம் செழித்திடுமா?

பள்ளிக்குப் போக துள்ளிக் குதிக்குது மனம்
பள்ளமும் படுகுழியும் அரங்கேறுது தினம்
புத்தகம் வாங்க காசு இல்லா ஜனம் - உயிர்பிழைக்க
புழுதிக்குள் மிதந்திடும் அவலம்
புத்தி விழுங்கிய அதிகாரிகள் நியாயமில்லாத் தனம்
நித்தமும் தொடர்ந்தால் இம்மண்ணோ
சுடுகாட்டு வனம்.

வாங்கிய கடன் ஆறாய் ஓட
வட்டியின் வெள்ளம் நதியாய் பெருக்கெடுக்கிறதே
உயிர் துடிப்பு ஒலிக்கிறதே என்றெண்ணி
பயிர் நட்டிய கரம் பரிதவிக்கிறதே
பசளைக்கு விலை கூட பீடைக்கு குதூகலமாம்
விவசாயி என் கதியோ பீறிட்ட அமர்களமாம்.

நோயாளி வரிசை நொடிக்கு நொடி அடுக்காகிட
நோவிற்கு வலு சேர்க்க மருந்துகள் காலியானதே
இருள் மிளிர மின்வெட்டு திரளாகிட
விரல்களிலேயே கரண்டு பில் கடதாசி கனத்ததுவே
வருமான வீக்கம் வாழ்வின் ஏக்கம்
ஏழ்மையின் ஏற்றம் அளித்தது தாக்கம்.

பட்டினி சாவு பட்டியலாகிட
பாராளுமன்ற கூட்டங்கள் எதற்கு?
சுட்டு நீ பொசுக்கிட பட்டை விறகான மேனி
மழை வந்து மோதி இனியும் துளிர் விடுமா?
புலரும் புது விடியலைக் காண
என் தேசம் மீண்டெழுமா?

**B. FATHIMA AAKKILA, 3RD YEAR**
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

# கேள்விக்குறியாகவே நிற்கின்றது...

A.G.R. HALEEMA , 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

வந்ததே கொரோனா என்ற,
ஒரு கொடிய நோய் 2019
அன்று, தொடர்ந்ததே மக்கள்
வாழ்வில் நெருக்கடி நிலையும்
ஊசலாட்டமும்...

இலங்கையின் பஞ்ச நிலைமை தான்
இன்று, இணையம் எங்கும்
பேசு பொருளாயிற்று....

மண்ணெண்ணெய்,
டீசல், பெட்ரோல், எரிவாயு,
எரிபொருள்,பால்,பவுடர்,
பருப்பு,அரிசி,கோதுமை....
இன்னும் பல உணவுப் பொருட்களின்
விலை உயர்வாயிற்று.........

வாகனங்களை நிறுத்திவிட்டு
கொள்கலன்களை குழந்தை
போல கையில் ஏந்தியவாறு
காத்து நிற்கும் நிலை தொடர்கதை
ஆயிற்று....

கல்லூரிகளும் கலாசாலைகளும்
பூட்டப் பட்டு இணையவழிக்
கல்வி எங்கும் பரவப்பெற்று
மாணவர்களின் கல்வி நிலை
முடக்கப்பட்டது.....

சுற்றுலா தளங்களும் விடுதிகளும்
மூடப்பட்டு டிக்கெட்டு விற்பனைகள்
நிறுத்தப்பட்டு வறுமையின்
இறுதி நிலைக்கு தாய்நாடு
தள்ளப்பட்டது.....

பல மணி நேரங்கள் தொடர்ந்து
மின்சாரம் துண்டிக்கப்படுவதால்
இருள் சூழும் நிலையும்
வந்தாயிற்று......

கையில் இருந்த காசுகள் எல்லாம்
கரைந்து போயிற்று கடன் கேட்டு
போனால் பெற்று வருவது
ஏமாற்றம் ஒன்றே மிச்சமாயிற்று....

பொருளாதாரமின்றி வறுமை தொடர,
வயிறு காய, பசியைப் போக்க மீண்டும்
அகதியாகிறார்கள் எம்மவர்கள் நம்
தாய் நாட்டிலே......

கடன் சுமை எமது இலங்கை
தாய் நாட்டின் கழுத்தை
நெரிக்க,வறுமையின் நிலை ஏழை
மக்களின் வயிற்றை அல்லவா
நெறிக் கின்றது....

உதவி கிட்டுமா என்று பலரது
மனதில் புதிர் கேள்விகள்
தொடர்ந்ததே இந்நிலை
தொடருமானால் நம்மவர்கள் நிலை
என்னாகும்?

என்ற கேள்விகளோடும்,
அச்சங்களோடும் முற்றுப்
பெறாத முற்றுப்புள்ளி
போல கேள்விக்குறியாகவே
நிற்கின்றது......

# விடிவு குறித்த ஏக்கங்கள்



நிஜத்தின் விடியலில்
மொய்த்த மனங்களில்
நீண்டு கிடக்கின்றன
விடிவு குறித்து ஏக்கங்களும்
எல்லாம் மாறிப் போகுமா
என்ற தாகிப்புகளும்...

அடுக்கடுக்காய் வந்தவைகள்
நல்லதொரு வாழ்க்கையினை
புரட்டிப் போட்டதில்
சிதைந்து போனது நல்லதோர்
தேசம் மட்டுமல்ல...
மனித மனங்களும் தான்..

தொடர் கொள்கைப் பிழைகள்
நாட்டை பாதாளத்திற்கென்று
அடமானம் வைத்தது..
மக்களின் நல் வாழ்க்கைக்கான
போராட்டங்கள் கூட
இன்னும் அர்த்தப் படவில்லை – அவை
இன்னும் அப்படியே சிதைந்து போனதாய்...

உயர்ந்து கொண்டே போகும்
வாழ்க்கைச் செலவுகள்
சாதாரண குடிமக்களின் அமைதியை
குலைப்பதில் வெற்றிக் களிப்போடு
பயணப்படுகிறது...

பற்பல உட்பூசல்களால்
பிரவகித்த பொருளாதார
நெருக்கடிகளைக் களைந்து
நாடது மேம்பட ஓங்கிய
எத்தனையோ குரல்வளைகள்
நெரிக்கப்பட்டன ஒடுக்கப்பட்டன...

அன்றன்றைக்காக மட்டும் உழைத்து
உண்ணும் மனங்களை
நெரித்து, எரித்து, பொரித்துச் சுவைக்கும்
பணியை இந்த விலைவாசி
ஏற்றம் பக்காவாய் செய்து விட்டது..

இனியும் மிஞ்சி விட
என்ன இருக்கிறது?
இருப்பதோடு தஞ்சம் அடைவோம்
என்று எத்தனையோ உள்ளங்கள்
ஒடுங்கியே போய் விட்டன...

நாடு விட்டு வீடு காக்கச் சென்றால்...
அங்கோர் கடத்தல் பிரளயம்...
சாவுக்கும் வாழ்வுக்கும் இடையில்
வெப்பச் சுவாலைகளாக
மக்கள் மனங்கள்
எரிந்து கொண்டேயிருக்கிறது...
என்றோ ஒரு நாள்
விடிவு குறித்த ஏக்கங்கள்
அர்த்தப்படுமென்று...

**M.J. FATHIMA FAHMA, 2ND YEAR**
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

# இத்தனைக்கும் நான்...

**SUMAIYA RIZWAN**, 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA



கார்கால இரவின் நிசப்தத்தை இரசித்துக்
கொண்டு வெளித்திண்ணையில்
தூரத்தில் வேடிக்கை பார்த்தபடி
அமர்ந்திருந்தேன் நான்!

க்ரீச்சென்றொரு சத்தம் அருகில்
காபி கப்பொன்று மெதுவாய்
என் பக்கம் நகர்ந்து வந்திருந்தது
ஏதோ சேதி சொல்ல போகிறது போலும்
புரிந்து தலையாட்டி புன்னகைத்தேன்!

வணக்கம் எனும் குரல் கவனத்தை
திசை திருப்ப முன்னால் திரும்பிப்
பார்த்தேன் முதியவர் ஒருவர் கையில்
குழந்தையுடன் நின்றிருந்தார்
குழந்தையின் பெயர் இலங்கையாம்!

அப்படியெல்லாமா பெயர் வைப்பார்கள்
சரிதான் இருக்கட்டும் சரியென்று அமரச்சொல்லி
நிமிர்கையில் சக்கர நாட்காலி
உருண்டு வந்து நின்று கொண்டது
அதற்கும் நியாயம் வேண்டும் போலும்!

சரி சொல்லுங்கள் முதியவரே
பேச்சை ஆரம்பிக்க நான் எத்தனிக்க
வணக்கம் என மறுபடி இடையிட்டது
இன்னுமொரு கரகர குரலொன்று
யாரடா அதுவென்று பார்த்தேன்
தன்னை முழுதாய் மறைத்துக் கொண்டு
கையில் ஒரு கோலுடன்
நின்றிருந்தது தேங்காய் மட்டையொன்று!

வயதான காலத்தில் கூட
எத்தனை திமிர் பார்த்தாயா
என மனம் நொடிந்ததை தட்டி
அடக்கி விட்டு நல்ல பிள்ளையாய்
வந்திருப்பவர்களை பார்த்து
ஈயென்று இளித்து விட்டு
நிமிர்ந்து அமர்ந்தேன்!

கூறுங்கள் என்றேன் காபி
கப்பின் பக்கம் திரும்பி
முதலில் வந்தவராயிற்றே
என் பெயர் பணம் என்றது
என்னடா இது வம்பாயிற்று
காபி கப்புக்கு கூடவா பெயர் வைப்பார்கள்
மனதில் சுழன்ற எண்ண அலையை
சுருட்டி வைத்து விட்டு தலையாட்டினேன்!

இப்போது நான் சொல்கிறேன்
இடையிட்டது தேங்காய் மட்டை கோபம் வந்தது எனக்கு
அது தான் பேசிக் கொண்டிருக்கிறேனே
என கோபமாய் கத்த வாயை திறப்பதற்குள்
அது முந்திக் கொண்டு என்னை எல்லோரும்
நெருக்கடி என அழைப்பார்கள் அவனுடன்
சம்பந்தப்பட்டவன் நான் எனவும் வாயை
கப்பென மூடிக் கொண்டுவிட்டு நிதானமானேன்!



சரி இருவரும் பேசட்டும் என நானிருக்க
நான் பேசட்டுமா என
கேட்டது சக்கர நாற்காலி
அடேய் யாராவது பேசுங்களப்பா
பயப்பட வேண்டாம்
மனதிற்குள் தான் அலறினேன்!

முதியவர் ஆரம்பிக்கட்டும்
மீண்டும் அந்த கரகர குரல் ஒலித்தது
நான் அதன் முகத்தை பார்ப்பதில்லை
திமிர் பிடித்தவர்களை எனக்கு பிடிப்பதில்லை
யாராவது பேசுங்கள் என்றவாறு
அமைதியாய் வேடிக்கை பார்க்க ஆரம்பித்ததும்
அதனை கலைக்கவே
உடனே ஆரம்பித்திருந்தார்
அந்த முதியவர்!

இவன் பெயர் இலங்கை
நன்றாய்த் தான் இருந்தான் ஆனால்
அவர் முகத்தில் சொல்லவியலா
சோகம் தெரிந்தது கண்டு கூர்ந்து
கவனிக்க ஆரம்பித்தேன்
ஆனால் சில காலமாய் நிறைய பிரச்சனைகள்!

சிறு பிள்ளைக்கு அப்படி என்னடா பிரச்சனை
வந்திருக்கப் போகிறதென
இடக்காய் கேள்வி கேட்டது மனம்
இருந்தும் வாயை மூடிக் கொண்டேன்
உணர்வுகளை மதித்து அடங்கியபடி!

நாட்டை காக்க வேண்டிய காவலன்
திருடனாகிப் போன மாயமும்
பொருட்களுக்காய் நிற்க வேண்டிய
நீண்ட வரிசை வாகனங்களுக்கென
மாறிப் போன அவலமும் இங்கு மட்டுமே!

ஜனநாயக ஆட்சியென்று
விட்டு தாங்களே தேர்வு
செய்து கொள்ளும் அதிசயமும்
நீண்ட வரிசையில் நின்று
வாழ்வாதாரத்திற்காகவன்றி
உச்சி வெயிலில் தொடரும்
அகால மரணமும் இங்கு தான் நடக்கும்!

தன் கவலையை பொது வெளியில்
சத்தமாய் முலக்கமிட்டால்
மிரட்டல் விடப்படும் அவலமும்
நாட்டை திருப்பிக் கேட்டவர்களுக்கு
கல்லடி தண்டனையும் இங்கு மட்டும் தான்!

மெல்லிய நீர் படலம்
என் விழி ஓங்களில்
அதற்குள் சக்கர நாற்காலி
என் பக்கம் வந்திருந்தது
அதன் பெயர் பெற்றோலாம்!

என்னுள் எல்லாம் தீர்ந்து
விட்டதென சொன்னாலும்
நம்பத் தயாராயில்லை மக்கள்
நம்பிக்கை என்பது பெரிய ஆயுதம்
அது தலைவன் மேல்
அற்றுப் போனது அவர்களுக்கு!

என்னிடமும் கஜானா தீர்ந்திருந்தது
இடையிட்டது காபி கப்
ஞாபகப்படுத்திக் கொண்டேன்
அதன் பெயர் பணம் என்று
அண்டை நாடுகளிடம் கையேந்த
கூச்சம் தடுத்தது
இவன் இருந்தவரை
சமாளித்திருந்தேன் தான்
காபி கப்பின் பார்வை போன திசையில்
முதியவர் நின்றிருந்தார்
அவர் அந்நியச் செலாவணியாம்!

எல்லாம் இணைந்து நானானேன்
கரகர குரல் கொஞ்சம்
நைந்து ஒலித்தது உண்மை தானா?
அது சொல்லாமலேயே
எனக்கு புரிந்து விட்டது
அது அதாவது அதன் பெயர்
நெருக்கடியாகத் தான் இருக்குமென்று!

வேலை இருந்தால் பெற்றோல் இல்லை
பெற்றோல் இருந்தால் பணமில்லை
பணமிருந்தால் பொருட்கள் இல்லை
மக்களின் அன்றாட வாழ்க்கை
அதளபாதளத்திற்குள் இறங்கிக்
கொண்டிருப்பது மட்டும்
படிக்காத பாமரனுக்குக் கூட
புரிந்திருக்க வேண்டும்!

கைக் கொடுத்து தூக்கி விட
பக்கத்தில் இருப்பவனே தூக்கி
விடப்படும் நிலையிலிருந்தால்
தூக்கி நிறுத்த ஒருவன்
இருக்க வேண்டுமல்லவா?
ஆனால் இல்லை!

இலங்கையின் அவலம்
நட்புப் பகை நாடுகளுக்கு
கேலி கூத்தாகிப் போக
மக்கள் தான் எழுந்து
நிற்க வேண்டியதாயிருக்கிறது
எழுவோம்!!!
எழுந்து தேசம் காக்க
என் பேனா முனை
முதல் சமர்ப்பணமாகட்டும்!

இத்தனைக்கும் நான்
ஓர் இலங்கை குடிமகன்!!!



# CURRENT ECONOMIC CRISIS AND ITS IMPACT



**M.A.M. SHAKIR** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

Contemporarily Sri Lankan economic crisis resulted in great hardship of the people and has pose the greatest challenges to the government.

Sri Lanka is currently experiencing an economic crisis which continues with high inflation and sporadic demonstration throughout the country. Trouble is brewing on the island paradise.

Sri Lankans have fallen into poverty. They have no foods to quench their hunger. Sri Lanka's government declared the most severe economic crisis the nation has experienced in the food shortages. Government, however, denied that there were shortages of food. The country's energy minister admitted that the crisis could result in a financial catastrophe.

Most of the essential needs of people are lacking. There are no fuel, no medicine and critical surgeries are also being cancelled. If the same situation continuous, the economic crisis may cause to the death of Sri Lanka people. Because of the contemporary crisis there are daily power outages. Lots of major companies have stopped there works as a result of daily power cuts.

The absence of power is not a small thing. It causes lots of problems. It's unable to get safe and pre drinking water. This may cause very dangerous disease too. To build a good generation and to see a bright future, Education is must. But because of the economic crisis, there are many challenges to be faced when gaining education.

The exams, have been indefinitely postponed due to paper shortages in the entire country, mainly caused by a shortage of foreign reserves to purchase paper. Due to an insufficient supply of printing paper as well as ink ribbons, all the education stuffs have been postponed.  students in Sri Lanka will be affected by the financial crisis. Unfortunately, ongoing power outages have severely impacted online learning and teaching. Besides the pandemic, the power crisis has had a detrimental efffect on students.

The government of Sri Lanka should take steps to the recover of whole country once the scarcity of certain basic commodities come to an end. The government must also cooperate for economic growth of some areas severely struck by the ongoing crisis.

# What has happened to our motherland?



**I.F. SHAKIRA** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

Sri Lanka is one of the most beautiful and a famous country for a great record of the history. It is located in the middle of the Indian Ocean and also known as "Pearl of the Indian Ocean." It is famous for its nature and attractive places that grab all the tourists towards it. Tourism is one of the major incoming source of Sri Lanka. In addition, main economics sectors of the country are tea export, textile, rice production and other agricultural products. These sources gradually made the citizens life better and peaceful.

But it all came to an abrupt end, the people in Sri Lanka is facing economic crisis which has led to many other problems. What has happened to our motherland?

Everything went peacefully in Sri Lanka before pandemic arose. Covid 19 virus which was spotted in China it quickly spread all around the globe and everyone were forced to lock themselves at home. Therefore, Sri Lanka went under lock down and tourists were restricted to visit. During this time period, Sri Lankans were advised to stay at home and work from home. Most the business were shut down and an island wide curfew was imposed. This made country's economy fluctuate. It was quite difficult to cope up especially for the lower income people.

After things were settled this year people started to face some problems. The major problem is fuel and food shortage. Due to this, Sri Lankan economy got collapsed completely. Mismanagement of the Government and ban of fertilizer by the former President are the main reason for the collapse of economy. Not only the food and fuel shortage, people were asked to stay in long queues for hours and hours. It resulted to lose some innocent lives too. The country doesn't have enough fuel for essential services and the government state it doesn't have enough foreign currency to import. This situation caused petrol, diesel and all the goods' prices to rise rapidly.

People struggled with daily power cuts and shortage of medicines too. All the schools and Universities have closed and people have been asked to work from home. The people started to protest using taglines and hashtags that said #GoHomeGota. In the end, president resigned and fled from the country.

Even though after resigning, Sri Lanka people are experiencing worst situation. Still the goods' prices are high and people are facing more difficulties to spend their day to day life. It has become difficult to survive in Sri Lanka and the whole country is waiting for a better future.




# වත්මන් ශ්‍රී ලංකාවේ සමකාලීන අර්බුදය සහ ශ්‍රී ලාංකික ජනතාවගේ ජීවිතවලට එහි බලපෑම

**RUQAIYA MIQDHAM** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

වත්මන් ශ්‍රී ලංකාව ඉතාමත් ම අර්බුදකාරී තත්වයකට මුහුණ දෙමින් සිටියි. ඉන් ආර්ථික අර්බුදය සහ බලශක්ති අර්බුදය ප්‍රධානය.

ශ්‍රී ලංකාවේ දැනට පවතින අර්බුදකාරී තත්වය හමුවේ ජනතාව ඉතාමත් ම අභියෝගාත්මක තත්ත්වයකට මුහුණ දෙමින් සිටිති.

පසුගිය මාස කිහිපය තුළ ශ්‍රී ලංකාවේ උත්සන්න වෙමින් තිබෙන ආර්ථික අර්බුදය පිළිබඳ කලාපීය සහ ජාත්‍යන්තර මාධ්‍යවල අවධානය යොමු විය. මාධ්‍ය ආවරණයන්ගේ අවධානය යොමුව තිබුණේ විදේශ ණය බර, බලශක්ති අවශ්‍යතා සපුරා ගැනීම සඳහා උවමනා කෙරෙන විදේශ විනිමය සංචිත හිඟවීම ආදී වූ අර්බුදයේ ප්‍රකාශිත ලක්ෂණ කෙරෙහි ය.

.

රටේ වත්මන් අර්බුදයට හේතු වී ඇත්තේ විදේශ විනිමයෙහි ඇති වූ හිඟය වන අතර ඉන් අදහස් වන්නේ ප්‍රධාන ආහාර ද්‍රව්‍ය සහ ඉන්ධන ආනයනය සඳහා ගෙවීමට තරම් රටේ ආර්ථිකය සවිමත් නොවන බවයි.

ශ්‍රී ලංකාවේ ප්‍රධාන ආර්ථික අංශ වන්නේ සංචාරක කර්මාන්තය, තේ අපනයනය, ඇඟලුම් කර්මාන්තය, වී නිෂ්පාදනය සහ අනෙකුත් කෘෂි නිෂ්පාදන යි. ඉහත කී අංශවලට අමතරව විදේශ රැකියා නියුක්තිකයන් මගින් විදේශ විනිමය සඳහා ඉහළ දායකත්වයක් ලැබෙයි. එහිදී ප්‍රධාන වශයෙන් මැද පෙරදිග රටවල රැකියා නියුක්තිකයන් සදහන් කළ හැක. මෙම සම්පත් නිසි පරිදි කළමනාකරණය නොකිරීම රටේ ආර්ථිකය පිරිහීමට හේතු වේ.

දේශපාලන ස්ථාවරත්වයක් නොමැති වීම රටේ අර්බුදකාරී තත්වයකට ප්‍රධාන හේතුව යි. එපමණක් නොව අධික පරිභෝජනය සහ නාස්තියත් ආර්ථිකය පිරිහීමට විශාල වශයෙන් බලපා

ඇත. මිනිසා තමාගේ අවශ්‍යතාවලට වඩා භාණ්ඩ මිලදී ගැනීමත් නාස්තියත් ආර්ථිකය පිරිහීමට විශාල වශයෙන් බලපා ඇත. මිනිසා තමාගේ අවශ්‍යතාවලට වඩා භාණ්ඩ මිලදී ගැනීමත් ඒවා නාස්ති කිරීමත් නිසා රටේ පවතින සම්පත් අධික වශයෙන් පිරිහීමකට ලක් වේ.

දැනට ඇති සීමිත සංචිත ප්‍රමාණවත් අයුරින් කළමනාකරණය කිරීම තුළින් අර්බුදය තවදුරටත් උග්‍ර වීම වලක්වා ගැනීමට ඉතා වැදගත් වේ.

මෙම තත්වය යටතේ ලංකාවේ ආර්ථික විද්‍යා සංගම් තුන නියෝජනය කරන ආර්ථික විද්‍යාඥයින් රජයෙන් ඉල්ලා සිටින්නේ, දැනට ඇති සීමිත සංචිත ප්‍රමාණය අත්‍යවශ්‍යය ආහාර, ඖෂධ, ඉන්ධන සහ කෘෂිකාර්මික කාර්මික සේවා සඳහා අවශ්‍ය යෙදවුම් ආනයනය කිරීමට පමණක් භාවිත කරන ලෙසයි.

රටේ බහුතර ජනතාවගේ දෛනික ජීවිතය අඩාල කරන වර්තමාන ආර්ථික අර්බුදය දිනෙන් දින උග්‍ර වෙමින් පවතින අතර, දහස් සංඛ්‍යාත ජනතාව දුප්පත්කමේ ආගාධයට ඇද දමමින් සිටියි. මෙවැනි අර්බුදකාරී තත්ත්වය හමුවේ රටේ ජනතාවගේ වගකීම සාමූහිකව ප්‍රශ්නවලට විසඳුම් සෙවීම යි.

# අන්ධකාරයට නැතිද නිමක් ?



M.A.M. SHAKIR 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

" කු " යන කුසගින්නටත්
" වි " යන විරැකියාවත්
" ණ " යන ණයටත්
මුහුණ දෙන සිත් දහසක්

මුතු ඇටය ලෙස නම් ලැබුවත්
නැතිනේ දැන් වටිනාකමක්වත්
වට වූ ස්භාවයවත්
රසවිදින මනසක් අද නැතත්

කන්න බොන්නවත් නැතිවත්
ලෙඩට නැහැ අද බෙහෙතක්වත්
බිඳුණු හදවත් දහසකුත්
පතනුයේ යහ ජීවයක්

කිරි කැටියන් පා තබන සතුටත්
නැතිනේ මාපිය මුහුණෙත්
ජීවය බබළන්නවත්
නැතිනෙ අද නිසි මගක්

හිමිකම් නැති වී ගියත්
කතා කරනු බෑ අද කිසිවක්
වැරදි කිසිවක් නැතිවත්
දඬුවම් ලබනවා අද දහසක්

නොපැතු මේ අන්ධකාරයත්
නොසිතු මේ දුක් ජීවයත්
නැතිව යන දවසක්
දකිනු ඕනා සැනකින්!!



# ලංකාවේ ආර්ථික අර්බුදය හමුවේ ප්‍රජාතන්ත්‍රවාදී ජනතාව

**FATHIMA NIHLA** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

ශ්‍රී ලංකාව යනු ලෝකයේ සංවර්ධනය වෙමින් පවතින, තුන්වන ලෝකයේ රටවල් අතරට අයත් වන තවත් එක් රටකි. සංවර්ධනය වෙමින් පවතින ඕනෑම රටක් සේම ශ්‍රී ලංකාවට ද තම සංවර්ධනය කරා ළඟා වීමේ ගමනේදී විවිධ දුෂ්කරතාවන්ට මුහුණ දීමට සිදු විය.එහෙත් එම සෑම දුෂ්කරතාවක්, අපහසුතාවක් මධ්‍යයේ වුවද ශ්‍රී ලංකාව තම ඉදිරි ගමන නොකඩවා සිදුකර ගෙන ගියේ කෙදිනක හෝ සංවර්ධිත රටක් බවට පත් වීමේ අභිලාශයෙනි. එහෙත් කනගාටුදායක ලෙස වර්තමානය වන විට ශ්‍රී ලංකාව දැඩි ආර්ථික අර්බුදයකට ලක් වී ඇත.ආර්ථික විද්වතුන් පෙන්වා දෙන්නේ ශ්‍රී ලංකාවට මෙම අර්බුදයෙන් ගොඩ ඒමට නම් සැලකිය යුතු කාලයක් ගතවනු ඇති බවයි. අර්බුදයට හේතු වූයේ පාලකයන්ගේ නොසැලකිලිමත් ක්‍රියාකාරකම්, කඩාකප්පල්කාරී හැසිරීම් සහ මංකොල්ලකාරී ක්‍රියාවන් නිසා බව ජනතාව හඬ නගති. මෙයට අමතරව ලංකාව තුළ මෙවන් තත්ත්වයක් උද්ගත වීමට හේතු වූ තවත් එක් කාරණයක් වන්නෙ මෑතකදී මුළු ලෝකයටම තර්ජනයක් වූ කොවිඩ්-19 වෛරසයයි. කොවිඩ්-19 හමුවේ ලෝකයේ සෑම රටක්ම පාහේ සම්පූර්ණයෙන් වසා දැමීමත්,සංචරණ සීමා පැනවීම හේතු කොට ගෙනත් බොහෝ රටවල් වල ආර්ථික කටයුතු සම්පූර්ණයෙන්ම අඩාල විය.මෙම තත්වය හමුවේ ලංකාවේ ආර්ථිකයේද අවපාතයක් ඇති වී ලංකාව ලෝකයේ උද්ධමනය ඉහලම රටවල් අතුරින් එක් රටක් බවට පත්වීමට ඉතා කෙටි කාලයක් පමණක් ගත විය.උද්ධමනය ඉහළ යාමත් සමගම එදිනෙදා ජීවන වියදම් දරා ගැනීමට නොහැකි වූ ජනතාව මැසිවිලි නගමින් පාරට බසින්නට වූහ. ඉහළ ගිය උද්ධමනය හමුවේ රට තුළ භාණ්ඩ සඳහා දැඩි හිඟයක් ඇතිවිය.රට තුළ ඇති වූ ආහාර හිඟය නිසා ආහාර සඳහා ද ජනතාවට පෝලිම් වල රැඳී සිටීමට සිදු වූ අතර අහාර පානවල මිල ජනතාවට දරාලැනීමට නොහැකි තත්වයකට ඉහල ගොස් තිබුණි. කුලි වැඩ කරගනිමින් තම ජීවිකාව සකසා ගත් මිනිසුන් හාමතේ කෑ ගසන්නට වූ අතර මධ්‍යම පාන්තිකයො මුදල් අතැතිව සිටියත් අවශ්‍ය බඩුබාහිරාදිය රටෙහි සීමිත වීම හේතුවෙන් දැඩි ලෙස දුෂ්කරතාවලට මුහුණ දුන්හ.

ඉන් අනතුරුව ආර්ථික අර්බුදය හේතුවෙන් ලංකාව තුල දැඩි ඉන්ධන හිඟයක් ඇතිවිය. ඉන්ධන ආනයන කරන සමාගම්වලට මුදල් ගෙවීම් අතපසු කිරීම හේතුවෙන් ඉන්ධන ලබාදීම එම සමාගම් විසින් වර්ජනය කරන ලදී. මේ හේතුවෙන් ඉන්ධන සඳහා රට තුළ දැඩි ඉල්ලුමක් නිර්මාණය වී මුලු රටම එක තැන නතර වන්නට විය. ත්‍රී රෝද රථ රියැදුරන් ඇතුළු අනිකුත් ඉන්ධන භාවිතා කරන්නන්ට සිදුවූයේ තම දවසින් භාගයක් ම ඉන්ධන පෝලිම් වල ගෙවා හැරීමටයි. මෙම අර්බුදය කෙතරම් උත්සන්න වූවා දැයි පවසනවා නම් ඉන්ධන පෝලිම් වලදී මිනී මැරීමට තරම් මිනිසුන් සාහසික වූහ. ඉන්ධන හිඟය හේතුවෙන් නිතිපතාම විදුලි කප්පාදු කිරීම් සිදු කෙරුණු අතර සාමාන්‍ය ජනතාවට තම දවසින් වැඩි කාලයක් අඳුරේ ගෙවා දැමීමට සිදුවිය. කුඩා දරුවන් සහ වැඩිහිටියන් සිටින නිවැසියන්ට මෙම තත්ත්වය තත්වය ඉතාමත් දුෂ්කර විය. සම්පූර්ණයෙන්ම අඩාල වූයේ පාසල් පැමිණීමට පවා සිසුන්ට අවශ්‍ය කරන ඉන්ධන පහසුකම් නොතිබීම හේතුවෙනි. කුඩා දරුවෙකුට තමා ආස කරන කෑමක් පවා කෑමට නොහැකි තරම් උද්ධමනය ඉහළ යන්නට විය. ඉන් අනතුරුව රට පුරාම ගෑස් හිඟයක් ඇති වී ගෘහණියන්ට සිදුවූයේ දර ලිපෙන් ආහාර පිසීමටයි. ලංකාවට විශාල වශයෙන් ආදායමක් උපයාදෙන හෝටල් කර්මාන්තයේ පවා මෙම ගෑස් හිඟය හේතුවෙන් වසා දැමීමට සිදුවිය. ලාංකිකයන්ට කුප්පි ලාම්පුවෙන් එලිය ලබා ගැනීම සහ දර ලිපෙන් ආහාර පිසීම යනාදිය මීට සියවසකට පෙර ලංකාව තිබූ තත්වය ආවර්ජනය කරන්නට විය. මෙම තත්ත්වය තුළ දී තරුණ තරුණියන්ට තම අවාසනාවන්ත අනාගතය මැවී පෙනෙන්නට වූ අතර මෙහිදී ඔවුන් දැඩි ලෙස බියට පත්වූයේ තම අනාගතය අඳුරක්ම වනු ඇතැයි සිතාය. නොපැහැදිලි අනාගතය සහ දැඩි ආර්ථික අපහසුතා හේතුවෙන් ජනතාව පිළියමක් ඉල්ලා අරගල කරන්නට වූහ. මෙම තත්ත්වය තුළ දී ලංකාව ඊළඟ ඉතියෝපියාව වනු ඇතැයි බිය වූ ජනතාව මෙම තත්ත්වයෙන් ලංකාව ගොඩනැගීම සඳහා තමන් එක්ව පාලකයන්ට විරුද්ධව සටන් කළ යුතු යැයි උද්ඝෝෂණ කරන්නට වූහ.

ජනතාවට තම එදිනෙදා අවශ්‍යයතා සපුරා ගැනීම සඳහා දිගු පෝලිම් වල රැඳී සිටීමට සිදු වූයේ රට තුළ භාණ්ඩ සඳහා ඇතිවූ දැඩි හිඟය හේතුවෙනි. ඔවුන් එහිදී පෙන්වා දුන්නේ මෙම අර්බුදයට සම්පූර්ණයෙන්ම හේතුවූයේ පාලකයන් වන බවයි. පාලකයන්ගේ අදූරදර්ශී ක්‍රියා කලාපයන් නිසා ශ්‍රී ලංකාවට මෙවන් ඉරණමක් උද්ගත වූ බව පවසමින් පාලකයන් වහාම පාලනයෙන් ඉවත් විය යුතු බවට ජනතාව උද්ඝෝෂණ කරන්නට වූහ. උද්ඝෝෂණ රැල්ල කෙතරම් බලවත් වූයේ දැයි පවසන්නේ නම් පාලකයන් රටින් පිටව පැන යන තත්වයක් උදා වූයේ ජනතා පරමාධිපත්‍යයට වඩා ඉහළ බලයක් ලොව නොමැති බව ලෝකයාටම පසක් කර දෙමිනි. අද වන විට අර්බුදය යම්තාක් දුරට සමනය වී ඇතත් ලංකාවට පෙර සිටි තත්ත්වයට පැමිණීමට නම් ඉතා දිගු කාලයක් යනු ඇත. ලංකාවට උද්ගතවී ඇති මෙම අර්බුදකාරී තත්ත්වය තුරන් වී ලංකාව පෙර මෙන්ම ආර්ථික ව ම ආර්ථික වශයෙන් සෞභාග්‍යමත් වූ රටක් බවටත් පත් වේවායි යන්න සියලුම ලාංකිකයන්ගේ හෘද්‍යාංගම පැතුමයි.

**M.G.J. NISHA** 2ND YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

# කඳුළට නැතිද තිතක් ?




ඉන්දියන් සාගරයෙන් වටවූ මුතු ඇටයක්නේ
ස්භාවයෙන් බර වූ සුන්දර රටක්නේ
අන්‍ය රටට ඇස ගැටුණු බිමක්නේ
ඇයිද ඉතින් වටිනාකම නොතේරුනේ

ණයෙන් බරවූ සිතට නැත නිදහසක් අනේ
ආර්ථිකය කඩා වැටී ජන සිත් දැන් දුකින් අනේ
සාගින්නෙන් දුක් විඳිනා හදවත්නේ
රටක් පුරා දැන් පිරී ඉතිරෙන්නේ

පෙර නොවූ විරූ ගැඹුරු අර්බුදයක්නේ
නොසිතූ ලෙසින් අද ලක් මව මුහුණ දෙන්නේ
ලෙඩට දුකට බෙහෙතක්වත් නැතුව අනේ
එහාමෙහා අද මිනිසා ඇවිදින්නේ

විරැකියාව අද මහ තර්ජනයක්නේ
දැනුම් මගෙහි වර්ධනයටද තිතක්නේ
නව පරපුරේ ජීවිත බැබළ වීමටත් නොහැකිවනේ
ජන සිත් අදත් කඳුලෙන් කැගසන්නේ....

ඉතින් නැතිද මේ කඳුලට තිතක් අනේ...



# الأزمة الحالية في سريلانكا وتأثيرها على المجتمع

**J.U.M. NUSKY** 1ST YEAR
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

تقع جمهورية سريلانكا أو جزيرة سريلانكا (بالإنجليزيّة:Sri Lanka) في قارة آسيا، واسمها الرسمي جمهورية سريلانكا الديمقراطية الاشتراكية. هي دولة جزرية تقع في شمال المحيط الهندي جنوب شبه القارة الهندية، في جنوب آسيا، وهي أيضا دولة ذات إرث حضاري عريق، يمتد لأكثر من ثلاثة آلاف سنة، وذاع صيتها بين بلدان العالم بفضل موقعها الجغرافي في ملتقى الطرق البحرية الرئيسية.

وقد كانت جزيرة سريلانكا تحتلّ المرتبة الأولى بين دول جنوب آسيا من حيث جودة الحياة الاجتماعيّة، وذلك نتيجة للنمو الاقتصادي المستمر، والانتقال من اقتصادٍ ريفي إلى اقتصاد حضري، وانخفاض كبير في عدد الفقراء، حيث سجّلت سريلانكا في العقد الماضي نمواً مستقراً من جانب حالتها الاقتصادية، لأن معدل النمو الاقتصادي في الفترة ما بين ٢٠١٠سنة م و ٢٠١٨م بلغ النسبة ٥.٦٪، كما ارتفعت حصة الفرد من الدخل المحلي الكلي ٤,١٠٢ دولار سنوياً لعام ٢٠١٨م، وبذلك كانت سريلانكا تعدّ بلداً متوسط الدخل.

ولكن من الأسف الشديد أن سريلانكا شهدت ارتفاعًا حادًا في الدين الخارجي مما يثقل كاهل البلد ويخنق الشعب، ولا سيما ارتفع الدين إلى ٤٢,٩٪ من الناتج المحلي الإجمالي للبلاد بحلول سنة ٢٠١٩، وجاء كوفيد ١٩ مازاد الوضع الاقتصادي بسريلانكا سوءً وتعقيدًا، والذي أدى إلى أزمة اقتصادية حادة سيطرت عليها، وبالتالي بحلول سنة ٢٠٢١ ارتفع الدين الخارجي إلى ١٠١٪ من الناتج المحلي الإجمالي للدولة مما تسبب في انهيار اقتصادي شديد.

ويعاني الشعب السريلانكي أنواعا من المشكلات والتحديات نتيجة ما حل بالبلاد من الأوضاع السيئة الخطرة. ويبدو أن هذه الأزمة ستطرد سريلانكا لعدة من السنوات القادمة. **وقد كان شعب سريلانكا يواجهون عدةً من المشكلات منذ الاستقلال عام ١٩٤٨ مثل أعمال العنف ضد الشعب الهندوسي وضد المسلمين وحركات التمرد اليسارية وعدم وجود الوظائف الشاغرة والأزمات السياسية، والاقتصادية، والصحية، وغيرها.**



## الأزمة الغذائية

حاليا، نلاحظ أن الرواتب تتزايد بوتيرة بطيئة بينما النفقات تتزايد بشكل كبير، وهو مما يؤدي إلى عدة من المشاكل الاقتصادية. ولقد تحولت الحالة بسريلانكا من أزمة اقتصادية إلى أزمة الحياة البشرية، تمكننا الملاحظة أن الناس يواجهون حاليًا التحديات الهائلة بسبب النقص في المواد الاستهلاكية مثل الغذاء والوقود والأدوية الأساسية، إضافةً إلى الزيادة الهائلة في أسعار المواد الغذائية وتعليق عمليات المستشفيات وتجميد الاستثمارات.

علاوةً على ذلك، تواجه الحكومة السريلانكية عدةً من المشكلة في استيراد المواد الأساسية بما في ذلك المواد الغذائية من الدول الأجنبية بسبب انخفاض احتياطيات النقد الأجنبي، وبالتالي نلاحظ أن هناك نقصًا حادًا في المواد الغذائية في البلاد، وإذا استمر هذا الوضع الاقتصادي سيكون هناك نقص حاد في الغذاء. ويتوقف الناس أمام المحلات التجارية لشراء الأشياء الأساسية حتى أغمي عليهم بعد الانتظار في طوابير لفترة طويلة وقد يكون هناك خسائر في الأرواح، ويبدو أن هذه المشكلة أثرت على الناس في جميع القطاعات.

## الأزمة الكهربائية

وقد قامت الحكومة السريلانكية بإنفاق الأموال التي كانت تمتلكها للمشروعات من شأنها ازدهار الكماليات والتحسينات بدلاً من الاحتياجات الأساسية مثل مشاريع الطرق السريعة. ومع ذلك، اقترضت حكومة سريلانكا من صندوق النقد الدولي لزيادة احتياطياتها النقدية بدلاً من زيادة صادرات البلاد، مما تسببت إلى ارتفاع أسعار السلع الأساسية.

وكذلك الشعب السريلانكي يعاني صعوبات كبيرة بسبب انقطاع الكهرباء لعدة ساعات يوميا، مما يؤثر تأثيرا سلبيا على صناعات البلاد، وإذا بُذلت الجهود للحصول على الكهرباء خلال المولدات الكهربائية فإن ذلك يعوقّه نقص الوقود في البلاد، وأيضا لا يعمل كثير من محطات الطاقة الحرارية بسبب نقص ديزل. وينتظر أصحاب السيارات بسياراتهم ليلا ونهارا في الطوابير للحصول على الوقود، ومن الأسف أن بعض الأشخاص يستثمرون هذا الوضع ويقومون ببيع الوقود بأعلى قيمةٍ من ثمن المثل.

## الأزمة السياسية

ومن المشاكل التي يواجها الشعب الأزمة السياسية فتنفجر المظاهرات ضد الحكومة بسبب سياستها الاقتصادية الخاطئة، وبالإضافة إلى ذلك، أصبحت الأزمة الصحية أزمة خطرة، على نحو ما نلاحظ النقص الشديد في الأدوية الأساسية.

يجب على كل فرد من أفراد الشعب أن يبذل محاولاته لإعادة الدولة إلى حالتها المعتدلة، ونسأل الله الكريم المولى أن يخلص البلاد من أسر الأزمة الحادة.

STUDENTS' RESEARCH FORUM
FOR SOCIAL RESEARCHES 22/2023
FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA.

சமூக ஆய்வுகளுக்கான மாணவர் ஆய்வு மன்றம் 22/2023
இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடம்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.